IJRAR.ORG E-ISSN: 2348-1269, P-ISSN: 2349-5138

INTERNATIONAL JOURNAL OF RESEARCH AND ANALYTICAL REVIEWS (IJRAR) | IJRAR.ORG

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# மாபெரும் தமிழ்க் கனவு

**விசயநாதன் செ. இரா**

தலைவர்

தமிழ் மக்கள் முன்னேற்றப் பேரவை

## அண்ணல் அம்பேத்கா; 21 ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினா; எழுச்சி பெறுவதற்கான ஆய்வு அறிக்கை

எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டின் தாய்மொழியையும், வரலாற்று தொன்மங்களையும், நாகரிக பண்பாடுகளையும் பேணி பாதுகாப்பதும், வளர்த்தெடுப்பதும், அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துவதும் நூலகங்களும், நூலக கல்வியுமே ஆகும்.

நூலக கல்வியே உயா;ந்த கல்வி என்று மானுடம் போற்றும் மாமேதை அம்பேத்கர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியினை இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் வாழ்க்கை முறையாக அமைந்திட திட்ட வடிவங்களை எடுத்துரைப்பதே இந்த ஆய்வறிக்கை.

அன்னை தமிழுக்கும், தமிழ் பெருமக்களுக்கும், தகைசால் தமிழர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் புனிதா;, தோழH;, தமிழர் ஐயா நல்லக்கண்ணு அவர்களுக்கும், தமிழ்நாட்டின் தலைமகன், தமிழின் மீதும், தமிழ் மக்கள் மீதும் பேரன்பு கொண்ட மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்> தமிழ்நாட்டின் தென்கோடியில் மேற்குத் தொடா;ச்சி மலை அடிவாரத்தில், செங்குள்ளகுறிச்சி என்ற குக்கிராமத்தை பூர்வீகமாக கொண்ட சென்னை வாழ் தமிழன்> **தமிழ்த் திரு. விசயநாதன் செ. இரா** ஆகிய சிறியவனின் வீர தமிழ் வணக்கங்கள்

முன்னுரை :

பள்ளிக்கல்வி மற்றும் உயா;நிலைக் கல்விகளோடு அதே காலகட்டத்தில் நூலக கல்வி என்னும் பகுத்தறிவு கல்வியும் பெறக்கூடிய சூழ்நிலையில் தான் ஒரு மனிதன் பெரும் அறிவு வளம் மிகுநதவனாக உயரிய பல்வேறு திறன் பாடுகளை பெற்றவனாக, பண்பாளனாக உயா;ந்து ஓங்கி வாழ முடியும் என்பதை மாமேதை அண்ணல் அம்பேத்கா; நமக்கு வாழ்ந்து காட்டி இருக்கின்றார். அவர் வாழ்ந்து காட்டிய அந்த உயா;ந்த வாழ்க்கை நெறியை பள்ளி மற்றும் உயா; கல்விகளை பயிலும் இன்றை இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் வாழ்க்கை முறையாக அமைத்திட வேண்டும் என்ற பேராவலினால் உந்தபட்டு நான் இந்த ‘அண்ணல் அம்பேத்கா; 21 ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினா; எழுச்சி” பெறுவதற்கான ஆய்வுப் பணியை மேற்கொண்டேன் என்பதனை தமிழ் மக்களுக்கு அறிவிப்பதில் பெரும் மகிழ்வு கொள்கிறேன். ‘தமிழ் எங்கள் உயா;வுக்கு வான்!” என பாவேந்தா; பாரதிதாசன் சொல்லிய வண்ணம்.

ஆயிரம் ஆயிரம் வருடங்களாக தமிழை பாதுகாத்து, பேணி வளர்த்த எண்ணற்ற தமிழ் பெருமக்களும், தமிழையும், தமிழரையும் தலைநிமிரச் செய்த பெருந்தகைகள் **தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி** அவர்களுக்கு இந்த "**மாபெரும் தமிழ் கனவு**" என்னும் **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான ஆய்வறிக்கை சமர்ப்பணம்.

முதுபெரும் தலைவர், தோழர். நல்லகண்ணு ஐயா அவர்களை அவர்களது இல்லத்தில் சந்தித்து நேரில் கலந்துரையாடிய போது நான் எனது "நூலகங்கள் மற்றும் நூலக கல்வி" பற்றிய ஆய்வினை மேற்கொள்ள போவது பற்றி தெரிவித்தேன். பெரும் மதிப்பிற்குரிய நல்ல கண்ணு ஐயா அவர்கள் எனது **"நூலகங்கள் மற்றும் நூலக கல்வி**" குறித்த ஆய்வினை விரிவாக முன்னெடுக்கும் படியாகவும் மேலும் 21 ஆம் நூற்றாண்டில் **"தமிழ் மொழி எழுச்சி"** பெறுவதற்கான வழிவகைகளை குறித்தும் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்றும் எனக்கு அன்புடன் கட்டளையிட்டார். ஐயா நல்லகண்ணு அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான ஆய்வினை 2023 ஜனவரி 16 ஆம் தேதி முதல் தொடங்கினேன். பெரியாரின் பகுத்தறிவு வழியிலும், கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்ட கலைத்துறையை சார்ந்தவரும், உதவும் கைகள் அறக்கட்டளையின் பொறுப்பாளரும், ஐயா நல்லகண்ணு ஐயாவின் செல்ல குழந்தையாக விளங்கும் இளைஞர் பகுத்ருத்தீன் பாய் அவர்கள் எனது இந்த ஆய்வு பணியை முன்னெடுப்பதில் ஆக்கமும், ஊக்கமும் தந்து உறுதுணையாக நின்றார்கள். என்பதை நன்றியுடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் தனித்தமிழ் இயக்க முன்னோடி, தமிழ் தேசியக் கவிஞர் பெருஞ்சித்திரனாரின் பேத்தியும், அவரது முதன்மை சீடர் மற்றும் மருமகனும் தமிழ் பேரறிஞருமான ஐயா இறைகுறருவனாரின் திருமகளும் ஆன உயர் நீதிமன்ற வழக்கறிஞர், தமிழ் திருமதி. அங்கயற்கண்ணி அம்மா அவர்களும், அவர்களது கணவர், "**எப்படியேனும் தமிழை முப்படி உயர்த்திடல் வேண்டும்**" என்ற மன உறுதியோடு தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக பணியாற்றி வரும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர், தமிழ் திரு. திருமலை தமிழரசன் அவர்களும், நான் இந்த ஆய்வு பணியை மேற்கொண்ட காலத்தில் வழி துணையாகவும், வழிகாட்டியாகவும் விளங்கினார்கள் என்பதை தமிழ் கூறும் நல் உலகத்திற்கு எடுத்துக் கூற நான் கடமைபட்டுள்ளேன்.

மேலும் இந்த ஆய்வுப்பணியை மேற்கொண்ட காலத்தில் நான் சந்தித்து கலந்துரையாடிய எண்ணற்ற தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், பிரசுரகர்த்தாக்கள், பல்வேறு நிலைகளில் உள்ள தமிழ் பெருமக்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் அனைவருமே எனது **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான ஆய்வு பணிக்கு வரவேற்பை அளித்ததுடன் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும், நமது வருங்கால தலைமுறையினருக்கும் மிக்க தேவையான வாழ்க்கையின் அடித்தளமான பெரும் விசயம் என்று எனக்கு ஊக்கமளித்து அவர்களும் அகமகிழ்ந்தார்கள்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் இந்திய துணை கண்டத்திலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக நூலகங்களுக்கு என்ற தனிச்சட்டம் 1948ல் (மெட்ராஸ் பப்ளிக் act 1948) நிறைவேற்றப்பட்டது. அன்று இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்களினால் ஜனவரி 29/1949 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு. ஏப்ரல் 1/1950 ல் நடைமுறைக்கு வந்தது. பொது நூலகங்களின் செயல்பாடுகள் தமிழ்நாடு கல்வித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாடு, மக்கள், மொழி மூன்றும் தொன்று தொட்டு ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வாழ்ந்து வந்த ஒரு இனத்தின் நிலைத்த அழியா தன்மைக்கு சான்றாகும். மொழியே அம்மக்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் கருவி. மொழி வளம் பெறுவதும், வறுமையுற்று சிதைவதும், அம்மொழி பேசும் மக்களின் எதிர்கால வாழ்வை நிர்ணயம் செய்யும் கால கணிதம் ஆகும். பல லட்சம் வருடங்களுக்கு முன் காலப்போக்கில் மனித பேரினம் ஹோமோ சேபியன்ஸ் பூமியில் பரவி நிலைத்து வாழ ஆரம்பித்தனர் மனிதனின் உணர்வு பரிமாற்றங்கள் தேவையின் காரணமாக காலப்போக்கில் வெவ்வேறு மனித இன கூட்டங்களில் ஆயிரக்கணக்கான பல்வேறு மொழிகள் பிறந்தன.

அவற்றுள் வடமொழி, சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தின், எபிரேயம் போன்ற மொழிகள் பேச்சு வழக்கில் அற்றுப்போய் பெயருக்கு அடையாள வடிவில் மட்டுமே உள்ளன. தமிழ் ,சீன மொழி போன்ற ஒரு சில மொழிகளே நிலை பெற்று வாழ்கின்றன. கிமு- 500 முதல் கிபி -100 வரையிலான முதற்ச்சங்க காலம், இடைச்சங்க காலம், கடைச்சங்க காலம், என பகுக்கப்பட்ட சங்க காலங்களில் தமிழ் மொழி பெரும் எழுச்சி பெற்றது பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் “ஆரியம் போல் வழக்கொழிந்து சிதையா உன் “சீரிளமை திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!”என்று பாடிய நம் பைந்தமிழ் மொழி தன் தமிழ் இன கூட்டத்தின் பேச்சு வழக்கிலும், எண்ணங்களை எழுத்து வடிவில் வடிக்கும் திறனுடனும் எழுத்து வடிவங்களை பார்த்து, உணர்ந்து, படித்து கையாளும் வழக்கத்திலும் இன்றளவும் நிலைத்து, கொழித்து வளர்ந்துள்ளது.

சில இனங்களின் வணிக பேராசை காரணங்களாலும், அரசியல் நாடு பிடிக்கும், நாட்டை விஸ்தரிக்கும் காரணங்களாலும் அமைந்த நாடுகள் சிதைந்து அழிந்து போயின என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. ஆனால் மொழி வழி இயற்கை எல்லைகளால் உருவான, கட்டமைக்கப்பட்ட மொழி வழி நாடுகள் நிலைத்து நிற்கின்றன என்பது யாவரும் அறிந்த உண்மை. ஒவ்வொரு தலைமுறையினரும் தனது எண்ணங்களையும், கருத்துக்களையும் பிரதிபலிக்க கூடிய எழுத்துக்களை தன் தாய் மொழியில் படித்து அனுபவிக்க கூடியதாக அந்த சமூகம் தொடர்ந்து இருத்திடல் வேண்டும். இது சமூகம் உயிர்ப்புடன் இருப்பதற்கு இன்றியமையாத அம்சமாகும். அதேபோல் படைப்பாளிகளும் நிகழ்கால தன்மையோடு தன் மொழியால் தன் காலத்தில் எழுத்து, படைப்பு என்ற தனித்தன்மையோடு படைப்பாற்றலை வெளிப்படுத்தும் போதுதான் அந்த சமூகமும், படைப்பாளியும் உலக அரங்கில் அங்கீகாரம் பெறுகிறார்கள்.

**தாய் மொழியில் படைப்புகள், தாய் மொழியில் எழுத்து வடிவம் தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டாலோ, அந்த சமூக மக்கள் தன் தாய் மொழியின் எழுத்து வடிவம் கண்டு உணர்ந்து கொள்ளும்நிலையில் தாழ்ந்துப்பட்டாலோ, தாய் மொழியின் , எழுத்து வடிவம் எழுதும் நிலையில் பிறழ்ந்து திரிபுபடும் நிலையிலோ, தாய்மொழி எழுத்து வடிவம் அழிந்து போகும் சூழல் ஏற்பட்டாலோ, அந்த மொழி இன சமூகம் அழிந்து பட்டதாக கருதப்படும்.**

“ஓர் இனமாக வாழ்கிறார்கள் என்பதற்கு அவர்களின் நிறமோ, பழக்கவழக்கங்களோ காரணமில்லை; அவர்கள் ஒரு மொழி பேசுவோராக இருப்பதுதான் காரணமாகும். எனவே மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம் எனலாம். மொழிதல் என்றால் சொல்லுதல் என்பதன் பொருள். பேச்சு மொழியே முதலில் தோன்றியது.

**“பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; ஆயினும் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்து கருதப்படும் மொழியாகும். இவைகளே அன்றி வேறுவகை மொழி நிலைகளும் உண்டு. எண்ணப்படுவதும், நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும்”**

என்று தமிழ் அறிஞர் மு. வரதராசனார், கூறுகிறார். எனவே மொழி என்பதைப் பேச்சு, எழுத்து, படிக்கப்படுவது, எண்ணம் என்றும் பல நிலைகளில் அறியலாம். ஒலிவடிவான குறியீடுகளைக் கொண்டது பேச்சுமொழி; வரிவடிவான குறியீடுகளைக் கொண்டது எழுத்து மொழி.

“மொழி என்பது பற்றிப் பேச, சிறிதும் அதற்கான அறிவோ, ஆராய்ச்சியோ, ஆற்றலோ அற்ற நான் “மொழி” என்பது குறித்துப் பேசத் துணிந்தது, மொழி தத்துவத்திலுள்ள என்னுடைய ஆசை மிகுதியின் பொருட்டேயாகும். நான் கூறப்போகும் தத்துவங்களை இலக்கண இலக்கிய ஆதாரங்களுடன் விளக்குவது என்பது எனது தகுதிக்கு மேற்பட்ட காரியம். அதற்கு வேண்டிய இலக்கிய இலக்கணங்களில் பாண்டித்தியமோ, ஆராய்ச்சியோ எனக்கில்லை. ஆராய்ச்சியாளர் மேற்கோள்களையும் என்னால் காட்ட இயலாது. எனக்குத் தோன்றிய என் அநுபவத்துக்கு எட்டிய விஷயங்களைத் தான் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லப் போகிறேன். அவற்றில் பெரும்பாலும், உங்களுக்குக் குற்றமாகப் படலாம். ஆகவே நான் கூறுவதை நீங்களும், உங்கள் அறிவையும், அநுபவத்தையும், மற்றும் இது விஷயத்தில், அநுபவமும் ஆராய்ச்சியும் உள்ள பெரியோர்கள் கருத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்கக் கூடியதை ஏற்றும் ஏற்கக் கூடாததைத் தள்ளியும் தெளிவு பெற வேண்டுகிறேன்”. **இது தந்தை பெரியாரின்** கூற்று. நான் தந்தை பெரியாரின் காலடி மண், பெரியார் தாசன், அம்பேத்கர் தாசன், நான் தமிழ் மீது கொண்ட பேரன்பினால் உந்தப்பட்டு இந்த ஆய்வு பணியை மேற்கொண்டேன். இந்த ஆய்வறிக்கையின் கருத்தாக்கங்கள் முழுவதும் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, ராமநாதபுரம், திருச்சி, நாமக்கல், சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் நேரடியாக சென்று ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மைய நூலகங்கள், சில கிளை நூலகங்கள், கிராம நூலகங்கள், அரசு பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் நான் மேற்கொண்ட கள ஆய்வின்போது கிடைத்த தரவுகள் மற்றும் எண்ணற்ற அரசு பொது நூலகங்களின் நூலகர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வங்கி மேலாளர்கள், அந்த மாவட்ட ஆட்சியாளர்கள், அந்த மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் இந்த மாவட்டங்களை சார்ந்த தமிழ் பெருமக்களை சந்தித்து பெற்ற கருத்தாக்கங்களின் கூட்டாக இந்த ஆய்வறிக்கை உருபெற்று உள்ளது. இந்த ஆய்வறிக்கையில் உள்ள பிழைகளை புறம் தள்ளி நல்லவற்றை எடுத்துக் கொள்ள பணிவுடன் வேண்டுகிறேன்.”

## மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் நூலகத்துறை வளர்ச்சிக்கான அரும்பணிகள்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் சென்னையில் ஆசியாவிலேயே மிகப் பெரிய பிரம்மாண்டமான அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கிதந்துதமிழுக்கு, தமிழ்நாட்டிற்கு பெருமை தேடிதந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மதுரையில் கலைஞர் பெயரில் ஒரு பிரம்மாண்ட நூலகத்தை உருவாக்கி தந்ததோடு ,திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் இந்த நூலகங்களுக்கு இணையாக ஒவ்வொன்றும் 300 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமான இரண்டு நூலகங்களை கட்டி எழுப்ப ஆணை பிறப்பித்துள்ளார் என்பது தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமை கொள்ளத்தக்க விசயமாகும். இந்தியாவிலேயே நான்கு பிரம்மாண்டமான நூலகங்களையுடைய மாநிலம் தமிழ்நாடு தான் என்பது நம் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு .முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின்

வரலாற்று சாதனை என்பதை காலம் என்றும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு அரசு கடந்த 3 ஆண்டுகளில் தமிழை வளர்தெடுப்பதற்கான முத்தான பணிகளை முன்னெடுத்துள்ளது. வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மொழியை ஊக்குவிப்பதற்காகவும், தமிழுக்கு பெருமை சேர்ப்பதற்காகவும், ஜெர்மன் கோலஜென் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைகள் தொடர்ந்து செயல்பாட்டில் இருப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 1 கோடியே 25 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேலும் அமெரிக்காவின் புஸ்ட்டன் பல்கலைக்கழகத்தில் நிரந்தர தமிழ் இருக்கையை ஏற்படுத்துவதற்கு இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் புதிய மும்பையில் தமிழ் சங்கம் அமைப்பதற்கு ரூபாய் 75 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புது டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தனித்தமிழ் துறையை உருவாக்குவதற்கு ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கியுள்ளார். மேலும் தமிழ்நாடு மாணவர்கள் மத்தியில் தமிழ் மொழி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு தமிழ் கூடல் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உலக தரத்தில் அமைத்துக் கொடுத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு நூலகத்துறை வளர்ச்சியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2021 மே மாதம் ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு இணையான

ஒரு பெரிய நூலகத்தை முதற் சங்கம் மதுரையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெயரில் கலைஞர் நூற்றாண்டு நூலகமாக வடிவமைத்து மக்களுக்கு அர்ப்பணித்துள்ளார். மேலும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சியிலும் பெரும் நூலகங்களை கட்டுவதற்கான திட்டம் பணிகளை முன்னெடுத்துள்ளார். வருடம்தோறும் தமிழ் திருநாள் சித்திரை முதல் நாள் அன்று திருவள்ளுவர் நாள் விழா தமிழக அரசால் கொண்டாடப்படுகிறது. அன்று தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் தமிழ் அறிஞர்களுக்கு விருது வழங்கப்படுகிறது. அந்த விருது ஒரு லட்ச ரூபாய் ரொக்க பணம் ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் அடங்கியது. மேலும் திருவள்ளுவர் விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, திரு.விக.விருது, கி. ஆ. பெ. விஸ்வநாதம் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெரும் தலைவர் காமராஜ் விருது ஆகிய விருதுகள் தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு தமிழ் அறிஞர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

மேலும் தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ. வே. சா. விருது, கம்பர் விருது, ஜி. யு. போப் விருது, உமரப் புலவர் விருது, தமிழில் கவிதை புனைவதற்கான முதலமைச்சர் விருது, இளங்கோவடிகள் விருது, தமிழ் செம்மல் விருது ஆகியவை தமிழ்நாடு அரசினால், தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட முதல்வர் அவர்கள் ஆவனம் செய்துள்ளார். மேலும் வருடம்தோறும் 33 பிரிவுகளில் தலைசிறந்த புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 30,000 ரூபாய் ரொக்க பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்களை வெளியிடும் புத்தக பதிப்பாளர் மற்றும் பிரசுரகர்த்தாவிற்கு ஒவ்வொரு புத்தகத்திற்கும் ரூ 10,000 பரிசாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழில் பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரை போட்டி ஆகியவை மாவட்ட அளவில் வருடம்தோறும் நடத்தப்படுகின்றன. இந்த போட்டிகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூ 10,000 ரொக்க பணமும், இரண்டாவது பரிசாக 7,000 ரொக்கபணமாகவும், மூன்றாம் பரிசாக ரூ 5,000 ரொக்கப் பணமாகவும் வழங்கி மாணவ, மாணவிகளிடையே தமிழ் மொழியை வளர்த்தெடுக்கும் பணியை தமிழ்நாடு அரசு செய்து

வருகின்றது. மேலும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கான மாநில அளவிலான பேச்சுப்போட்டி, கவிதை போட்டி, கட்டுரை போட்டி ஆகிய போட்டிகள் வருடம் தோறும் தமிழ்நாடு கல்வித்துறையினால் நடத்தப்படுகின்றன. இந்த போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசாக 15,000 ரொக்க பணமாகவும் இரண்டாவது பரிசாக 12,000 ரொக்க பணமாகவும் மூன்றாவது பரிசாக ரூபாய் 10,000 ரொக்க பணமாகவும் வழங்கப்படுகிறது. மேலும் பரிசு சான்றிதழ் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றன.

இளந்தமிழர் இலக்கிய பயிற்சி பட்டறை என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் இருந்து தமிழில் பேசுவதிலும், கதைகள், கவிதைகள் எழுதுவதிலும் ஆர்வமிக்க 800 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை தமிழ் அறிஞர்களாக ஆக்குவிப்பதற்கு வருடம் தோறும் 20 லட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மறைந்த தலைசிறந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களது அரிய புத்தகங்களை தேச உடமை ஆக்குவதற்கும், அவரது வாரிசுதாரரர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டங்களை தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ளது. பிரசித்தி பெற்ற தமிழ் அறிஞர்கள், வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் மற்றும் விருது பெற்ற தமிழ் அறிஞர்களுக்கு தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் பயணம் செய்து கொள்வதற்கு இலவச பேருந்து பயணசீட்டு வழங்கப்பட்டுள்ளது. **தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், ஆகிய தமிழர் புரட்சியாளர்கள் வழியில் தமிழ் மொழியை பேணி பாதுகாத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுள்ள திட்டங்களும், பணிகளும் பெரும் போற்றுதலுக்குரியவை.**

**எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்றும் தமிழ்!**

**தந்தை பெரியார்! பேரறிஞர் அண்ணா! முத்தமிழ் அறிஞர் கலைஞர்!**

1909 ஆண்டில் மகாத்மா காந்தி குசராத்தி இலக்கியக் கழகத்தின் மூன்றாம் ஆண்டு விழா மலரில் எழுதியுள்ள கட்டுரையில் "ஆங்கிலத்தின் மீது நமக்குள்ள பற்றுதலால் நாம் நம் தாய் மொழியைகீழ் நிலைக்கு கொண்டு வந்து விட்டோம். நம் மொழியை கேள்விக்குள்ளாக்குவதின் மூலம் நம்மை நாமே கேள்விக்குள்ளாக்கிக் கொள்கிறோம் என்று தாய் மொழியை பேணி பாதுகாப்பதின் இன்றியமையாத தேவையை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

28/05/1928 தந்தை பெரியார் ஈவேரா சமஸ்கிருதம் தவிர்த்து, தூய தமிழில் சுயமரியாதை, கல்யாணம் அருப்புக்கோட்டை அருகே சுக்கிலநத்தம் ஊரில் நடத்தி வைத்தார். இதில் நிறைய தமிழ் அறிஞர்களும் கலந்து கொண்டனர். 1930 ஏப்ரல் 21 ஆம் நாள் சென்னை மாநில உயர்நிலை பள்ளிகளில் இந்தியை கட்டாய பாடமாக்கி சென்னை மாகாண அரசு ஆணை பிறப்பித்தது. 1930 சூன் 10 நாள் சென்னை கத்திட்ரல் சாலையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா செந்தமிழ் உரை நிகழ்த்தினார் செப்டம்பர் 21 ஆம் நாள் அண்ணா கைது செய்யப்பட்டு நான்கு திங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

தந்தை பெரியார் ஈ.வே.ரா இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் முழு வீச்சில் ஈடுபட்டதால் 1938 திசம்பர் 5ஆம் நாள் கைது செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார். இக்காலகட்டத்தில் திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த 14 வயது சிறுவனான முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி கையில் தமிழ் கொடியை ஏந்தி தமிழ்மொழி காக்க இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

தாளமுத்து, நடராசன் என்ற இளைஞர்கள் தமிழ் காக்க சிறைச்சென்று உயிர் நீத்தனர். தமிழறிஞர்கள், தமிழ் பெருமக்கள் ஆயிரம் ஆயிரமாக தாய் மொழி காக்கும் போராட்டத்தில் சிறை சென்றனர்.

1940 பிப்ரவரி 19 ஆம் நாள் பெரியார் ஈ. வே. ரா சென்னை கோகலே மன்றத்தில் பேசினார். இந்தி திணிப்பை உடனடியாக விலக்கிக் கோரி சென்னை மாகாண அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். இரண்டு நாட்களில் பிப்ரவரி 21 ஆம் நாள் கட்டாய இந்தி திணிப்பை சென்னை மாகாண அரசு விலக்கிக் கொண்டது.முதல் மொழி போராட்டத்தில் முத்தமிழுக்கே வெற்றி கிடைத்தது. 1948ல் சூன் 20 ஆம் நாள் சென்னை மாகாண காங்கிரஸ் அரசு மீண்டும் இந்தியை கட்டாய படமாக்கி ஆணை பிறப்பித்தது. இரண்டாம் மொழிப் போராட்டம் வெடித்தது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழ் மொழி பாதுகாத்திட களம் கண்டனர்.1948 செப்டம்பர் 15 ஆம் நாள் திருவாரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி, தயாளு அம்மையார் திருமண நாள் “தமிழ் வாழ்க இந்தி ஒழிக” என்ற முழக்கம் தெருவில் ஒலிப்பதை கேட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மணப்பந்தலில் இருந்து வீதிக்கு வந்து ஊர்வலத்திலும் மறியல் போராட்டத்திலும் கலந்து கொண்டார்கள்.

1948 அக்டோபர் 23 ல் ஈரோட்டில் அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக சிறப்பு மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவும், தந்தை பெரியாரும் தமிழ்மொழி காக்க அறைகூவல் விடுத்தனர். ஆயிரக்கணக்கான தமிழறிஞர்கள், தமிழ் மக்கள் இந்தி எதிர்ப்பு போராட்டம் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் தலைமையில் முன்னெடுத்தனர் மாகாண அரசு கட்டாய இந்தி திணிப்பை நிறுத்திக் கொண்டது.

மீண்டும் இந்தியை பள்ளிகளில் கட்டாய படமாக திணிப்பதற்கு சென்னை மாநில அரசு முயற்சிப்பதை அறிந்து. 1949 செப்டம்பர் 17 ஆம் நாள் அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் தமிழரின் மொழி மற்றும் பண்பாட்டு உரிமைகளை காப்பதே தன் உயிர் மூச்சாக கொண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது.

1950 மே 2நாள் சென்னை மாகாணத்தில் பள்ளிகளில் மீண்டும் இந்தியை கட்டாய பாடமாக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்ற கழகம் இந்தி எதிர்ப்பு போராட்டம் தொடங்கியது. சூலை 18 அரசு ஆணை ரத்து செய்யப்பட்டது.

1950 சனவரி 26 ல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்பு சட்டம் இந்தியை ஆட்சி மொழி ஆக்கியது. 1950 சூலை 26 ஆம் நாள் கோவில்பட்டியில் கலைஞர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற தி.மு.க மாநாட்டில் ஒன்றிய அரசின் இந்தி ஆட்சி மொழி கொள்கையை கண்டித்து தீர்மானம் இயற்றப்பட்டது. அறிஞர் அண்ணாவும், கலைஞரும் ஆயிரம் ஆயிரம் தி.மு.க தலைவர்கள், தொண்டர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் 1950 முதல் 1967 வரை மூண்டெழுந்த பெரும் மாணவர் போராட்டமும் பெரியார், அண்ணா, கலைஞர் அவர்களும் திராவிட முன்னேற்ற கழகமும் முன்னெடுத்த போராட்டங்களும் தமிழ்நாட்டில் இந்தி ஆதிக்கத்தை அழித்து ஒழித்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு நாடு முழுவதும் எழுந்த போராட்டங்களை தொடர்ந்து. 1956 நவம்பர் 1ஆம் தேதி மொழி வாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இதனால் 9 மாநிலங்களாக இருந்த இந்தியா 14 மாநிலங்களாகவும், 6 யூனியன் பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டது. தமிழ்நாடு தனி மாநிலமாக அமைந்த பின்னரும் இந்திய ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு கொள்கையினால் பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் தமிழைக் காத்திட தளராது போரிட்டார்கள். 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி கட்டிலில் அமர்ந்த பின் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில்

1. சென்னை மாகாணம் என்று இருந்ததை “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டி சட்டம் இயற்றினார்.

2. செந்தமிழை தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகவும் ஆங்கிலம் தொடர்பு மொழி என்றும் இரு மொழிக் கொள்கை வகுக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் அலுவல் மொழியாக தமிழும் ஆங்கிலமும் ஏற்பு ‘ஆகாஷ்வாணி’க்கு ‘வானொலி’ என பெயர் மாற்றம். பள்ளி NCC அணியில் இந்திச் சொற்களை நீக்க ஆணை. ‘செக்ரடரியேட்’ பெயர் தலைமைச் செயலகம் என மாற்றம். அரசு முத்திரையில், ‘கவர்ன்மென்ட் ஆஃப் மெட்ராஸ்-’க்கு பதிலாக தமிழ்நாடு அரசு, சத்யமேவ ஜெயதே-க்கு பதிலாக வாய்மையே வெல்லும். சென்னையில் 2வது உலகத்தமிழ் மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிப்பு. பேருந்துகளில் திருக்குறள் பொறிப்பு. சென்னையில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனுக்கு சிலை அமைப்பு. ஸ்ரீ எனும் சமஸ்கிருத சொல்லிற்கு பதிலாக திரு என்று தமிழ்ப்பெயர் பயன்படுத்துவதை வழக்கத்தில் கொண்டு வந்தார்.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் 20/12/2002 கலைஞரின் தொல் காப்பிய பூங்கா என்ற நூலின் உயர்வு குறித்து அணிந்துறையில் கலைஞரின் தொல்காப்பிய மலர்கள், தெவிட்டாத தமிழ் இன்பம் தருகின்றன எனவும், தொல்லுலகில் தோன்றிய மூத்த நம் தமிழ் குடியினர் வாயொழியால் குறிப் புணர்த்தி பேச தலைப்பட்ட நாள் முதல், ஒரு மொழியாக வடிவு கொண்டு வளர்ந்த உலக மொழிகளின் தாய் நம் தமிழ் மொழி எனவும், முதிர்ந்த நாகரிக மேன்மை காட்டும் தொன்மை இலக்கிய உயர் மொழி செம்மொழி என குறிப்பிட்டுள்ளார். கலைத்துறையில், நாடகத்தில், திரைக்கதையில், எழுத்துலகில், சிறுகதை, புதினம் வரைவதில், பாடல்கள் தீட்டுவதில், கலைஞரின் தமிழ் புலமையை சுட்டிக்காட்டியுள்ளார். தமிழையே தமது மூச்சாகக் கொண்டு “தமிழ் வாழ நாம் வாழ்வோம் தமிழ் தாழ நாம் தாழ்வோம்” என்ற உணர்வுடன் தமிழுக்கு தொண்டு செய்வதை தமது வாழ்வின் குறிக்கோளாக கொண்டவர் கலைஞர் என உரை செய்துள்ளார்.

கலைஞர் தீட்டிய சங்கத்தமிழ், பூம்புகார், குறலோவியம் , சிலம்பு, தொல்காப்பிய பூங்கா இன்னும் எண்ணற்ற தமிழ் நூல்கள் தமிழன்னையின் மணி மகுடங்களாக திகழ்கிறன. கலைஞர் தமிழ் மறையோன் வள்ளுவனுக்கு தமிழ்நாட்டின் வடகோடியில், சென்னையில் அமைத்திட்ட வள்ளுவர் கோட்டமும், தென்கோடி கன்னியாகுமரி கடற்பாறையில் நிறுவிய வானுயர்ந்த வள்ளுவன் சிலையும், தமிழையும், தமிழர் வரலாற்றையும் காலத்தால் அழியாது பாதுகாக்கும் சின்னங்களாகும்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் மேற்கொண்ட திராவிட இயக்கத்தின் பன்னெடுங்கால தொடர் முயற்சிகளால் தமிழ் எழுத்து துறை, பேச்சுத் துறை, இலக்கியம், நாடகம், கவிதை, திரைக்கதை, வசனம், புதினங்கள், பகுத்தறிவு, ஆகியன மறுமலர்ச்சி அடைந்து மணம் பரப்புவதை அறியாதார் இலர். பெரியார் திருக்குறளுக்கு உரை எழுதி அதை தாமே பதிப்பித்து மக்களிடம் கொண்டு சேர்த்தார். பெரியாரும், அண்ணாவும் திருக்குறள் மாநாடுகளையும், முத்தமிழ் மாநாடுகளையும் நடத்தியதாலும், தூய தமிழில் தொடர்ந்து பேசியும், எழுதியும் வந்ததாலும் திருக்குறளும், சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரமும் தமிழ் மக்களிடம் நன்கு பரவின.

கலைஞர் அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிய தொல்காப்பிய பூங்காவின் செப்டம்பர் 1/2022 கோவாவில் இருந்து எழுதிய “பூங்கா புகு முன்” என்ற முன்னுரையில் இன்று முகிழ்த்துள்ள சமுதாய முற்போக்கு பேரொளியில் சங்க காலத்திற்கு முன்பு தமிழ் மக்கள் கடைப்பிடித்த வாழ்க்கை முறை பிற்போக்கு நிழல் படிந்தது போன்ற தோற்றம்

காணப்படும். ஏற்க இயலுமா ? என்ற கேள்வி எழக்கூடும். இன்றைக்கு திருத்தம் செய்து கொள்ளப்பட வேண்டிய பழைய பண்பாடுகள் வாழ்க்கை முறைகள், ஆடவர் பெண்டிர் உரிமைகள் பல இருப்பினும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நமது சமூக அமைப்பின் பண்பாட்டு அடிப்படையை அறிந்து கொள்ளுவதை தொல்பொருள் ஆய்வில் காட்டும் ஆர்வம் போன்றது எனக் கொள்ளுவதில் என்ன தவறு இருக்க முடியும்?" என குறிப்பிட்டுள்ளார்.

"அணைகள் கட்டுகின்றோம், ஆலயங்கள் எழுப்புகின்றோம், அவை புதிய பாணியில் நவீன மிடுக்குகடன் காட்சியளித்து நம்மை கவர்ந்த போதிலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ராஜா ராஜ சோழன் எழுப்பிய தஞ்சை கோவிலும், கரிகாலன் சோழன் எழுப்பிய கல்லணையும் புறந்தள்ள கூடியவைகளாக இல்லையே" என்று கூறுவதின் வாயிலாக தமிழரின் தொன்மையும், தமிழின் நுண் தொன்மங்களையும் தமிழர் அறிந்து தெளிய வேண்டும் என்று முத்தமிழர் கலைஞர் எடுத்துக்காட்டி நம்மை வழிநடத்தியுள்ளார். திராவிடர் கழகத் தலைவர் அய்யா கி. வீரமணி அவர்கள் அக்டோபர் 1/2004 ல் பெரியார் களஞ்சியம் பதிப்புரையில் "தமிழருக்கு கண்ணும், காதும், தன்னறிவும், மனவலிவும் தந்தான்" என்றும் கடன் பட்ட தமிழ்லுகம் நன்றி சொல்லும்! காவியங்கள், கலைகள் அவன் பெருமை பேசும்! என்று கூறி தந்தை பெரியாரின் தமிழ் தொண்டினை சிறப்பித்துள்ளார்.

பேராசிரியர் முனைவர் வேப்பம்பட்டு ப. ஆறுமுகம் அவர்கள் அறிஞர் அண்ணாவின் தமிழ் கொடை என்ற நூலில் அண்ணா தம் கைப்பட தமிழுக்கு எழுதிய விளிமொழிதொடர்கள் நாற்பதை நமக்கு அளித்துள்ளார்.

அண்ணாவின் இந்த தமிழ் அமிழ்தை தெளிவு பெறக் கற்றவரிடம் "தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் தம் உயிர் தந்தேனும் காத்திட உள்ள உறுதி உண்டாகும் என்பார் ஐயா ப. ஆறுமுகனார்."

**தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் பிற மொழி ஆதிக்கத்திலிருந்து நம் தாய்மொழி தமிழை காத்து தந்த தோடில்லாமல் தமிழை பேணி வளர்த்து எழுச்சி பெற செய்த பெருந்தலைவர்கள் ஆவார்கள். "எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ்" எனும் நிலையை உருவாக்கித் தந்த பெருந்தகைகள் இவர்கள். தூய இனிய பைந்தமிழில் பேச்சு, எழுத்து, படிப்பு, வாசிப்பு என்ற நடைமுறையை உருவாக்கி தந்து மொழி புரட்சி செய்த தமிழ் புரட்சியாளர்கள்.**

### பிற நாடுகளில் தகைசால் தமிழர்களின் தமிழ் வளர்ச்சி பணிகள்

உலகம் எங்கும் இருக்கும் தமிழர்கள் பெருமையும் பூரிப்பும் அடையும் அளவிற்கு சர்வதேசத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமெரிக்காவில் உருவாகியிருக்கிறது. இதை முனைந்து உருவாக்கி இருப்பவர் 'தமிழ் அமெரிக்கா தொலைக்காட்சியின்' பங்குதாரர்களில் ஒருவரும், படைப்பாளரும், பெருந்தமிழருமான தாழை இரா.உதயநேசன் ஆவார்.

இவர் தமிழகத்தில் வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியைச் சேர்ந்தவர் இவர். 'அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், தமிழ் வளர்ச்சிப் பணிகள், தமிழ் அமர்வுகள், இலக்கண இலக்கிய வகுப்புகள், தமிழ் வகுப்புகள், படைப்பிலக்கியப் பயிற்சி வகுப்புகள் போன்றவற்றை நடத்த இருக்கிறது. அதோடு, தமிழின் சிறந்த படைப்பாளர்களைத் துறைவாரியாகத் தேர்வு செய்து, சிறப்பு முனைவர் பட்டங்களையும் இந்தப் பல்கலைக் கழகம் வழங்க இருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தையும் இந்தப் பல்கலைக் கழகம் பெற்றிருக்கிறது.

இந்தப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக டாக்டர் இரா.உதயநேசனும், துணைவேந்தராக டாக்டர் ஆல்வினும், பதிவாளராக முனைவர் கோ.பாட்டழகனும் இயங்கிவருகின்றனர். அண்மையில் நடந்த பல்கலைக் கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் வேந்தர் டாக்டர் இரா.உதயநேசன், துணைவேந்தர் டாக்டர் ஆல்வின் மற்றும் கவிஞர் சரஸ்வதி பாஸ்கரன், முனைவர் விஜயகுமாரி, முனைவர் சம்பத்குமார், கவிஞர் ரேணுகா ஸ்டாலின், டாக்டர் ஏ.ஜான் இளவரசு, வழக்கறிஞர் பூங்குழலி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா நாளை 2022 பிப்ரவரிமாதம் 18ஆம் தேதி சால்வேசன் ஆர்மி அரங்கில் நடைபெற்றது.

அதேபோல், பல்கலைக் கழகப் பெயர் பலகை திறப்பு விழாவும் நடந்தது.

முனைவர் வி.ஜி.சந்தோசம் விஜிபி சென்னை அவர்கள் வாழ்த்துரை வழங்கி பல்கலைக்கழக பெயர் பலகையைத் திறந்து வைத்தார் .

இந்தப் பட்டமளிப்பு விழாவில், முனைவர் பட்டம் பெற்ற மதிப்புறு தமிழ் ஆளுமைகள்...

1) ஓவியக் கவிஞர். அமுதபாரதி 2) கவிஞர்.ஆண்டாள் பிரியதர்சினி

3) கவிஞர்.ஆரூர் தமிழ்நாடன் 4 ) கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

5) பாவலர்.சரஸ்வதி பாஸ்கரன்.

அமெரிக்காவில் தமிழை பரப்பும் இந்த பல்கலைகழகத்தை பாராட்டவும் வாழ்த்தவும் நாம் கடமைபட்டுள்ளோம்.

தஞ்சாவூர் தமிழ் பல்கலைகழத்தின் தமிழ்ப் பணிகள்:

கரிகாலன் விருது: தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளையின் முதன்மை நோக்கம் இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்ட சிறந்த தமிழ் நூலை அடையாளம் கண்டு, எழுத்தாளருக்கு தங்கப் பதக்கம் மற்றும் விருது வழங்கி கௌரவிப்பதாகும். வெளி நாடுகளில் உள்ள தமிழ் ஆய்வுத் துறை (DTFC) மேற்கூறிய நாடுகளில் இருந்து வெளியிடப்பட்ட புத்தகங்களைப் பெற்று, உரிய ஆய்வுக்குப் பிறகு, ஒவ்வொரு ஆண்டும் சிறந்த புத்தகத்தை அடையாளம் காட்டுகிறது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் (வெளிநாட்டுத் தமிழ் ஆய்வுத் துறை (டிடிஎஃப்சி) மொழி மற்றும் கலாச்சாரத் துறையில் பணியாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. பரிமாற்றம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்துவதே மேற்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம். மாணவர்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை கூட்டாக நடத்துதல்.

மொரீஷியஸ் தமிழ் ஆசிரியர் பயிற்சி வகுப்பு: தமிழ் வளர்ச்சித் துறை, அரசு. மொரீஷியஸில் தமிழ் மொழியை வலுப்படுத்த மொரிஷியஸ் தமிழ் ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்ப் பயிற்சி வகுப்புகளை நடத்த தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு தமிழ்நாடு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மேற்கண்ட பாடத்திட்டத்தை மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்துடன் மார்ச் 2018ல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக பெண்டிகன் சுல்தான் இத்ரிஸ் (UPSI) 2014 இல் தமிழ்க் கல்வி, கற்பித்தல் மற்றும் மாணவர் பரிமாற்றத் திட்டங்களில் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கான கல்வி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஆசிரியர் பரிமாற்றத் திட்டமும் மேலே உள்ள ஒப்பந்தத்தின் ஒரு தனித்துவமான அம்சமாகும். UPSI

மாணவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று சங்க இலக்கியம் குறித்த 10 நாள் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் (டிடிஎஃப்சி) 2014 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக பேராதனைத் தமிழ்த் துறை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் பயிலரங்கை நடத்துகிறது. பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் 40 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று தமிழ் இலக்கியப் பட்டறையில் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சி சென்னை செம்மொழி தமிழ் மத்திய நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் 2016 ஆம் ஆண்டு முதல் மலேசியாவில் உள்ள AIMST பல்கலைக்கழகத்தில் தமிழ் வகுப்புகளை நடத்தி வருகிறது. AIMST, மலேசியாவில் தமிழ் மொழி கற்றல் மற்றும் பயிற்சிப் பயிற்சியை மேற்கொள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் AIMST ஆகியவை ஒத்துழைப்பை வழங்க ஒப்பந்தம் செய்தன. தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் AIMST க்கு தேவையான புத்தகங்களை வழங்க ஒப்புக்கொண்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகமும் ஆஸ்திரேலியத் தமிழ் வளர்ச்சி மையமும் தமிழ் இலக்கியம் தொடர்பான சர்வதேச மாநாடுகளை ஆண்டுதோறும் நடத்துவதற்கு அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. முதல் மாநாடு சிட்னியில் ஜூன் 2017 இல் " சிலப்பதிகாரம் " என்ற மாபெரும் தமிழ் காவியத்தில் நடைபெறும் .

கல்வெட்டு மற்றும் தொல்லியல் துறை, கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை மற்றும் இந்திய மொழிகள் பள்ளி ஆகியவை இணைந்து தமிழ் கல்வெட்டு பற்றிய சர்வதேச பயிலரங்கை Ecole Pratique des Hautes Etudes-UMR 7528 Mondes iranian et indien, Paris உடன் நடத்தின.

கடல்சார் வரலாறு மற்றும் கடல் தொல்லியல் துறையானது நீருக்கடியில் தொல்லியல் தொடர்பான ஆசிய பசிபிக் மாநாட்டின் ஆதரவாளராக இருந்து வருகிறது.

சிங்கப்பூர், மொரிஷியஸ், பிஜி, இலங்கை, கனடா, ஜெர்மனி, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் புத்தகங்களின் தொகுப்பைக் கொண்ட அயல்நாட்டுத் தமிழாய்வுத் துறை ஆதிக்குமணன் நூலகத்தைக் கொண்டுள்ளது. வெளிநாடுகளில் தமிழ் வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு இந்த நூலகம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

## நூல் குறித்த அறிஞர்களின் கருத்துக்கள்

நூல் என்பது கருத்துகளை எழுத்து உருவில் காட்டும் ஒரு கருவி. இக்காலத்தில் அச்சிட்ட புத்தகங்களை உணர்த்த இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. காகிதம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் நூல் பனையோலையில் எழுதப்பட்ட பதிவாக இருந்தது. எழுதப்பட்ட பனையோலைகளைப் துளையிட்டு நூல்கயிற்றில் கோத்து வைத்தனர். கோத்து வைத்த சுவடிகளைப் பொத்தகம் என்றனர். நாளடைவில் பொத்தகம் என்னும் சொல் புத்தகம் என மருவி வழங்கப்படுகிறது.

“மண் புழுக்கள் மண்ணை வளமாக்கும், புத்தகப் புழுக்கள் மனதை வளமாக்குவர்”. நூல்கள் வாசிப்பது என்பது ஓர் அற்புதக் கலை. இசைக் கருவிகளை மீட்டுவது மட்டும் வாசிப்பல்ல. நூல்களைப் படிப்பதும் வாசிப்புதான். வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தி நினைவுத்திறனைக்

கூட்டும். கற்பனையையும் அறிவின் மேதா விலாசத்தையும் செழுமை செய்யும். புதிய புதிய பொருள்களைத் தந்து கொண்டே இருக்கும். வாசிப்பது என்பது சிறுகதையல்ல, அது ஒரு தொடர்கதை. கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்ரடீசுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு

நஞ்சு தனக்குக் கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டே இருந்தாராம். இலிபியா நாட்டு உமர் முக்தர் என்ற புரட்சியாளர் தூக்குக் கயிற்றை அவரது கழுத்தில் மாட்டும் வரை படித்துக் கொண்டிருந்தாராம்.

இலண்டன் நூலகத்தில் இருபது ஆண்டுக் காலம் படித்து ஆய்வு செய்த கார்ல் மார்க்ஸ் தான் பின்னாளில் பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தையாக விளங்கினார்.

நேரு தான் மறைந்த பின் தமது சடலத்தின் மீது மலர் மாலைகள் வைக்கக்கூடாது புத்தகங்கள்தான் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம். பேரறிஞர் அண்ணா புற்று நோயால் உயிரோடு போராடிக் கொண்டிருந்தார். சிகிச்சைக்காக அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள் மருத்துவர்கள் இன்று உங்களுக்கு அறுவைச் சிகிச்சை என்றபோது, தாம் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால் அதை முடிக்கும் வரை உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சையைத் தள்ளி வைக்கச் சொன்னாராம்.

**நூலகங்கள் குறித்த அறிஞர்களின் கருத்துகள்**

நூலகம் என்பது இயக்ககம் அல்ல! இயக்கம் என்கிறார் இந்திய நூலகவியல் தந்தை எஸ்.ஆர். ரங்கநாதன்.

அறிவால் உயர்ந்து அரியாசனம் செய்வோம் என்கிறார் தேசத்தந்தை மகாத்மா காந்தி.

நூல்களால் நைந்த நேயங்கள் தைப்போம் என்கிறார் அன்னை இந்திரா காந்தி. நூலகம் நமக்கு ஓய்வு நேர உலகம் என்கிறார் பேரறிஞர் அண்ணா.

எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்று இலண்டன் தோழர்கள் கேட்டபோது எந்த விடுதி நூலகத்திற்கு அருகில் உள்ளது எனக் கேட்டாராம் -டாக்டர் அம்பேத்கர்.

எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ அங்கே விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள் - சேகுவாரா.

ஒரு புத்தகத்தைத் திறக்கும்போது உலகினை நோக்கிய ஒரு சன்னலைத் திறக்கிறோம் - தோழர் சிங்காரவேலர்.

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை எனக் கேட்கப்பட்டபோது புத்தகங்கள்தான் என்றாராம் மார்டின் லூதர்கிங்.

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் வின்ஸ்டன் சர்ச்சில்.

ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம் காந்தியடிகள்.

தனிமைத் தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்? என்று கேட்கப்பட்டபோது, புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தார் நேரு.

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என நாடு கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி லெனின் கூறிடக் குவிந்த புத்தகங்கள் பல லட்சம்.

குடும்பத்தை விட்டு வெளியேறுங்கள் என்று தூக்கியெறியப்பட்டபோது பேரறிஞர் இங்கர்சால் சென்ற இடம் நூலகம்.

விமானத்தில் போகாமல் பம்பாய்க்குக் காரில் மூன்று நாள் பயணம் செய்து மெனக் கெட்டது ஏன்? என்று வினவியபோது பத்துப் புத்தகங்கள் படிக்க வேண்டி இருந்தது! எனப் பதிலளித்தாராம் அறிஞர் அண்ணா.

நான் தெரிந்துகொள்ள வேண்டியவை புத்தகங்களில் இருக்கின்றன. நான் படிக்காத நூல் ஒன்றை எனக்குத் தருபவர்களே எனக்கு மிகவும் விருப்பமானவர்கள் -ஆபிரகாம்லிங்கன்.

சிங்கப்பூரில் புத்தகம் படிக்கும் மாதம் என்ற ஒன்றை அறிவிக்கிறார்கள். ஆஸ்திரேலியா வில் மதிய உணவு இடைவேளைகளில் 'புத்தக வாசிப்பு நேரம் என ஒன்றை அலுவலகங்கள், மருத்துவமனைகள் ஆகிய

இடங்களில் கடைப்பிடிக்கிறார்கள். அமெரிக்கா வில் வருடம் தோறும் 10 சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, அதை இலவசமாக மக்களிடம் கொடுக்கிறார்கள்.

அமெரிக்காவையே புத்தகம் படிக்கும் நாடாக மாற்றும்வரை ஓயப்போவதில்லை என்று சபதம் எடுத்துச் செயல்படுகிறார் தொலைக்காட்சி டாக்ஷோக்களின் முன்னோடியான ஓப்ரா வின்ஃப்ரே.

வாசிப்பின் மூலம் பல சாதனைகள் நிகழ்ந்ததாக வரலாறு சொல்கிறது. உலகில் நடந்த மாற்றங்களுக்கு புத்தகங்கள் தான் காரணம்.

## வாசிப்பின் சிறப்பு

“நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு” என்ற ஔவையாரின் வரிகள் இந்த உலகில் ஒரு மனிதன் எந்த அளவுக்கு நூல்களை வாசிக்கிறானோ, அந்த அளவுக்கு அவன் அறிவினை பெற்றுக்கொள்கிறான் என கூறுகின்றது.

மேலும் வாசிப்பதன் மூலம் வெறும் புத்தக அறிவினை மாத்திரம் பெற்றுக் கொள்ளாமல், எம்மை சூழ உள்ள சமூகம் பற்றியும், உலகத்தின் நிலை பற்றியும் பொது அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துவதோடு, சிறந்த அறிவுத்திறனையும், நுண்ணறிவினையும் வழங்குகிறது. பரந்துபட்ட உலக அறிவினைப் பெற்றுக் கொள்ளவும், புதிய புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் இந்த வாசிப்பு எமக்கு உதவுவதாகவே காணப்படுகின்றது. எனவே மனித வாழ்வில் வாசிப்பு இன்றியமையாததாகும்.

வாசிப்பு என்பது மனிதனுக்கு சிறந்த ஒரு பொழுதுபோக்கையும் மன அழுத்தத்துக்கான அமைதி தன்மையையும் வழங்குகின்றது.

பல்வேறு புதிய விடயங்களையும், வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களையும் கற்றுக் கொள்வதற்கு வாசிப்பு உதவுவதோடு, பல்வேறு தலைவர்களின் உருவாக்கத்திற்கு காரணியாகவும் இந்த வாசிப்பு அமைந்துள்ளது.

மேலும் கற்பனை ஆற்றல், பொறுமை, படைப்பாற்றல் போன்ற பல்வேறு நன்மைகளை தருவதாகவும் வாசிப்பு காணப்படுகின்றது.

வாசிப்பு மனிதனை மேன்மை அடைய செய்கின்றது இந்த வாசிப்பினால் உயர்ந்தவர்கள் உலகில் பலர் உள்ளனர்.

அந்த வகையில் வறுமை குடும்பத்தில் பிறந்து, புத்தக வாசிப்பினால் உலகைப் பற்றி அறிந்து அமெரிக்காவின் தலைசிறந்த தலைவராக திகழ்ந்தார் ஆபிரகாம் லிங்கன்,

மகாத்மா காந்தியின் சத்திய சோதனை புத்தகத்தின் விளைவாக உருவாகிய மாட்டின் லூதர் கிங், பல அறிவியல் நூல்கள் உருவாக்கிய அணு விஞ்ஞான அப்துல் கலாம், மேலும் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, லெனின் போன்ற அறிஞர்களையும் குறிப்பிடலாம்.

பாடப்புத்தகங்களை தாண்டிய ஒரு உலகம் உள்ளது. நாம் வாழும் வாழ்க்கையைத் தாண்டிய ஒரு வாழ்க்கை உள்ளது. அதனை அறிய நம் தலைமுறைக்கு புத்தகங்களை வாசிக்க, நேசிக்கக் கற்றுக் கொடுங்கள். மதிப்பெண்ணின் பின்னால் ஓடும் நாம் மனிதத்தின் பின்னால் ஓடப் புத்தகங்கள் தான் உறுதுணையாய் இருக்கும் என்கிறார் சேகுவாரா.

இன்றைய உலகம் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினால் நவீனமடைந்துள்ள சமூகங்களை கொண்டுள்ளதாகும். எனவே இச்சமுகங்களில் வாசிப்பு என்பது குறைவடைந்து ஏனைய பல புதிய பொழுதுபோக்கு அம்சங்களில் மக்கள் பொழுதை கழிக்கின்றனர். குறிப்பாக இளம் வயதினர் இணையதளங்களில் மூழ்கி இணைய விளையாட்டுகளிலேயே தங்களது முழு நேரத்தையும் செலவழிக்கின்றனர். எனவே நாம் நமது சமூகத்தை சீர்படுத்த வேண்டுமாயின் வாசிப்பு பழக்கத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**சர்வதேச தலைவர்கள் வெற்றிக்கு கைகொடுத்த '5 மணிநேர விதி':**

வெற்றிகரமான தொழில் வாழ்க்கையை விரும்பும் எவரும், கற்றுக்கொள்வதில் நேரத்தை செலவிட்டாக வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை வரித்துக்கொள்வது, வெற்றியுடன் தொடர்பு கொண்டிருப்பதை 'ரிச் ஹாபிட்ஸ்; தி டெய்லி சக்சஸ் ஹாபிட்ஸ் ஆப் வெல்தி இண்டுஜுவல்ஸ்' புத்தக ஆசிரியர் தாம்ஸ் கோர்லி புள்ளிவிவரங்களோடு கண்டறிந்துள்ளார். புத்தகங்கள் அறிவை பெருக்கிக் கொள்வதற்கான நுழைவு வாயிலாக இருக்கின்றன. உங்கள் கையில் இருக்கும் நேரத்தில் இந்த அற்புத ஆற்றலை திறம்பட பயன்படுத்திக்கொள்வது எப்படி? இந்த கேள்விக்கு பதிலாக அமைகிறது 5 மணி நேர விதி. இந்த விதி என்ன சொல்கிறது என்றால், வாரந்தோறும் ஐந்து மணி நேரம் புத்தகங்களை வாசித்தால், நீங்கள் தேவையான அளவு அறிவை தேடிக்கொள்ளலாம். விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்ளின் வார நாட்களில் ஒரு மணி நேரம் அல்லது வாரத்தில் ஐந்து மணி நேரம் வாசிப்பது என பின்பற்றி வந்த பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த விதியை உருவாக்கியதாக தொழில்முனைவோரான மைக்கேல் சிம்மன்ஸ் சொல்கிறார்.

குறைவாக வாசிக்கும் பழக்கத்திற்கு நம்முடைய பரபரப்பான வாழ்க்கையை ஒரு காரணமாக சொல்லலாம். ஆனால் உலகின் வெற்றிகரமான மனிதர்களில் அனைவருமே வாசிக்கும் பழக்கத்தை கொண்டிருக்கின்றனர்

மைக்ரோசாப்ட் நிறுவனரும், கோடீஸ்வர கொடை வள்ளலுமான பில் கேட்ஸ், வாசிப்பு தன் வாழ்க்கையை மாற்றியது என்கிறார்.

அவர் வாரம் ஒரு புத்தகம் அல்லது ஆண்டுக்கு 50 புத்தகங்கள் வாசிக்கிறார். ஆனால் அவர் வாசிப்பதற்காக மட்டும் வாசிப்பதில்லை, அறிவு தாகமே அவரை வாசிக்க தூண்டுகிறது. புத்தகங்களை வாசிக்கும் போது அவற்றின் பக்கவாட்டில் குறிப்புகளை எழுதி வைக்கும் பழக்கமும் கொண்டிருக்கிறார். இது புரிதல் மற்றும் பரிவை அளிப்பதாகவும் சொல்கிறார்.

முதலீட்டு மகாராஜாவான, பெர்க்ஷய்ர் ஹேத்வே சி.இ.ஓ வாரென் பபெட், தனது 80 சதவீத நேரத்தை வாசிப்பில் செலவிடுவதாக சொல்கிறார். சும்மா உட்கார்ந்து யோசிப்பதை விட, வாசித்து விட்டு யோசிப்பது பலன் அளிப்பதாக அவர் நம்புகிறார். புத்தகத்தில் படித்த ஒன்று பற்றி யோசிப்பது புதிய எண்ணங்கள் மற்றும் புரிதலை ஏற்படுத்துகிறது.

பெர்க்ஷயர் ஹேத்வே துணைத்தலைவரான சார்லஸ் தாமஸ் மங்கரும் தீவிரமாக வாசிக்ககூடியவர் தான். அவரே கால் முளைத்த புத்தகம் என அவரது குடும்பத்தினர் மற்றும் பிள்ளைகள் கூறியிருக்கின்றனர். வாசிப்பு பழக்கம் சரியான எண்ணங்களை கண்டறிந்து, அவற்றை செயல்படுத்த உதவுவதாக மங்கர் கூறியிருக்கிறார். வாசிப்பு எண்ணங்களின் அமைப்பை புரிந்து கொள்ள உதவுகிறது. வாசிப்பு மூலம் ஒருவர் நாள்தோறும் மேலும் அறிவை வளர்த்துக்கொண்டு, ஆர்வத்தையும் வளர்த்துக்கொள்ளலாம்.

**கற்றதை யோசிப்பது**

வாசிப்பது மட்டும் போதாது. வாசிப்பின் முழு பலனை பெற, படித்தது குறித்து யோசிக்க வேண்டும். வாசித்தது குறித்து யோசிப்பதன் மூலம், புத்தகங்களில் இருந்து பெறக்கூடிய பாடங்களை புரிந்து கொள்ளலாம். இது வாழ்க்கை மேம்பட கைகொடுக்கும்.

தொழில்முனைவோர், எழுத்தாளர், நடிகை, நிகழ்ச்சி தொகுப்பாளர் என பலமுகங்கள் கொண்ட ஓபரா வின்பிரே, புத்தகங்கள் தான் தனிப்பட்ட

சுதந்திரத்திற்கான பாதையாக அமைந்தது என்று நம்புகிறார். வறுமையான வாழ்க்கையில் இருந்து வளமான வாழ்க்கைக்கு முன்னேற புத்தகங்கள் அவருக்கு உதவியிருக்கிறது. வளரும் பருவத்தில் அவர் அதிகம் தஞ்சமடைந்த இடம் நூலகமாகும்.

புத்தகங்கள் அவரை ஊக்கம் பெற வைத்து, பொருளாதார மற்றும் சமூக போராட்டங்களை கடந்து எதிர்காலத்தை உருவகப்படுத்திக்கொள்ள வழி செய்தன. சிறுவர், சிறுமிகளை வறுமையில் இருந்து மீட்டு, தலைமைப் பண்பு பெற வைப்பதற்காக அவர் நவீன நூலகத்திற்கு 40 மில்லியன் டாலர் வழங்கியுள்ளார். ஒரு பெண்ணுக்கு கல்வி அளிக்கும் போது நீங்கள் அவருக்கு விடுதலை அளிக்கிறீர்கள் என்கிறார் அவர்.

குறிப்பிட்ட வகை புத்தகங்களை மட்டுமே வாசிக்கும் எண்ணத்திலும் சிக்கி கொண்டுவிடக்கூடாது. வாழ்க்கையை போலவே, உங்கள் எல்லைகளை விரிவு படுத்திக்கொள்வது பலவிதமான எண்ணங்களை பரீட்சயமாக்கும். வெற்றிக்கு இவை தான் தேவை.

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ், எலன் மஸ்க் சிறுவயதில் இருந்தே புத்தக புழுவாக இருந்திருக்கிறார். முதலில் புத்தகங்களால் வளர்க்கப்பட்டு, அதன் பிறகே பெற்றோர்களால் வளர்க்கப்படதாக அவர் விளையாட்டாக கூறியிருக்கிறார். 9 வயதில் அவர் கலைக்களஞ்சியங்களை தீவிரமாக வாசித்திருக்கிறார். பௌதீகம் மற்றும் வானவியல் தவிர அறிவியல் புனைகதைகளையும் ஆர்வமாக வாசித்திருக்கிறார். ராக்கெட்கள் செயல்பாடு பற்றிய புரிதலுக்கு அறிவியல் புனைகதைகளே காரணம் என்கிறார்.

அமெரிக்க முன்னாள் அதிபரான பாரக் ஒபாமா, சிறு வயதில் சிறுகதைகள், மர்ம கதைகளை என படித்திருக்கிறார். தயக்கத்தை உதறி நன்றாக பேசும் குணத்தை பெற இவை உதவியதாக அவர் குறிப்பிடுகிறார். மேலும் எழுத்தார்வத்தையும் வளர்த்தது. சிறந்த வாசகர், அசாதரணமாக பேச்சாளர் மற்றும், உரை எழுதிக்கொடுப்பவருமான ஒபாமா புனைகதைகள் சிறந்த அதிபராக உதவியதாக தெரிவிக்கிறார். ஏனெனில் மற்றவர்கள் வாழ்க்கையை புரிந்து கொள்ள இது உதவியிருக்கிறது.

**வாரம் 5 மணி நேர விதி புத்தக வாசிப்பு விதியை உருவாக்குவதற்கு சிறிய அளவில் துவங்க வேண்டும். முதலில் ஒரு மணி நேரம் வாசிக்க வேண்டும். வாசிப்பது பழக்கமான பிறகு நேரத்தை அதிகமாக்க வேண்டும். வாசிக்கும் போது கற்றுக்கொள்வது தான் முக்கியம்.**

தமிழ்நாட்டில் இளைய தலைமுறை மாணவ, மாணவியரிடமும் மற்றும் தமிழ் மக்கள் அனைவரிடமும் வாசிப்பு பழக்கத்தை அவர்களது வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஏற்படுத்துவதின் மூலமே தமிழ் மக்கள் சமுதாயத்தை அறிவார்ந்த சமுதாயமாக அமைத்திட முடியும் என்பதில் சிறிது ஐயமில்லை.

**வானொலி தமிழை வளர்த்தது:**

1927 ல் முதன் முதலாக மும்பை, கொல்கத்தாவில் வானொலி நிலையம் தொடங்கப்பட்டதிலிருந்து இந்திய ஒன்றியத்தின் வானொலி சேவை துவங்கியது. இன்று நாடு முழுவதும் 208 ஒளிபரப்பு நிலையங்கள் உள்ளன. சென்னையில் முதல் பண்பலை நிலையம் 1977 ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் நாள் தொடங்கப்பட்டது. பண்பலை ரெயின்போ என்பது முழுக்க முழுக்க பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் சிறிது சிறிது தகவல்களையும் அந்தந்த பகுதிக்கு ஏற்ப ஒளிபரப்பு செய்யும். வானொலி என்பது செவி வழியே மக்களை சென்றடைந்து தாய் மொழியை வளர்த்தெடுக்கும் பணியை செவ்வனே இருகாறும் செய்து வருகிறது.

தொலைக்காட்சி என்னும் மாயாவி வந்த பிறகு வானொலி பெட்டி தேவைகள் இல்லாமல் போனது. ஆயினும் சிறிது காலத்திற்குப் பின் வானொலியின் சேவையை மக்கள் தொடர்ந்து மக்கள் பயன்பாட்டில் எடுத்துக் கொண்டு உபயோகிப்பதை கண்கூடாக பார்க்க முடிகிறது. இன்றைய சூழலில் வானொலியின் சேவையின் மூலமாக மக்கள் செவி வழியாக பொழுதுபோக்கு அம்சங்களையும், அன்றாட தகவல்களையும் பெற்று பயன்பட்டு வருவதோடு அவர்களது தாய் மொழியை காப்பதிலும், தாய்மொழி பேச்சு வழக்கு திறனை வளர்ப்பதிலும் வானொலி சேவை தொடர்ந்து பெரும் பங்கு ஆற்றி வருகிறது.

**கடந்த 30 வருட கால தமிழ் மக்கள் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றமும் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ்மொழி வளர்ச்சி மீது ஏற்பட்டுள்ள எதிர்மறை தாக்கங்களும்**

**நிகழ்வுகள்**

**நிகழ்வு 1:**

கடந்த 30 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நூலகங்களும், நூலக கல்வியும் பெரும் பின்னடைவை சந்தித்து, அழிவின் விளிம்பில் நிற்கின்றன. அதாவது பூமியின் தோற்றமுதல் இன்று முதல் வரையான பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட அனைத்து தரவுகளையும் தமிழ்நாடு அரசு நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் நூல்களின் வாயிலாக படித்து, உணர்ந்து, அறிவை வளப்படுத்திக் கொள்ளும் புத்தக வாசிப்பு என்ற வாசகர் கூட்டம் முற்றிலும் அற்று போய் தமிழ்நாடு அரசு பொது நூலகங்களில் குவிந்திருக்கும் 8 கோடிக்கும் மேற்பட்ட நூல்கள் பயனற்றவையாகி, அழியும் தருவாயில் உள்ளன.

**நிகழ்வு 2:**

கடந்த 30 ஆண்டுகளில் தாய் மொழி தமிழில் எழுதும், வாசிக்கும் பழக்கம் சிறிது சிறிதாக குறைந்து இன்றைய இளைய தலைமுறையினர் தாய்மொழி தமிழை சரளமாக எழுத, வாசிக்க திறன் குன்றியவர்களாக மாறிவருகிறார்கள். இன்னும் 30 வருடம் காலத்தில் தாய்மொழி தமிழை பேசுவதே அன்றி எழுதுவதற்கோ, வாசிப்பதற்கோ பெரிதும் திறன் குன்றியவர்களாக மொத்த தமிழ் சமுதாயமும் மாறிவிடும் பெரும் அபாயம் நிகழ காத்திருக்கிறது.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம்,கன்னிமரா நூலகம் ,மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் ஆகிய 3 நூலகங்களும், மாவட்ட மைய நூலகங்கள் 32 ம் கல்லூரி தேர்வுகளுக்கும்,அரசு பணி தேர்வுகளுக்கும் உதவுவதையும், நிகழ்சிகள், விழாக்கள் நடத்துவதையும் கணக்கு காட்டி செயல்படுவதாக சொல்லிக் கொள்ளலாம். ஆயினும் இந்நூலகங்கள் அடிப்படை கோட்பாடான நூலக கல்வியை தருவதில் செயலிழந்துவிட்டன என்பதே நடைமுறை உண்மையாக உள்ளது.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 314 முழுநேர கிளை நூலகங்களும், 1612 கிளை நூலகங்களும், 771 பகுதி நேர கிளை நூலகங்களும் ஆக 2697 நூலகங்கள் வாசகர்கள் மிக குறைந்து பட்டு களையிழந்து நிற்கின்றன. குறைந்த எண்ணிக்கையிலான 50வயதுக்கு மேற்ப்பட்ட சிலர் தினசரி பத்திரிக்கைகள் படிக்க வந்து செல்லும் “டீ கடை பெஞ்ச்” போன்ற இடமாக காட்சியளிக்கின்றன.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 1915 கிராம நூலகங்கள் செத்தே விட்டன. “பிணங்கள் வராத சுடுகாட்டில் வெட்டியான் வெட்டியாக உட்கார்ந்து பொழுதை கழிப்பதை போன்ற சூழலில்” பழைய, புதிய நூல்களை போட்டு வைக்கும் கிடங்குகளாக உருவாகி உள்ளன.

**நிகழ்வு 3:**

இன்னும் 30 வருட காலங்களில் நிகழ்வு 1, மற்றும் நிகழ்வு 2 ன் காரணமாக நம் தமிழ் மொழியில் கவிதை புனையும் கவிஞர்கள், கதைகள், புதினங்கள், இலக்கியங்கள் எழுதும் எழுத்தாளர்கள், பல்வேறு மொழிகளில் இருந்து கலைகளையும், விஞ்ஞான தொழில்நுட்பங்களையும், பல்துலை சார்ந்த அறிவு வளங்களையும், தமிழ் மொழியில் மொழிபெயர்ப்புக்கும், திறனார்ந்த மொழி பெயர்ப்பாளர்கள் ஆகிய அறிவாந்த அறிஞர் கூட்டம் இனி தமிழ் மக்களுக்கோ, தமிழ் நாட்டிற்கோ தேவையில்லை என்ற நிலைமை ஏற்படும் தினசரி தமிழ் பத்திரிகைகள், வார, மாத பருவ இதழ்கள், இனி புதிதாக வரவிருக்கும் தமிழ் நூல்கள் ஆகியவற்றிற்கு துளியினும் தேவையில்லை என்ற நிலைமை ஏற்படும். இவற்றையெல்லாம் தமிழில் பதிப்பித்து வெளியிடும், பிரசுர நிலையங்களுக்கு வேலையே கிடையாது என்ற நிலைமை ஏற்படும்.

**நிகழ்வு 4:**

கடந்த 30 வருட காலங்களில் ஆங்கில வழி கல்வியின் பெரும் எழுச்சியினால், பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆங்கில வழி கல்வி பள்ளிகளை நாடும் சூழல் ஏற்பட்டுள்ளதால் தமிழ்நாடு அரசின் பள்ளிகளும் ஆங்கில வழி கல்வி பள்ளிகளாக மாறி வருகின்றன. அடுத்த 30 வருடங்களில் தமிழ்நாடு அரசு பள்ளிகள் அனைத்துமே பெற்றோர்கள் தேவைக்கு ஏற்ப ஆங்கில வழி கல்விகளாக மாறிவிடும் நிலைமை ஏற்படும். இந்த பெரும் மாற்றமானது வருங்காலங்களில் பள்ளிப்படிப்பும் அதற்கு மேற்பட்ட உயர்கல்விகள் படித்து வெளிவரும் இளைய தலைமுறை கூட்டத்தின் பெரும்பான்மையானவர் தூய தமிழில் பேசும் திறன் குன்றியவர்களாக உருவாகி வரும் அதே நேரம் பெரும்பாலான பள்ளிகளின் தரம் குன்றிய ஆங்கில வழிக் கல்வியின் மூலமாக ஆங்கிலத்தில் எழுதுவதிலும், பேசுவதிலும், படித்து புரிந்து கொள்வதிலும் பெரிதும் திறன் குறைந்தவர்களாக பெரும்பாலானவர்கள் உருவாகக்கூடிய பேராபத்து சூழல் வேகமாக வளர்ந்து வருகிறது.

**நிகழ்வு 5:**

அரசு தரவுகளின் படி 10 ஆம் வகுப்பினை சென்றடையாமலேயே 15 வயது பருவத்தினர் 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் கல்வியை விட்டு வெளி சென்று விடுகிறார்கள் என்பது கள நிலவரமாக உள்ளது.

2011 இல் தமிழ்நாட்டின் எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் (literacy rate) 80. 09 சதவீதமாக கணிக்கப்பட்டு 2024 ஆண்டில் தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்களின் சதவீதம் பெரும் உயர்வினை அடைந்திருக்கும் என்று நாம் அனைவரும் திண்ணமாக நம்பிக்கொண்டிருக்கும் சூழலில் பல்வேறு காரணிகளால், மேற்கூறிய நிகழ்வுகளால் அடுத்த 30 ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களின் எழுத்தறிவு சதவீதத்தில் (literacy rate) தாக்கம் ஏற்பட்டு மிகவும் கீழான நிலையை அடைந்து விடக்கூடிய அபாயகரமான வழியில் நாம் அனைவரும் சென்று கொண்டிருக்கிறோம் என்பதே கள நிலவரமாக உள்ளது.

**நிகழ்வு 6:**

இது என்ன தமிழ்நாட்டின் நகரங்களா?இல்லை அமெரிக்கா,இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளின் நகரங்களா?என்று ஐயம் கொள்ளதக்க வகையில் தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் கடைகள்,உணவகங்கள்,வியாபார நிறுவனங்கள்,தொழிற்சாலைகளின் பெயர் பலகைகள்,விளம்பர பலகைகள் தமிழை தவிர்த்துவிட்டு முற்றிலும் ஆங்கிலத்தில் அமைக்கப்படுவது பெருமளவு அதி வேகத்தில் பெருகி வருகிறது.இது தாய்மொழி தமிழை இழிவு படுத்தும் மோசமான செயலாகும். தமிழ் மொழியின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் இத்தகைய தீய நிகழ்வில் கவனம் செலுத்தவோ, தடுத்து நிறுத்தி தமிழை நிலைநிறுத்தவோ தமிழ் பெருமக்கள் அனைவரும் முனையாது இருப்பது ,நம் தமிழ் மொழி செம்மொழி என சொல்லிக்கொள்ளும் பெருமைக்கு பெரும் கேடு விளைவிக்கும் செயலாகும்.நம் தமிழுக்கு நாமே குழிவெட்டி புதைக்கும் செயலுக்கு ஒப்பாகும்.

தமிழ்நாடு அரசு இருப்பது தமிழுக்கு பெரும் கேடு விளைவிக்கும் செயலாகும். தமிழ்நாடு முழுவதும் பெயர் பலகைகளை இந்தியிலும் வைத்துக் கொள்ளலாம் என்றவாறு தமிழ்நாடு அரசின் ஒரு சட்டம் இன்றும் நிலுவையில் இருந்து வருவது பேரறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கை என்ன ஆயிற்று என்ற கேள்வியை எழுப்புகிறது.

மேற்சொன்ன ஆறு நிகழ்களுக்கும் காரண, காரணிகள் என்ன? அவற்றின் தாக்கங்களின் அளவு என்ன? இந்த காரணிகளின் தாக்கங்களிலிருந்து விடுபட்டு “**அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி**” பெறுவதற்கான வழிவகைகள் என்ன? என்பதை விரிவாக தக்க விளக்கங்களோடு பின்வரும் அத்தியாயங்களில் காண்போம்.

இந்த ஆய்வறிக்கையில் கண்டறியப்பட்ட கடந்த 30 வருடங்களாக ஏற்பட்டுள்ள மேற்சொல்லப்பட்ட கெடு விளைவுகளுக்கு தாய்மொழி தமிழின் இருப்பை பாதுகாக்கும் கவசமாகவும், வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், மூலாதாரமாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் நூலகங்கள், நூலக கல்வி மற்றும் தமிழ் மொழி மீது ஏற்பட்டுள்ள கொடும் தாக்கங்களுக்கு, **எந்த ஒரு அரசியல் கட்சியோ, அரசியல் தலைவரின் சித்தாந்தமோ, செயல்பாடுகளோ, எந்த விதத்திலும் காரணமோ, பொறுப்போ அல்ல. மேற்கண்ட கெடு நிகழ்வுகள் கடந்த 30 வருட கால எந்த அரசாங்கத்தின் செயல்பாட்டால் ஏற்பட்ட விசயம் மல்ல. வேகு வேகமான விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினாலும், சமுதாயத்தில் மக்கள் மத்தியிலும், இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவியர் ஆகியோரிடத்தில் ஏற்பட்டுள்ள பெரும் மன மாற்றத்தினாலும், செயல் மாற்றங்களினாலும் “நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி வளர்ச்சி” ஆகியவற்றில் பெரும் தேக்கமும், பின்னடைவும் ஏற்பட்டு அழிவு பாதையில் வேகு வேகமாக சென்று கொண்டிருக்கின்றோம் என்பதே கள நிலவரமாக உள்ளது.**

**காரணிகள்**

**முதல் காரணி**:

அலைபேசி, இணைய சேவை, போன்ற விஞ்ஞான தொழில்நுட்ப காரணிகளின் பெரும் வளர்ச்சியினாலும், தமிழ் மக்கள், இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவியர்கள் கவர்ந்து ஈர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் நூலகங்கள், நூலக கல்வி வளர்ச்சியில் பெரும் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தாய்மொழி தமிழின் உயிர் சக்தியை பலகீனப்படும் இது முதல் காரணி ஆகும்.

**இரண்டாவது காரணி:**

பொருளாதார வளர்ச்சி நோக்கிய பாதையில் "ஆங்கில கல்வி" மிகவும் முக்கிய பங்கு வகிப்பதை உணர்ந்து கொண்டுள்ள மனநிலை பெற்றோர்கள் அனைவரது மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஆங்கில வழி கல்வியை தேர்ந்தெடுக்கும் சூழல் காலப்போக்கில் 100% சதவீதத்தை தொடப் போகிறது. அனைவருக்கும் ஆங்கில கல்வி என்ற நிலை, தமிழ் மொழியை பாதுகாக்க உருவாக்கப்பட்ட நூலகங்கள், நூலக கல்வியினை மங்கச் செய்து உபயோகமற்ற ஆயுதமாக ஆக்கியுள்ளது. இது இரண்டாவது காரணி ஆகும்.

**மூன்றாவது காரணி:**

வண்ணமய தொலைக்காட்சி பெட்டிகள் தமிழ் இல்லங்களில் பெரும்பான்மை பெண்கள் சமுதாயத்தை, மூத்தோர் சமுதாயத்தை மனதை ஆட்கொண்டு கட்டிப்போட்டு பெரும் கேட்டினை விளைவித்துள்ளன. இதன் தாக்கத்தினால் பெரும்பாலான தமிழ் மக்களிடம் தினசரி தமிழ் பத்திரிகைகள், வார மாத தமிழ் பருவ இதழ்கள், தமிழ் நாவல்கள், தமிழ் நூல்கள் ஆகியவற்றை வாசிக்கும் வழக்கம் படிப்படியாக குறைந்து, குறைந்து அதுவே அற்றுப் போய்விடும் நிலை உருவாகியுள்ளது. இது மூன்றாவது காரணி ஆகும்.

**நான்காவது காரணி**:

20 ஆம் நூற்றாண்டில் ஆரம்ப காலங்களில் உருபெற்று இன்று பூதகரமாக வளர்ந்து நிற்கும் வண்ண திரை உலகம் சமுதாயத்தில் பெரும் மாற்றத்தை உருவாக்கியுள்ளது. மலர்ச்சியையும், எழுச்சியையும், ஏற்படுத்தியுள்ள அதே நேரம் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் ஒருசேர ஏற்படுத்தியுள்ளது. இது நான்காவது காரணி ஆகும்.

**ஐந்தாவது காரணி:**

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் ஏற்பட்டிருக்கும் எண்ணற்ற பொழுதுபோக்கு அம்சங்கள் தமிழ்நாட்டு மக்களை கவர்ந்து இழுத்து ஆட்கொண்டு, அவர்களது நேரங்களை முழுமையாக ஆக்கிரமித்து உள்ளன. இதன் காரணமாக தமிழ்நாட்டு மக்கள் தங்கள் அறிவு வளத்தை பெருக்கிக் கொள்ளும் அறிவார்ந்த விசயங்களில் நேரத்தை செலவிடுவது மிகவும் குறைந்து உள்ளது என்பது கண்கூடான உண்மையாக உள்ளது.

இன்றைய இளைய தலைமுறை இளைஞர்கள் மத்தியில் மது அருந்துதல், போதை பொருட்களை பயன்படுத்துதல் ஆகிய கேடான பழக்கம் கேளிக்கையின் ஒரு அம்சமாக கருதப்பட்டு பல்கி, பெருகி வருவது தமிழ் சமுதாயத்தின் கட்டமைப்பையே சீர்குலைக்கும் அபாயகரமான விசயமாகும். இது ஐந்தாவது காரணி ஆகும்.

**ஆறாவது காரணி:**

உலகமயமாதல் பொருளாதார கொள்கையின் விளைவாக, மேலைநாடுகளின், பிற மாநிலங்களின் கடைகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் பெரிய அளவில் இடம் பிடித்துள்ளன.இவைகளின் கட்டமைப்புகள் பெரும்பாலும் மேலைநாடுகளின் நாகரீக முறைகளில் ,நவீனங்களை பயன்படுத்தியும், தொழில் நுட்பங்களின் அடிப்படையிலும் அமைக்கபட்டுள்ளதை காண முடிகிறது. இந்த சூழ்நிலையில் தமிழ்நாட்டில் பெரும்பாலான சிறிய, பெரிய கடைகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் பெயர் பலகைகள் முழுவதும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும் போக்கு அதிகரித்து வருகிறது. இது தமிழ் மொழியின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் தீய நிகழ்வாகும்.

**காரணி-1**

**அலைபேசிகளாலும், இணைய சேவை பயன்பாட்டினாலும், தமிழ் மக்கள் மீதும், தமிழின் மீதும் ஏற்பட்டுள்ள தாக்கம்.**

1986 களில் இந்தியாவில் (Net) இணைய சேவை, ஆரம்ப காலங்களில் கல்வி மற்றும் ஆராய்ச்சி துறை சார்ந்த கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கணினி மூலம் வழங்கப்பட்டது. ஆகஸ்ட் 15/1995 முதல் பொதுமக்களுக்கு இணைய சேவை அலைபேசிகள் மூலம் வழங்கப்பட்டது. இந்திய அலைபேசி இணைய கூட்டமைப்பின் தரவு படி 2022 களில் இணைய சேவையை இந்தியாவின் உபயோகிப்பவர் எண்ணிக்கை 1.2 பில்லியன் (120 கோடி ) ஆக பெருகியது. சதவீத கணக்குப்படி 85% இந்திய மக்கள் இணைய சேவையை உபயோகிக்கின்றனர்.

சமூக இணையதளம் உபயோகிப்போர் எண்ணிக்கை 755 மில்லியன்.

இணைய முகநூல் உபயோகிப்போரின் எண்ணிக்கை 440 மில்லியன் ஆக உள்ளது.

இணையத்தில் இன்ஸ்டாகிராம் உபயோகிப்போர் எண்ணிக்கை 2024ல் 322 மில்லியன் ஆக உள்ளது.

இணையத்தில் வாட்ஸ் அப் உபயோகிப்போர் எண்ணிக்கை 2022-ல் 532 மில்லினாக உள்ளது.

இணையத்தில் ட்விட்டர் உபயோகிப்பாளர் எண்ணிக்கை 2024ல் 25 மில்லினாக உள்ளது. அதாவது தமிழ்நாட்டின் தோராய மொத்த மக்கள் தொகை 8 கோடி பேரில் 6.8 கோடி மக்கள் இணைய சேவையை பெற்றுள்ளனர். பிப்ரவரி 2024 நிலவரப்படி 17 வெவ்வேறு இந்திய உலக நிறுவனங்களின் ஒளியிழை வடங்கள் (fiber cable) மூலமாக இணைய சேவை மேற்குலக நாடுகளிலிருந்து இந்தியாவின் 5 பகுதிகளை வந்தடைகின்றன. அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு 2300 கிலோமீட்டர் தொலைவுக்கும், லட்சத்தீவுகளுக்கு 1868 கிலோமீட்டர் தொலைவுகளுக்கும் இந்திய அரசு கடல் அடி ஒளியிழை வடங்கள் (fiber cable) அமைத்து கொடுத்து அங்குள்ள மக்களுக்கு இணைய சேவையை வழங்கியுள்ளது. ரிலையன்ஸ் நிறுவனம் உலகில் இந்தியாவை மையப்படுத்தி உலகின் மிகப்பெரிய நீர்மூழ்கிக் கப்பல் ஒளியிழை வடங்கள் அமைப்பை உருவாக்கியுள்ளது.

இணைய தரவுகளின் படி நவீன அலை பேசிகளின் 2024 சந்தை மதிப்பு இந்தியாவில் அதாவது இந்திய பண மதிப்பில் 4 லட்சது 5 ஆயிரம் கோடிகள் ஆக உள்ளது. அலைபேசி இணைய சேவை 2024 சந்தை மதிப்பு படி இந்தியாவில் USD 7.9 bm அதாவது இந்தியா பணமதிப்பு படி 63200 கோடி ரூபாய்களாக உள்ளது.

கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொழில் வளர்ச்சி, தகவல் பரிமாற்றம், தனிமனிதனின் பொருளாதார வளர்ச்சி, நாட்டின் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றின் அடிப்படை ஆதாரமாக அலைபேசியும், இணைய சேவையும் அசைக்க முடியாத இடத்தை பிடித்து விட்டன.

சிறுவிதையாக வந்து விழுந்த இணைய சேவையும், அலைபேசியும் ஆலமரமாக வளர்ந்து அதற்கும் மேலும் அதிபிரமாண்ட வடிவம் எடுத்து வளர்ந்து விட்டன.

நண்பனாக, உதவியாளனாக, வளர்ச்சியின் வழிகாட்டியாக இன்றியமையாத அன்றாட தேவையாக மாறி மனித சமுதாய வாழ்க்கையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கும் அதே அலைபேசியும், இணைய சேவையையும் தான் அதே காலகட்டத்தில் கடலென குவிந்துள்ள கேளிக்கை அம்சங்களாலும், கால விரையம் மற்றும் வக்கிர உணர்வுகளையும் ஏற்படுத்தும் லட்சக்கணக்கான துணை வக்கிர அமைப்புகளாலும், கோடிக்கணக்கான இளைஞர்களின் தலையில் புகுந்து போதைப்பொருட்களை போல் ஆட்கொண்டு விட்டன. இந்த அலைபேசி மற்றும் இணைய சேவையின் தாக்கம் நம் தாய்மொழி தமிழை அழித்தொழிக்கும் மௌன புரட்சியை வெற்றிகரமாக கடந்த 30 ஆண்டுகளாக முன்னெடுத்துள்ளன.

21ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் அலைபேசி என்ற புயலோடு இணைய சேவை என்ற பெருமழை, பெருவெள்ளமும் சேர்ந்து நம் தாய்மொழி தமிழை சூறையாடி வருகின்றன. தோராய மக்கள் தொகை வளர்ச்சி விகித கணக்குகளின் படி இன்று தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார் 8.4 கோடியாகும் இதில் குறைந்தபட்சம் 7 கோடி பேர் அலைபேசி தொடர்பு வசதியை பெற்றுள்ளனர். (business standard report date 5 May 2023)

அலைபேசியின் இணையம் வழியாக வெள்ளமென பெருக்கெடுத்து வரும் தகவல்கள், மனம் மயங்கும் பல்வண்ண ஒளிக்கற்றை காட்சிகளாகவும், காதில் இனித்திடும் ஒலி கோர்வைகளாகவும் கலந்து காணொளி காட்சிகளாக பள்ளி கல்லூரி இளைய தலைமுறை மாணவ மாணவிகளின் மூளைகளில் மழையென பொழிந்து அவர்களை திணறடிக்கின்றன. அவர்களின் வாழ்க்கை பாதையில் 24 x 7 என்ற காலக்கணக்கில் ஒரு பெரும் பகுதியை ஆக்கிரமித்து அவர்களது விலை மதிப்பில்லாத கால நேரத்தை காவு வாங்கி கொண்டிருக்கின்றன. கரையான்களைப் போல அவர்களின் தலைகளில் புகுந்து, ஆக்கிரமிப்பு செய்து அரித்து அரித்து தின்று அவர்கள் தங்களின் தாய்மொழி தமிழில் எழுதும் பழக்கத்தையும், படிக்கும் திறமையையும், வாசிப்பு பழக்கத்தையும் மழுங்கடித்து விட்டன. அடுத்த புதிய தலைமுறைகளுக்கு தாய்மொழி தமிழை கடத்தி நிலை பெற செய்ய தொடர்ந்து பணியாற்றி வரும் தமிழ் அறிஞர் பெருமக்கள், தமிழ் பத்திரிகைகள் குழாம், எழுத்தாளர்கள் பெருங் கூட்டம், பிரசுரகர்த்தாக்கள் குழுமம் ஆகிய எல்லோருடைய தொடர்ந்த பெரும் உழைப்பையும், முயற்சிகளையும், **எல்லாவற்றுக்கும் மேலாக நம் தாய்மொழி தமிழை நிலை பெற்று வாழ வைக்க தமிழ் நாடு அரசும், மாண்புமிகு முதல்வர், திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் முன்னெடுக்கும் பல்வேறு பணி திட்டங்களும் செயலற்று நீர்த்துப்போகச் செய்யும் வேலையை இந்த அலைபேசிகளும், இணைய சேவையும் திறம்பட செய்து வருகின்றன.** நம் தமிழ் மொழிக்கு சமாதிக்கட்டும் வேலையை கடந்த 30 வருட காலத்தில் இந்த அலைபேசி மற்றும் இணைய அரக்கர் கொடுங்குட்டம் தொடர்ந்து வெற்றிகரமாக செய்து வந்து முடிவுரை எழுதும் காலகட்டத்தில் தான் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இந்தத் துயர நிகழ்வு தமிழ்நாட்டு பெருமக்களின் , தமிழ்நாட்டு அரசாங்கத்தின் கண்ணுக்குத் தெரியாமல், காதுகளுக்கு கேட்காமல், புலன்களால் அறிய முடியாமல் எவரும் அறிய முடியாத, உணர முடியாத செயல் நிகழ்வாகுமா? அல்லது எல்லாமும் எல்லோரும் உணர்ந்து, தெரிந்து, தெளிந்து கொண்டு உள்ளோம். ஆனால் எம் வரலாறும்,

நாகரீகமும், மொழியும் அழிந்து படுவதை தடுத்து நிறுத்த முடியாத அளவில் இன்றைய இளைய தமிழ் சமுதாயம் அலைபேசி மற்றும் இணைய வெள்ளத்தில் மூழ்கிவிட்டார்களா? அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கான வழிகளை பார்ப்போம் என்று ஒரு பகுதி தமிழின மக்களும், பொருளாதார முன்னேற்றமே குறி என மற்றொரு பகுதி தமிழினமக்களும், இன்றைய அரசியல் விற்பனர்களும் கால ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறோமோ? எம் தமிழ் மெல்ல செத்து வழக்கழிந்து போக இந்த அலைபேசி மற்றும் இணைய சுனாமி நம் அமுதத் தமிழை பலி கொள்வதை கண்டும் காணாத குருடர்களாக வாளாவிருந்து “தாயை கொன்ற தனையர்கள் என்று பெரும் பழி பாவத்தை நம் தலையில்சுமக்க போகிறோமோ? இந்தச் சூழலில் தான் அபாய சங்காக இந்த ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். 30 வருட கால அலைபேசி மற்றும் இணைய நுகர்வு பல்லாயிரம், பல்லாயிரம் ஆண்டுகள் பன்னெடுங்கால “கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி” என்ற தமிழின் பெருமையையும் அவர்தம் உயிராம் தாய்மொழி தமிழையும், நூலகங்களையும், நூலக கல்வியையும் இந்த அளவில் பலவீனம் கொள்ள செய்து அழிவு பாதையில் விரைந்து இட்டுச் செல்ல முடியும் என்பது கண்கூடாக காட்சியளிக்கிறது. இன்னும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சி என்ற பேராபத்துடன் அலைபேசியும், இணையமும் அடுத்த 30 ஆண்டுகளில் அதாவது 2055 க்குள் தமிழுக்கும், தமிழருக்கும் நிகழ்த்தப் போகும் தீங்குகளை கற்பனை செய்து பார்ப்பதற்கும் மனம் அஞ்சுகிறது. ஆயினும் விரைவு உலக வாழ்க்கையில் அலைபேசியும், இணையமும் மக்கள் வாழ்க்கையின் இன்றி அமையாத அங்கமாகவும், தவிர்க்க முடியாத, அத்தியாவசியமான நுகர் பொருளாகவும் அமைந்து நிலை பெற்று விட்டது என்பதே உண்மை நிலை நமக்கு அலைபேசிகளும், இணையமும் வேண்டும். நம் தாய்மொழி தமிழும் நம் வரலாறு, நாகரீகம் குன்றாது பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உடலில் திசுக்கள் வாழ உயிர்வளி தேவையை போன்றதல்லவா? **ஆக நூலகங்களையும், நூலக கல்வியையும், செந்தமிழ் மொழியையும் பேணிப் பாதுகாத்து சூரியனும், நிலவும் நம் பூமியும் உள்ளளவும் அழியாது இளமையுடன் எழுச்சி பெற்று நிலைபெற்று வாழ்த்திட வேண்டும். ஐயா, நல்லகண்ணு அவர்களின் இத்தகைய நல் அவாவின் காரணமாக ஐயா அவர்கள் வழிகாட்டி வழிகாட்டியபடி இந்த ஆய்வுப் பணியை கடந்த இரண்டு ஆண்டு காலமாக முன்னெடுத்து நிறைவு செய்துள்ளேன்.**

- யுத்த காலத்தில் ஒரு இனத்தின் தாய்மொழியும், நாகரிகத்தையும் அழிக்க.

1.கி. மு 48 ல் கிரேக்கர்களின் “அலெக்ஸாண்ட்ரியா” பெருநூலகம்,

2. கி. பி 1193 ல் இந்தியாவின் புராதன “நாலந்தா” பெருநூலகம்,

3. 1944 ல் போலாந்தின் தேசிய நூலகமான “கிராஷின்ஸ்கி”,

4. 1981 ல் ஈழத்தமிழர்களின் பாரம்பரிய “ஜாப்னா நகர நூலகம்” ஆகிய வரலாற்று பெரும் நூலகங்கள் அந்த இனத்தின் தாய் மொழியையும்,

வரலாற்றையும், அடையாளத்தையும், நாகரிகத்தையும் அழித்து ஒழிக்கும் நோக்கத்துடன் எரித்து சாம்பலாக்கப்பட்டன.

- ஒரு இனத்தின் தாய்மொழியை, நாகரிக வளர்ச்சியின் வரலாற்றை பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு தருவது நூலகங்கள் தாம்.

- **பூமியில் மனிதன் தோன்றிய காலம் முதல் கொண்டு பன்னெடுங்காலமாக காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த மனித இனம், அறிவு வளமும், பெரும் நாகரிக வளர்ச்சியும் அடைந்து உயர் நிலையில் வாழ்ந்து வரும் இன்றைய கால சூழ்நிலையில், நூலகங்கள் அழிந்து பட்டால் அந்த இனத்தின் தாய் மொழியும்,**

**வளமும் குன்றி மனித சமுதாயமும் நாகரிகமான கட்டுப்பாடற்ற காட்டுமிராண்டிகளாக மாறி ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ளும் நாள் விரைவில் வரும் என்பது நிச்சயம்.**

• அண்ணல் காந்தியடிகள், பண்டிட் ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், டாக்டர் அம்பேத்கார், சிங்காரவேலர், பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்ற பெரும் தலைவர்கள், கிரகாம்பெல், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், டாக்டர் அப்துல் கலாம் போன்ற விஞ்ஞானிகள் மற்றும் மு. வரதராசனார், தமிழ் தாத்தா உ.வே.சா, புதுமைப்பித்தன், கவிஞர் சுரதா, பாவலரேறு பெருஞ்சித்திரனார், பாவேந்தர் பாரதிதாசன், மொழி ஞாயிறு தேவநேய பாவணர், பிளாட்டோ, காரல் மார்ஸ்க், ஜான் மெக்கலோ, இங்கர்சால், எங்கெல்ஸ், ஜார்ஜ் பெர்னாட்ஷா, வால்டேர், ஏலன்எக்ஸ்லோஎக்ஸஸ் எண்ணற்ற அறிஞர்கள், மேதைகள் ஜார்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், லெனின் சேகுவாரா, நெல்சன் மண்டேலா, வின்ஸ்டன்சர்ச்சில், மார்ட்டின் லூதர்கிங் போன்ற உலகத் தலைவர்கள் ஆகியோரை உருவாக்கி தந்து, அந்தந்த மனித இனங்களின் தாய் மொழியை பாதுகாக்கும் காவல் அரனாக விளங்கும் சக்தி மிகுந்த **“நூலகங்கள் மற்றும் தாய்மொழி தமிழில் நூலகக்கல்வியின்”** மீது சிறப்பு கவனமும், பெரும் முக்கியத்துவமும் தந்து, புத்துயிர் கொடுப்பது நமது கடமையாகும்.

பாரத ரத்னா டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்கள் வழிகாட்டிய கோட்பாடுகளின் அடிப்படையில் அவரது இலட்சிய கனவுகளை நிறைவேற்றிட தமிழ் மொழியும், தமிழ் மக்களும் எழுச்சி பெற்று மேம்பாடு அடைந்திட தகை சால் தமிழர் ஐயா நல்லகண்ணு அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த ஆய்வு பணியை எனது உயிர் மூச்சாக எண்ணி மேற்கொண்டேன். இந்த இலக்கினை அடைந்திட முழுமுதல் தேவையான இளைய தலைமுறை மாணவர்களை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் காண **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான ஆய்வினை கடந்த 2 வருடங்களாக மேற்கொண்டு நூலக கல்வியை நமது இளைய தலைமுறை மாணவர்கள் பெறுவதற்கான முயற்சியில் தமிழ்நாட்டின் மாவட்டங்கள் தோறும் நேரில் சென்று எண்ணற்ற தமிழ் பெருமக்களை நேரில் சந்தித்து கருத்தாய்வு பணிகளை மேற்கொண்டேன். மேலும் மாவட்ட மைய பொது நூலகங்கள், கிளை நூலகங்கள், கிராம நூலகங்கள் மற்றும் சென்னை கன்னிமாரா மாநில மைய நூலகம், சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் ஆகிய நூலகங்களுக்கு நேரில்

சென்று கள ஆய்வு பணியை மேற்கொண்டேன். இதன் அடிப்படையில் கிடைத்த கருத்தாக்கங்களின் பலனாக **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான திட்டத்தின் ஆய்வு அறிக்கையை உருவாக்கி இன்று **தகைசால் தமிழர் ஐயா நல்லகண்ணு அவர்களின் கரங்களிலும், தமிழ்நாட்டின் முதல் தமிழ் மகன் மாண்புமிகு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கும் மற்றும் தமிழ் பெருமக்கள் அனைவரின் பெருமக்களின் கவனத்திற்கும் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்**

**காரணி-2**

## தமிழ்நாடு மக்கள் மீதும், இளைய தலைமுறை மாணவர் பெருகூட்டத்தின் மீதும் ஆங்கில கல்வியின் தாக்கம்

தமிழை அழிக்க வந்த நஞ்சுகள் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வட மாநிலங்களில் இருந்து ஆரியர்கள் தமிழ்நாட்டில் ஊடுருவி தமிழரின் மதங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட ஆன்மீகம், மதம், கடவுள் என்ற வேறுபட்ட கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளை புகுத்தி ஆதிக்கம் செலுத்தி வந்த காலத்தில் தான் முதல் நஞ்சு நம் ஆதி தமிழில் கலந்தது.

சமஸ்கிருதமும், வடமொழியும் தமிழை தாக்கத் தொடங்கியது. எண்ணற்ற சமஸ்கிருத வடமொழி சொற்கள் பழக்கத்தில் நடைமுறையில் தமிழுடன் சேர்ந்து மக்கள் கையாள துவங்கினர்.

பல்லாயிரம் வருடங்களாக முயற்சித்தும் ஆரியர் கூட்டத்தால், வட நாட்டவரால், வடமொழிகளால், தமிழையும், தமிழரையும், அழிக்க முடியாது, அடக்கி ஆள முடியாது போயிற்று. தமிழும் தமிழரும் பல்லாயிரம் ஆண்டுகளாக தகமையுடன் வாழ்ந்து வந்தோம். ஆரிய ஆதிக்கத்தையும் முறியடித்து நம் தமிழ் மொழி தன்னை காத்து நிலை நிறுத்திக் கொண்டு தனித்துவமான தொல்மொழியாக விளங்கியது.

பின்னர் கி.பி 1400க்கு பின் இஸ்லாமியரின் படையெடுப்பு இஸ்லாமியரின் ஆட்சிக்கு தமிழ்நாடு ஆட்பட்ட கி.பி 1800 வரையான காலகட்டத்தில் இஸ்லாமிய அரபு மொழியினால் தமிழ் மொழிக்கு எந்த கேடும் விளைந்து விடவில்லை. தமிழுக்கு அரபு மொழி கலப்பு ஏற்படவில்லை. இஸ்லாமிய மதமாற்றம் அடைந்த நம் தமிழ் மக்கள் அரபிக் மொழியை தங்களது வழிபாட்டு மொழியாகவும், பிற்காலங்களில் 30 சதவீத இஸ்லாம் மக்கள் தங்கள் வீடுகளில் பேச்சு மொழியாக கடைபிடித்தனர் ஆயினும் 100% முஸ்லிம் மக்கள் தமிழ் மொழி பேசுபவர்களாகவே இருந்து வருகின்றன.

வேற்று மொழி அரபியர் கூட்டத்திடமும், துருக்கி சுல்தான்களிடமும் 400 ஆண்டுகள் அடிமைப்பட்டு கிடந்த போதும் அவர்களின் அரபு மொழி ஆதிக்கம் அமுத தமிழை தொட்டு பார்க்க கூட முடியவில்லை. தமிழ் கூறு நல்லுலகில் வழக்கும் செய்யுளும், இலக்கணமும், எழுத்தும், சொல்லும், பொருளும் மாறவே மாறவில்லை. மாறாக நம் தமிழ் மொழி வாழையடி வாழையாக காலம் மாறினாலும், காட்சிகள் மாறினாலும், ஆட்சிகள் மாறினாலும், தமிழ் மொழியின தொன்மையும், சிறப்பும், பெருமையும் மிகுந்து பட்டு வாழ்ந்து வந்தது என்பது மொழியியல் ஆய்வாளர்களுக்கும், வியப்பை தரும் விசயமாக உள்ளது. அத்தகைய மொழி சார் கூறுகளை நுட்பமாகக் கொண்டதே பாவேந்தர் பாரதிதாசன் “தமிழுக்கும் அமுதென்று பெயர்” என்று உணர்ந்து பாடிய நம் செந்தமிழ் ஆகும்.

17ம் நூற்றாண்டின் ஆரம்பம் 1608 ல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் கப்பல் முதன்முதலாக குஜராத் சூரத் நகரை வந்து சேர்ந்தது. வணிகம் செய்ய ஆரம்பித்த காலம் முதல் ஐரோப்பி நாகரிகத்தின் தாக்கம் தொடங்கியது. 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி நிறுவப்படும் முன்னரே தமிழ்நாட்டின் (கேரளம் இணைந்த) கிழக்கு கடற்கரையிலும், மேற்கு கடற்கரையிலும் ஆங்கிலேயர் நாகரிகம் வணிகம் என்ற பெயரால் ஊடுருவி நிலை பெற்று விட்டிருந்தனர். ஆங்கிலேயரின் அரசியல் ஆட்சி முறைகள், வணிக சட்டங்கள், ஆங்கில கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பங்கள், ஆங்கிலேயரின் விளையாட்டு கிரிக்கெட், நம் தமிழ்நாட்டை, தமிழ் மக்களை முழுவதும் ஆக்கிரமித்து மூழ்கடித்தன. ஆங்கிலேயரது கலைகள், நடனங்கள், இசை, மது, தேநீர் அருந்தும் பழக்கம் என ஆங்கிலேய கலாச்சாரம் விஸ்வரூபம் எடுத்து சில நூற்றாண்டுகள் தமிழ் மண்ணில் நடனமாடின. 1947 ல் ஆங்கிலேயர் வெளியேறிய போது தமிழர் கலைகளும், நாட்டியமும், இசை நாகரீகம், தமிழரின் தொன்று தொட்டு வந்த பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மாறாது காப்பாற்றப்பட்டிருந்தது. மகா கவி பாரதியார் முதல் குன்றக்குடி அடிகளார் வரை ஆயிரம் ஆயிரம் தமிழ் விற்பனர்கள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நம் தமிழ் மொழி சற்றேனும் நலம் குன்றாது பேணி பாதுகாத்து வளர்ந்து வந்தனர்.

ஆங்கிலேய ஆட்சி காலத்தில் மெக்கலோ பிரபு ஆழ்ந்து சிந்தித்து பரிந்துரை செய்தபடி ஆங்கில அரசு மேனாட்டு ஆங்கில கல்வியை நம் மக்களுக்கு அளித்ததன் விளைவு “ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம்” என்பதுபோல். நம் தமிழை வேரோடும் வேரடி, மண்ணோடும் அழிந்து ஒழிக்கும் பணியை இந்த ஆங்கில கல்வி முறை துரிதமாக யாரும்

உணர முடியாத மவுன புரட்சியாக அணு அணுவாக உள் நுழைந்து வெற்றிகரமாக செய்து வருகிறது. கடந்த 75 வருடங்களில் ஆங்கில கல்வி ஆலமரமாய் கிளை விட்டு பரவி நாடு முழுவதிலும் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொரு தமிழரின் நாவிலும் மூளைத்திசுக்களிலும் புகுந்து குடி கொண்டு விட்டது பிற மாநிலத்தரோடு பெரும்பாலான பிற நாட்டவரோடு உரையாட, உறவாட ஆங்கிலம் இன்றியமையாத இணைப்பு மொழியாக உள்ளது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி யுகத்தில் வாழும் நாம் ஆங்கிலத்தை புறம் தள்ளவோ, ஒதுக்கிவிடவோ முடியாது என்பது நிச்சயமான உண்மையாக உள்ளது. பொருளாதார தேடலை, வளர்ச்சியை நோக்கி செல்லும் தமிழ் சமுதாய மக்களிடம் இருந்து பொருளாதார தேடலுக்கான அடிப்படை கருவியே "ஆங்கிலக் கல்வி" என்றாகியிருக்கும். நடைமுறை சூழலில் ஆங்கிலத்தை விட்டு விடுங்கள் என்று யாரையும் யாரும் கூவி அழைப்பது இயலாத அறிவற்ற செயலாக கருதப்படும் ஆக நமக்கு ஆங்கிலம் வேண்டும் இன்னும் நிறைய வேண்டும். இன்னும் திறம்பட வேண்டும் இதுவே உலக சூழியல்.

உண்மையில் மொழி உணர்ச்சி என்பது அழிக்க முடியாதது. எவ்வளவு பெரிய ஆதிக்க சக்தியாலும் அந்த இனத்தின் தாய் மொழி உணர்வை நீண்ட காலத்திற்கு அடக்கி வைக்க முடியாது. வெளியில் தெரியாது உள்ளேயே எரிந்து கொண்டிருக்கும் எரிமலையைப் போல தாய்மொழி உணர்வு பெரு நெருப்பாகும். எப்போது வேண்டுமானாலும் வெடித்து வெளி கிளம்பும். அந்த வெப்பத்தில் எத்தகைய இந்தி, சமஸ்கிருதம் போன்ற எந்த வித பிற மொழிகளின் ஆதிக்க சக்தியாக இருந்தாலும் எரிந்து சாம்பலாகிவிடும் இது உலக வரலாறு நமக்கு காட்டும் பாடம். ஆயினும் ஒரு இனம் வணிக, கணித கலை, அறிவியல், விஞ்ஞான தொழில்நுட்பங்கள் அனைத்தையும் தன்னுள் கொண்ட ஆங்கிலம்

மொழியின் பொருளாதார மேம்பட்ட பயன்பாட்டினாலும், பிற விஞ்ஞான தொழில்நுட்ப பயன்பாடுகளான அலைபேசி, இணைய வசதிகளாலும் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு தன் தாய்மொழி உணர்வு மழுங்கி போனால், அற்று போனால் அந்த இனத்தின் அடையாளம், வரலாறு என்ன ஆகும் என்ற பெரிய கேள்வி நம் தமிழ் இனத்திற்கு, நம் தாய்மொழி தமிழுக்கு நேர்ந்துள்ளதை துல்லியமான எடை போட்டு சொல்ல துணிந்திருப்பதே இந்த ஆய்வறிக்கையின் நிலைப்பாடாகும்.

வளர்ந்து வரும் ஆங்கில கல்வியின் பலத்தாலும், வளத்தினாலும், நம் தாய்மொழி தமிழ் புறக்கணிக்கப்பட்டு விடுமோ? என்ற மனக்கவலையினாலும், வேதனையினாலும், ஐயா நல்லகண்ணு அவர்கள் அளித்திட்ட கட்டளையை தலை மேற்கொண்டு இந்த கள ஆய்வு பணியை சென்ற ஜனவரி 2023 முதல் மேற்கொண்டேன். கள ஆய்வுப் பணியில் கிடைத்த தரவுகளையெல்லாம் ஒன்று சேர்த்து **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான தீர்வுகள் என்னவென்றும், முன்னெடுத்து நடைமுறைப்படுத்த வேண்டிய செயல்பாடுகள் குறித்தும் கள ஆய்வில் கிடைக்கப் பெற்ற தரவுகள் மற்றும் எண்ணற்ற தமிழ் பெருமக்களின் கருத்தாக்கங்களின் கூட்டாகவே இந்த ஆய்வறிக்கையை தயார் செய்துள்ளேன்.

தமிழ்நாடு கல்வி அமைச்சக தரவுகள் படி இன்று தமிழ்நாட்டில் மாநில கல்வி பாடத்திட்டத்தின் கீழ் படித்து வரும் மாணவ, மாணவியர் மொத்த எண்ணிக்கை தோராயமாக 1.4 கோடியாகயுள்ளது. அரசு தரவுகளின் படி அரசுப் பள்ளிகளில் பயிலும் 54,71,000 மாணவர்களில் 30 சதவீதமானவர்கள் ஆங்கில வழியிலும், 70% மாணவர்கள் தமிழ் மொழியிலும் கல்வி கற்று வருகின்றனர். இன்றைய பெரும்பாலான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் எதிர்கால வேலை வாய்ப்பு, தொழில் வாய்ப்பு, பொருளாதார உயர்வு ஆங்கில கல்வி மூலமே கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக கருதுகின்றார்கள். இத்தகைய பெரும்பான்மையான பெற்றோர்களின் தேவையை நிறைவேற்றும் விதமாக

மேலும் அரசு பள்ளிகளில் அதிக அளவில் ஆங்கில வழிக் கல்வியை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசு கல்வித்துறை

முன்னெடுத்துள்ளது. அரசு உதவி பெறும் தனியார் பதின்ம பள்ளிகளில் 2024 அரசு தரவுகளின் படி 30,60,601 மாணவர்களும், சுயநிதி தனியார் மெட்ரிக் பள்ளிகளில் தோரயமாக மொத்தம் 56,00,006 மாணவர்களும் ஆங்கில வழியில் கல்வியை கற்று வருகிறார்கள்.

ஆக தமிழ்நாடு அரசின் மாநில கல்வி திட்டத்தின் கீழ் கல்வி பயிலும் 1.4 கோடி மாணவ, மாணவியர்களில் தோராயமாக 1 கோடி பேர் ஆங்கில வழியில் கல்வியை பயில்கின்றனர். இவர்களுக்கு தமிழ் பாடம் மட்டும் +2 வரை உள்ளது. குறிப்பிட்ட அளவில் மட்டுமே சொற்றொடர்களையும், தரவுகளையும் கொண்ட தமிழ் பாடம் மட்டும் பெருமொழி வளம் படைத்த தமிழ் மொழியை முழுமையாக இந்த மாணவ மாணவியருக்கு கற்றுத் தருவதில் மிகக் குறைந்த அளவிலேயே தாய் மொழி எழுதும், படிக்கும் ஆற்றலை தர முடிகிறது. வருடம் தோறும் மாநிலக் கல்வி திட்டத்தின் கீழ் +2 முடித்து வெளிவரும் மாணவர்களின் எண்ணிக்கை 7.25 லட்சமாக உள்ளது. இவர்களில் 80 சதவீதம் தமிழ் மொழியில் எழுதும், படிக்கும் பெரிதும் திறன் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். CBSE பாடத்திட்டத்தின் கீழ் +2 தேர்வு முடித்து வரும் சுமார் 75 ஆயிரம் மாணவர்களில் 100 சதவீத பேர் தாய் மொழி தமிழை எழுத, படிக்க முற்றிலும் திறனற்றவர்களாக இருக்கிறார்கள். +2 முடித்த பின் உயர்நிலை படிப்புகளான பல்தொழில் நுட்ப கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் போன்ற பட்டய படிப்புகளையும், முதுகலை பட்டைய படிப்புகளையும், ஆராய்ச்சி படிப்புகளையும் ஆங்கில மொழி வழி கல்வியாகவே கல்விப் பயில்கின்றார்கள். ஆக கல்வியின் உயர்நிலைகளில் தமிழில் எழுதுவதற்கோ, படிப்பதற்கோ வாய்ப்பு அற்று போய் தாய்மொழி தமிழில் எழுத, படிக்க மிகவும் திறன் குன்றியவர்களாகவே வெளி வருகின்றனர். வருடம்தோறும் பல் தொழில் நுட்ப கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகிய உயர்நிலை கல்விக்கூடங்களில் கல்வி கற்று வெளிவரும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை தோராயமாக 6 லட்சமாக உள்ளது. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் அதாவது 90 சதவீதம் பேர்கள் தாய்மொழி தமிழில் எழுத, படிக்க மிகவும் திறன்

குறைந்தவர்களாக வெளி வருகின்றனர். கடந்த 30 வருடங்களில் ஆங்கில கல்வியின் தேவை அதிகரித்து, வரும் நிலையில் உயர்நிலை கல்வி படித்து வெளிவரும் லட்சக்கணக்கான இன்றைய தலைமுறை கூட்டத்தினரின் தாய் மொழி தமிழ் எழுதும், படிக்கும் திறன் மீது பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் இவர்களின் தமிழ் வாசிப்பு பழக்கம் அறவே அற்று போய்விட்டது. தமிழ் பத்திரிகைகள், வார மாத இதழ்கள், தமிழ் நூல்கள் வாசிக்கும் பழக்கம் 1995 பின்னர் பிறந்த தலைமுறையினரிடம் குறைந்து குறைந்து 0 என்ற நிலைக்கு வந்துள்ளது. அலைபேசிகளிலும் வாசிக்கும் சொற்றொடர்கள் வாக்கியங்கள், காணொளிகள் பெரும்பான்மையானவை அதிக அளவில் ஆங்கில கலப்புடன் உள்ளன. பெருமளவில் தமிழில் சொல்ல நினைப்பதை மற்றொருவருக்கு உணர்த்த தெரியப்படுத்த வேண்டிய விஷயங்களை தமிழை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பும் பழக்கம் அதிகரித்து உள்ளது.

இன்று +2 வரையில் பள்ளி பயின்று வரும் பருவ மாணவர்கள் 1.40 கோடி பேரில் தோராயமாக 40 லட்சம் அரசு பள்ளி மாணவர்கள் தமிழ் வழியில் கல்வி கற்று வருவது சற்று ஆறுதலாகவும், தாய் மொழி தமிழை எழுத, படிக்க தெரிந்த கூட்டம் தொடரும் என்ற நம்பிக்கையை தருகிறது. ஆயினும் எதிர்வரும் காலங்களில் பெற்றோர்கள் அனைவருமே தங்கள் குழந்தைகளுக்கு ஆங்கில வழிக் கல்வியே தேர்ந்தெடுக்க முனைவார்கள் என்பது சாத்திய கூறாக உள்ள நிலையில் தமிழ்நாடு அரசு பள்ளிகள் அனைத்தும் ஆங்கில வழிக் கல்வியை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் காலம் விரைவில் வந்துவிடும் என்பதே

உண்மையான நிலையாக உள்ளது. கடந்த 30 வருடங்கால தலைமுறையினரிடம் தாய்மொழி தமிழில் எழுதும் திறன், வாசிப்புத் திறன் குறைந்ததை போல பன் மடங்கு வேகத்தில் அடுத்த 30 வருட கால தலைமுறைகளிடம் தாய்மொழி தமிழில் எழுதும் பழக்கம், வாசிப்பு பழக்கம் குறைந்து, குறைந்து அறவே அற்று போய்விடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

1950 -1990 வரையிலுள்ள காலத்தில் பிறந்து வாழ்ந்து வரும் தமிழை நன்கு எழுதும், படிக்கும் திறன்மிக்க பெருமக்களில் பெரும்பாலானோர்

அலைபேசி, வண்ணத் தொலைக்காட்சி, சினிமா இன்னும் பிற புதிய புதிய விஷயங்களால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு சிறு எண்ணிக்கையிலானவர்களே தமிழ்நாடு அரசு பொது நூலகங்களில் நூல்களை வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்கும் பழக்கத்தையும் தமிழ் தினசரி பத்திரிகைகளையும், வார மாத தமிழ் பருவ இதழ்களை படிக்கும் பழக்கத்தையும் இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றார்கள்.

ஆயினும் இந்த சிறிய எண்ணிக்கையிலும் பெரும்பாலானோர் கதைகள், நாவல்களையே நாடி படித்து வருகின்றனர். ஆக நூலக தந்தை ரங்கநாதன் தொகுத்தளித்த கோலன் பட்டியலில் படி தமிழ்நாடு அரசு நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கோடி கணக்கில்லான அறிவார்ந்த தமிழ் நூல்களை படிக்கும் தமிழர் கூட்டம் அருகியுள்ளது என்பதே நடைமுறையில் ஏற்பட்டுள்ள நிதர்சன நிலை இது **“நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சி”** ஆகியவற்றின் அடிப்படை தத்துவமான ஐந்து நூலக கோட்பாடுகளின் அழிவின் ஆரம்ப நிலை என்பது கூட அல்ல இந்த நிலை அழிவின் விளிம்பு நிலை என்றே தமிழ் கூறும் நல் உலகும், தமிழ் பெருமக்களும் தமிழ்நாடு அரசும் உணர்ந்து கொண்டு நம் தாய்மொழி தமிழுக்கு ஏற்படப்போகும் தாக்கத்தின் அளவை தெரிந்து கொண்டு நம்மை நாமே காத்திட வேண்டிய வழிவகைகளை உடனடியாக காண வேண்டிய தருணம் இது.

ஐயா தகைசால் தமிழர், நல்லகண்ணு ஐயா அவர்களின் உள்ளுணர்வு உணர்த்தியதின் விளைவாகவே அவர்கள் வழிகாட்டிய படி நான் இந்த ஆய்வு பயணத்தை மேற்கொள்ள முடிந்தது என்பதும் எண்ணற்ற தமிழர் பெருமக்களை சந்தித்து பெற்ற கருத்தாக்கங்களின் வழியே நம் தமிழும் நூலகமும், தமிழர் மாண்பும் காக்கப்பட தீர்வு கிடைத்தது. என்பதும் தந்தை பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் தமிழுக்கு, தமிழருக்கு செய்திட்ட பணியில் கோடியில் ஒரு பங்காவது செய்திட எனக்கு வழி கிடைத்தது என்பதே பேருவகை கொள்வதாக உள்ளது.

**காரணி-3**

**வண்ணமய தொலைக்காட்சி**

1920 ல் முதன்முதலாக ஒற்றை வண்ண கருப்பு, வெள்ளை தொலைக்காட்சிகளை காண்பிக்கும் தொலைக்காட்சி பெட்டிகள் நடைமுறைக்கு வந்தன. 1950ல் மக்கள் மத்தியில் கருத்தை உருவாக்குவதில், மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் தொலைக்காட்சி

ஊடகம் முன்னிலை வகித்தது. 1970 முதல் வண்ணமய தொலைக்காட்சி பெட்டிகள் அறிமுகமாயின. அண்மை காலங்களில் இணையம் மூலமாகவும் தொலைக்காட்சி காண வசதி வந்துள்ளது. இன்று வண்ணமயமான தொலைக்காட்சி பெட்டிகள் இல்லாத வீடே இல்லை என்ற நிலையில் தொலைக்காட்சி பெட்டிகள் நாட்டின் அனைவரது இல்லங்களில் புகுந்து ஆட்சி செய்கின்றன. தொலைக்காட்சி மூலமாக வரும் திரைப்படங்கள், தொடர் நாடகங்கள், மற்றும் எண்ணில் அடங்காத பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவை மக்கள் மனதை கொள்ளை கொண்டு கட்டிப்போட்டுள்ளன. இந்த தொலைக்காட்சி பெட்டிகள் 5 வயது குழந்தை முதல் 90 வயது வரை உள்ள முதியவரின் பொழுதை வீணே கழிப்பதற்கு

அவரவர் வீட்டிலேயே உறுதுணையாக இருந்து சேவை புரிகின்றன. குறிப்பாக 25 வயதுக்கு மேற்பட்ட இல்லத்தரசிகள் மேலும் வேலையிலும், தொழிலிலும் இருந்து ஓய்வு பெற்ற முதியவர்கள் ஆகியோரது வாழ்க்கையின் பொன்னான நேரங்களை ஒவ்வொரு வீட்டிலும் தொலைக்காட்சி பெட்டிகள் மென்று தின்று விடுகின்றன. ஆகவே பகல் நேரங்களில் வேலைக்குப் போகாமல் இல்லத்தரசிகளாக வீட்டின் பொறுப்பை கவனித்துக் கொள்ளும் 25 முதல் 60 வயதிற்குட்பட்ட மக்கள் தொகை எண்ணிக்கை தோராயமாக அதாவது மொத்த மகளிர் மக்கள் தொகையில் 50 சதவீத பேர் இருப்பார்கள் மகளிர் சதவீத 25 to 60 வயதுக்குட்பட்ட ஆண், பெண் கணக்குப்படி மக்கள் தொகை தோராயமாக 4 கோடியே 20 லட்சத்தில் 2 கோடியே 10 லட்சம் மகளிர் மக்கள் தொகை என்று எடுத்துக் கொண்டால் இவர்களில் தோராயமாக 50% மகளிர் மட்டும் அதாவது ஒரு கோடியே 5 லட்சம் பேர் இல்லத்தரசிகளாக இருப்பார்கள். இவர்கள் அனைவரும் உணவு சமைப்பது, துணி மணிகளை துவைப்பது, வீட்டிற்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள், அத்தியாவசிய பொருட்கள் ஆகியவற்றை கடைக்கு சென்று வாங்குவது, தமிழ்நாடு அரசு நுகர்ப்பொருள் நியாய விலை கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்குவது, குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வது மீண்டும் அழைத்து வருவது போன்ற வீட்டு நிர்வாக பணிகளை முடித்த பின் வண்ணமய தொலைக்காட்சி பெட்டிகள் ஒளிபரப்பப்படும் பொழுது போக்கு அம்சங்களில் மூழ்கி விடுகின்றார்கள்.

எனவே இவர்கள் அனைவருக்கும் தினசரி தமிழ் பத்திரிகைகள், வார மாத பருவ இதழ்கள், தமிழ் நூல்கள் ஆகியவற்றை படிப்பதற்கு நேரம் அற்றுப் போய் விடுகிறது. மேலும் இவர்கள் தமிழ்நாடு அரசு பொது நூலகங்களுக்கு சென்று தமிழ் நூல்களை வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்கும் வாய்ப்பும், பழக்கமும், நேரமும் முற்றிலும் இல்லாமல் போய்விட்டது. இல்லங்களில் ஓய்வாக வாழ்ந்து வரும் 60 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண்களின் எண்ணிக்கை சதவீத கணக்குப்படி 1 கோடி பேர் என்று எடுத்துக் கொண்டால் இவர்களிலும் பெரும்பான்மையோர் தொலைக்காட்சியின் பொழுதுபோக்கு அம்சங்களால் கவர்ந்து இழுக்கப்பட்டு காலம் கழித்து வருவதாகவே தெரிகிறது. இவர்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மக்கள் அறிவு சார்ந்த காரியங்களிலும், சேவைகளிலும் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பது ஆறுதல் அளிக்க கூடியதாக இருக்கிறது. இருப்பினும் இல்லம் தோறும் இந்த வண்ணமய தொலைக்காட்சி பெட்டிகளின் ஆளுமை பெரும்பாலான இல்லத்தரசிகள் மற்றும் வீட்டில் ஓய்வெடுக்கும் முதியோர் ஆகிய அனைவரது வாசிப்பு பழக்கத்தை பெரும் சதவீத கணக்கில் எடுத்துக் கொண்டு விட்டன என்பதே உண்மை நிலையாக உள்ளது.

**காரணி-4**

**திரைப்படங்களால் தமிழ் மீதும், தமிழ் மக்கள் மீதும் ஏற்பட்டுள்ள தாக்கம்**

பெரும்பான்மை மக்களின் மனதை கொள்ளை கொண்ட திரை உலக வரலாறு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உதயமானது. இங்கிலாந்தில் 1830 -1910 காலகட்டத்தில் 16 படங்களை கொண்ட திரைசுருள் ஒரு வினாடியில் சுழற்றப்பட்டு ஒளியில்லா அசையும் ஒளி காட்சி படங்கள் கொண்டுவரப்பட்டன. பின்னர் ஒரு வினாடியில் 24-40 படங்களை கொண்டு திரைசுருள் சுழற்றப்பட்டு திரைப்படம் காண்பிப்பது நடைமுறைக்கு வந்தன. ஏப்ரல் 15/1923 நியூசிலாந்து ரிவோலி திரையரங்கில் ஒலியுடன் கூடிய அசையும் திரைப்படம் முதன்முதலாக திரையிடப்பட்டது.

1975 வரையிலான காலகட்டத்தில் வரலாறு, சங்கீதம், மொழி, பண்பாடு, போர்கள் சார்ந்த திரைப்படங்களே பெரும்பாலும் திரைக்கு வந்தன. 1975-1995 சமூக மாறுதல்கள், நாகரீக நவீனங்கள், கேளிக்கை அம்சங்கள் திரைப்படங்களில் இடம்பிடித்தன.

1995-2024 வரையிலான காலங்களில் கேளிக்கை அம்சங்களும், இனக்கவர்ச்சி மிகுந்த கதைகளும், வன்முறை, காதல் வக்கிர உணர்வுகள் ஆகிய வாழ்வின் சிறு பகுதிகளை மிகைப்படுத்தி காண்பிக்கும் திரைப்படங்களாக உருவெடுத்து இளைய தலைமுறை மக்கள் மனங்களை ஆக்கிரமித்து கொண்டுள்ளன. இந்த மாயவலையின் கருத்தாக்கங்களான திரை இயலாலர்களின் ஆயிரம் ஆயிரம் கற்பனை திரை ஓவியங்களின் தொடர்ந்த வெளியீடுகள் இக்கால இளைய தலைமுறையினர் மனங்களில் வேறுபட்ட மனமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பது நிகழ்கால வரலாறு.

இதன் விளைவு 1995க்கு முன் பிறந்து வாழ்ந்து வரும் மக்கள் கூட்டத்திற்கும் 1995க்கு பிந்தைய இளைய தலைமுறை கூட்டத்திற்கும் பார்த்து உணரும், கேட்டு உணரும் உணர்வு நிலை மிகவும் மேம்பட்டு உள்ளது. இந்த உணர்வு மனித சமுதாயத்தின் எந்த இனத்திலும் மொழி தோன்றும்முன் மனித இனத்தின் எந்த ஒரு இன கூட்டமும் ஒரு இடத்தில் நிலைபெறாமல் மற்ற மிருகங்களுடன் ஒரு அங்கமாக காடுகளில் நகர்ந்து நகர்ந்து வாழ்ந்து வந்த காலத்தில் மேலோங்கியிருந்த உணர்வு அம்சமாகும்.

ஒலியிலும், ஒலிகோர்வைகளாலும் ஒரு இனத்தின் மனிதன் தான் நினைப்பதை, தான் விரும்புவதை, தான் பிறருக்கு உணர்த்த வேண்டியதை தன் இனத்தின் மற்றொரு மனிதனுக்கு உணர்த்த பல லட்சம் வருடங்கள் பேசி பேசி வடியெடுத்ததே அந்த இனத்தின் தாய் மொழி.

**அந்த தாய் மொழி எழுத்து வடிவங்களிலும் பெற்று நிலை பெற பல்லாயிரம் ஆண்டுகள் ஆகின. ஒரு இனத்தின் தாய் மொழியின் இருப்பு நிலை பெற அந்த இன மக்கள் தங்கள் உணர்வதை எழுத்து வடிவில் வடிக்கும் ஆற்றல் உடையவர்களாக இருப்பதும், எழுத்து வடிவம் பெற்ற தங்களது உணர்வுகளை அந்த மொழி இன மக்கள் அனைவரும் அந்த எழுத்து வடிவங்களை பார்த்து புரிந்து, உணர்ந்து கொள்ளும் அறிவு பெற்றவர்களாக இருப்பதும், மேலும் தாய் மொழியில் உள்ள நூல்களை படித்து, வாசித்து, தானும் புரிந்து கொண்டு அனைவருக்கும் புரியும் வண்ணம் அறிவிக்கும், தெரிவிக்கும் திறன் உடையவர்களாக விளங்குவதும் தொடரி நிகழ்வாக இடையராது தொடர்வதே இன்றியமையாத காரணிகளாக விளங்கும். .**

திரைப்படங்கள் போன்ற புற காரணிகளின் 100 ஆண்டு கால தாக்கத்தினாலும், அலைபேசி, இணைய சேவை போன்ற புற காரணிகளின் 30 ஆண்டுகால தாக்கத்தினாலும் பல்லாயிரம் பல்லாயிரம் வருடங்களின் உணர்வு கொந்தளிப்பால், உழைப்பால், பயிற்சியினால் தொடர்ந்த முயற்சியால் நம் தமிழினம் பெற்ற பெரும் பேரான நம் தாய்மொழி தமிழ் என்றென்றும் நிலைத்திருக்க தேவையான அடிப்படை காரணிகளான, உணர்வதை, எண்ணுவதை தமிழ் மொழியில் எழுதும் ஆற்றல், எழுத்து வடிவங்களை பார்த்து புரிந்து கொண்டு படிக்கும் ஆற்றல், அதனை வாசித்து பிறருக்கு புலப்படுத்தும் ஆற்றல் ஆகிய காரணிகளில் தமிழ் மக்கள் வளம் குன்றி, நலம் குன்றி, பலகீனப்பட்டு, பழுதுபட்டு போவதென்பது தமிழ் இனத்திற்கு பெரும் அபாயகரமான, அவமானகரமான நிகழ்வாகும்.

**காரணி-5**

## இளைய தலைமுறை மக்களின் காலத்தை விரயம் செய்யும் பொழுதுபோக்கு அம்சங்கள்

இன்று மனிதன் தன் இனத்தை தானே அழிக்கும் அழிவுப்பாதையிலும் வீழ்ச்சியிலும் சென்றுகொண்டிருக்கிறான். மனித இனத்தை பாதுகாப்பதற்கு உயிர்காக்கும் மருந்துகளையும் பாதுகாப்பு அரண்களையும் ஏற்படுத்திக் கொள்ளும் அதே நேரத்தில் மனித இனத்தை அழிப்பதற்கும் சீர்கேட்டிற்கும் பலவிதமான நவீன பொருட்களையும் பொழுது போக்கு சாதனங்களையும் கணக்கிடலங்காமல் உருவாக்க தொடங்கியுள்ளான்.

அதிலே சிறுவர்களின் மனதில் நஞ்சை பாய்ச்சக்கூடிய சிந்தனையை மழுங்கக்கூடிய ஒரு பயங்கர ஆயுதம் தான் சிறுவர்களின் பொழுது போக்கு அம்சங்கள். அது வீடியோ கேம்கள், வீர தீர சாகசங்களை செய்யும் ஹீரோக்களின் தொடர்கள், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகள் என்று போதை தரும் பொழுது போக்குளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவைகலெல்லாம் சிறுவர்களின் அறிவை பட்டைதீட்டுவதல்ல. அறிவை மழுங்கச் செய்து அவர்களை பைத்தியமாக்கும் ஹெராயின் போன்ற போதைப் பொருட்களின் பட்டியலில் கூட சேர்த்து கொள்ளலாம்.

இதன் விளைவுகள் அறிவை மழுங்கச் செய்வதைத் தாண்டி ஒழுக்கச் சீரழிவு குடும்பச் சீரழிவு உயிர்பலி என்ற படுபாதாளத்தில் தள்ளிவிடுகின்றது. வீடியோ கேம்களில் கார்ட்டூன்களை நிஜ மனிதர்களாக பாவித்து துப்பாக்கி வெடிகுண்டு போன்ற கலாச்சாரங்கள் உருவாக்கப்படுகிறது. இதனால் அவர்கள் தங்கள் நடைமுறை வாழ்விலும் அதை செய்து பார்க்க தூண்டப்படுகிறார்கள். அமெரிக்க போன்ற மேலை நாடுகளில் சிறுவர்களிடத்தில் துப்பாக்கி கலாச்சாரம் பெருகி சிறுவயதிலேயே தனது சகவகுப்பு மாணவர்களையே கொலை செய்யும் பயங்கரமும் அரங்கேறியுள்ளது..இதனால் அந்த விளையாட்டுகளுக்கு அந்நாடுகளில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டிலும் இந்த விளையாட்டுகளுக்கென்று தனி கம்பயூட்டர் மையங்கள் வைத்து சிறுவர்களை சீரழிவை நோக்கி அழைக்கின்றனர். இது ஒருபுறமிருக்க கற்பனைக்கு எட்டாத சாகச வீரர்களின் தொடர்கள், கார்ட்டூன் தொடர்களை பார்த்த குழந்தைகள் அந்த போலி சாகசத்தை உண்மையென கருதி அதையும் தங்களுடைய வாழ்வில் செய்து பார்க்க வேண்டும் என்று துணிகிறார்கள். இதனால் ஏற்படும் இழப்புகள் ஏராளம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு அரசு தொலைக் காட்சியில் சக்திமான் என்ற தொடரைப் பார்த்து மாடியிலிருந்து குதித்து இறந்த சிறுவர்கள் பலர். இன்றும் இது போன்ற சாகசவீரர்களின் தொடர்கள் கார்ட்டூன் தொலைக்காட்சிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உடலுக்கு ஆரோக்கியம் தருவதாக சொல்லக்கூடிய கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளால் குழந்தைகளின் படிப்புரத்தரமும் சிந்தனைதிறனும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

டிவி, மொபைலின் தாக்கம்தான் இன்றைய குழந்தைகளின் அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது. பிறந்து சில மாதங்களே ஆன குழந்தைக்கு மொபைலில் தாலாட்டுப் பாட்டு இசைக்கவிட்டு தூங்க வைக்கும் சமூகமாகிவிட்டோம் நாம். இன்டர்நெட் மலிவான கட்டணத்தில் வந்தபிறகு வைஃபை, ஸ்மார்ட் டிவி என அத்தனையும் டிவியில் பார்க்கத் துவங்கிவிட்டோம்.குழந்தைகளுக்கு உணவு கூட டிவியில் ரைம்ஸ், கார்ட்டூன் சேனல்கள் காட்டியே ஊட்டப்படுகிறது. பிள்ளைகளும் இதனால் அடம் பிடிக்காமல் சாப்பிடுவது, பெற்றோரைத் தொல்லை பண்ணாமல் இருப்பது என இருந்துவிடுவதால் இந்தக் கலாசாரம் பெருகி வருவதைத் தவிர்க்க முடிவதில்லை. டிவி நம் குழந்தைகளை மகிழ்விக்க செய்தாலும், இதனால் குழந்தைகள் மன ரீதியாக பாதிக்கப்படுவதாக ஆய்வுகள்

தெரிவிக்கின்றன. மேலும் குழந்தை வளர வளர, அதிக நேரம் டிவி பார்ப்பதால் வாசிப்பது, படிப்பது,

விளையாடுதல், உடற்பயிற்சி, குடும்பம், சமூகத் தொடர்பு போன்ற முக்கியமான செயல்கள் பாதிக்கப்படுகின்றன.

குறிப்பாக டிவி கார்ட்டூன் கதாபாத்திரங்கள் வன்முறையை இளமையிலேயே கற்க செய்கிறது. கார்ட்டூன் கதாபாத்திரங்கள் சூப்பர் ஹீரோக்கள் போல் பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்டாலும் அவை ஒரே மாதிரியானவையாகும். தீயவர்களிடமிருந்து மக்களை காப்பாற்றுவார்கள். இதனால் நிஜ உலகு குறித்து குழந்தைகளின் எதிர்பார்ப்புகளில் குழப்பமடைய செய்யும். சில டிவி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலம் அறிவு சார்ந்த நன்மைகள் இருந்தாலும், பல எதிர்மறையான பாதிப்புகளும் ஏற்படலாம். குழந்தைகள் டிவியில் பார்க்கும் நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்களில் தங்களுக்குப் பிடித்தமான கதாபாத்திரங்கள் புகைபிடிப்பது, குடிப்பது, பாலியல் காட்சிகள் மற்றும் ஆபத்தான ஸ்டண்ட்டில் ஈடுபடுவதைப் பார்க்கிறார்கள்.அவை அவர்களின் மனநிலையை பெரிதும் பாதிக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன.

டாம் அண்ட் ஜெர்ரி போன்ற சிரிப்பு மூட்டும் கார்ட்டூன்களும் ஒருவரையொருவர் தொடர்ந்து தாக்குவதை போன்ற வன்முறையை தான் காட்டுகின்றன. இத்தகைய வன்முறை நிகழ்ச்சிகளின் மூலம் வன்முறை எண்ணங்களை எளிதாக குழந்தைகள் பெறுகிறார்கள்.

அது மட்டுமில்லாமல் திரையில் பார்க்கும் சூப்பர் ஹீரோக்களை, தாங்களாகவே பாவித்து, அதை நகலெடுக்கும் முயற்சியில் குழந்தைகள் தங்களை உட்படுத்தும் சம்பவங்கள் நம் வீடுகளிலேயே நடக்கின்றன. மேலும் ஆபத்தான ஸ்டன்ட் செய்து தங்கள் உயிரைப் பணயம் வைக்கவும் செய்கிறார்கள்.

இளைய பெருநகரங்களில் 18 முதல் 30 வயது பருவ கால கால இளந்தலைமுறையினரை மது மற்றும், நடன கொண்டாங்களுடன் கூடிய கேளிக்கை விடுதிகள் கவர்ந்திளுக்கின்றன்.மேலும பிறந்தநாள் கொண்டாட்டங்கள்,நண்பர்கள் இன்பச்சுற்றலா கொண்டாட்டங்கள்,இணையவழி சீட்டுகட்டு விளையாட்டு போட்டிகள் , இணைய வழியிலானஅளவற்ற வேடிக்கை விநோத விளையாட்டுகள், காதலர் தின கொண்டாங்கள், ஆங்கில வருட பிறப்பு நாள் கொண்டாட்டங்கள் இன்னும் எண்ணிலடங்கா பொழுது போக்கும் அம்சங்கள் இளையதலைமுறையினரன் பொன்னான கால நேரத்தை கொள்ளையடித்து விரயம் செய்கின்றன.

இன்றைய இளைய தலைமுறை இளைஞர்கள் மத்தியில் மது அருந்துதல், போதை பொருட்களை பயன்படுத்துதல் ஆகிய கேடான பழக்கம் கேளிக்கையின் ஒரு அம்சமாக கருதப்பட்டு பல்கி, பெருகி வருவது தமிழ் சமுதாயத்தின் கட்டமைப்பையே சீர்குலைக்கும் அபாயகரமான விசயமாகும். ஒரு குறிப்பிட்ட சதவீத இளயதலைமுறையினர் போதை பொருட்களுக்கு ஆட்பட்டு வாழ்க்கையை தொலைத்து விடுகிறார்கள்.

ஆக 10 வயதிலிருந்தே இளைய தலைமுறையினரை நூலகங்கள் இந்த வயது பருவ கால நேரங்களை செலவு செய்யும் இடங்களாக மாற்றி அமைக்கும் வகையில் சூழலை ஏற்படுத்தி ,நூலக கல்வியை அவர்களின் வாழ்வின் அங்கமாக அமைந்திட செய்து அவர்களை நல் வழியில் மாற்றம் செய்ய வேண்டியது இன்றியமையாத காலத்தின் தேவையாக நாம் உணர முடிகிறது.

**காரணி-6**

## தமிழ்நாட்டின் சிறிய, பெரிய கடைகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் பெயர் பலகைகள் முற்றிலும் ஆங்கிலத்தில் மட்டுமே அமைக்கப்படும் விந்தை நிலைமை

தமிழ்நாட்டின் தொழில் முனையும் தமிழர்களாலும், வெளிமாநிலத்தாராலும் அமைக்கப்படும் கடைகளும் ,உணவகங்களும், வியாபார நிறுவனங்களும் ,தொழிற்சாலைகளும் கட்டமைப்புகளில் பெரும்பாலும் மேலைநாடுகளின் நாகரீக வழியிலும் ,நவீன முறைகளிலும்,தொழிற் நுட்பங்களை மேற்கொண்டும் அமைக்கப்படபட்டு வருவது காலப்போக்கில் இயல்பாகி வருகிறது.

இந்த அமைப்பு முறைகள் நடைமுறைக்கு மிகவும் உகந்ததாகவும்,தோற்றத்திலும்,பயன்பாடுகளிலும் மிகவும் சிறந்ததாகவும் விளங்குவதால் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு உபயோகிக்கப்படும் நடைமுறை ஆகிவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதே உண்மையாகவுள்ளது.

தமிழ் நாட்டையும் ,பிறமாநிலங்களையிம் சார்ந்த முதலாளிகள்,பெரு முதலாளிகள்,தொழில் முனைவோர்கள் தமிழ் நாட்டில் தங்களது கடைகளை, உணவகங்களை, வியாபார நிறுவனங்களை, தொழிற்சாலுகளை மேலைநாடுகளின் நாகரீகத்தை அடியொற்றி,நவீன முறைகளில்,உயர் தொழில்நுட்பங்களை கொண்டு கட்டமைக்கும் வேளையில், பெயர் பலகைகளையும் முற்றிலும் ஆங்கிலத்தில் அமைத்து விடுகிறார்கள் .தமிழ்நாட்டின் தாய்மொழி உணர்வுக்கு, தமிழ்மொழிக்கு சிறிதும் முக்கியத்தும் தரப்படாமல் உதாசீனப்படுத்தி ஒதுக்கி தள்ளப்படுகிறது.இது கண்துஞ்சாது தமிழ் மொழியை பாதுகாக்க வேண்டிய தமிழ் பெருமக்களின், அரசியல் விற்பன்னர்களின், தமிழ் நாடு அரசின் கவனிக்க தவறிவிட்ட, கவனமின்மையின், அக்கறையின்மையின் ,தாய் மொழி அன்பு குறைபாட்டின் காரணமாக வெகு வேகமாக நிகழ்ந்து வரும்,தாய்மொழி தமிழுக்கு பங்கம் ஏற்படுத்தும் தீய நிகழ்வாகும்.

1948 தமிழ்நாடு அரசின் கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்,1948 சட்ட விதிகள்,1983, 2013, 2023 ம் வருடத்தின் திருத்த சட்டம் இவை அனைத்தும் நாடெங்கும் அமைக்கப்படும் சிறிய, பெரிய கடைகள், உணவகங்கள், வணிக, தொழிற்சாலை நிறுவனங்களின் பெயர் பலகைகள், முதலில் தமிழில் பெரிய அளவிலும், இரண்டாவதாக ஆங்கிலத்தில் சிறிய அளவிலும் இருக்க வேண்டும் என்று தெளிவாக வரையறை செய்துள்ளன. கடந்த 76 வருடங்களாக நாம் வகுத்த சட்டங்களையே நாம் நடைமுறை படுத்த தவறியதன் காரணமாக தமிழை நிலை தாழ்த்தும் செயலை நாமே செய்து விட்டோம்.

இனிமேலாயினும் தமிழ்பெருமக்களும்,மாண்பு மிகு முதலமைச்சர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் ,தமிழ்நாடு அரசின் 1947,1948, 1982, 1983, 2013, 2023 பெயர் பலகை கள் சட்டங்களை உடனடியாக போர்கால அடிப்படையில் செயல் படுத்திடல் வேண்டும்.

அரசானை (நிலை) எண்: 1541, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 29.07.1982 - இன்படி தமிழ்நாட்டில் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் நிறுவனத்தின் பெயர் முதலில் தமிழ் மொழியில் தான் இடம் பெற வேண்டும் எனவும், 2 ஆவதாக ஆங்கில மொழியும், 3 ஆவதாக இதர மொழிகள் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், சீர்திருத்த எழுத்து வடிவில் இடம்பெற வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டது. இதன் செயலாக்கம் தொழிலாளர் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இருப்பினும் கடந்த 42 வருடங்கள் கடந்த பிறகும் இன்றளவிலும் தமிழில் பெயர் பலகைகள் அமைக்கப்பட

வேண்டும் என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் முழுவதும் ஆங்கிலத்திலேயே பெயர்பலைகள் அமைக்கப்பட்டு வருவது தொடர்ந்து தமிழ் மொழி அவமதிக்கப்பட்டு வருவதும், தமிழ்நாடு அரசும், தமிழ் மக்கள் அனைவரும் வெட்கி, தலைகுனிய வேண்டிய, வேதனை படக்கூடிய, அவமானப்படக்கூடிய விசயமாகும்.

தமிழ்நாடு முழுவதிலும் கடைகள்,உணவகங்கள் ,வியாபார நிறுவனங்கள் ,தொழிற்ச்சாலைகள் ஆகியவற்றின் பெயர் பலகைகள் தமிழில் அமைந்திட்டால்மட்டுமே தந்தை பெரியாரும்,அறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் கண்ட “எங்கும்,எதிலும்,என்றும்” தமிழ் என்ற கனவை நிறைவேற்றியவர்களாக நாம் பெருமை கொள்ள தகுந்ததாக இருக்கும் என்பதில் துளியேனும் ஐயமில்லை.

எப்படியாயினும், காலச்சுழலில் ஏற்படும் மாற்றங்களால் ஒரு இனம் தன் வரலாறு, பண்பாடு, தன் தாய் மொழியில் இருந்து பிரிந்து பயண பட ஆரம்பித்தால், அந்த இன மக்கள் காலப்போக்கில் தன் தாய் மொழியின் எழுத்து வடிவை மறந்து விடுவார்கள். தாய்மொழி வாசிப்பு, நூல்களை படிக்கும் பழக்கத்தை விட்டு வெளியேறி விடுவார்கள். அவர்களுக்கு தன் தாய் மொழியின் ஆரம்ப வரலாறு தெரியாமல் போய்விடும் தமிழுக்கு இலக்கணம் தந்த தொல்காப்பியர் முதல் பாவேந்தர் பாரதிதாசன் வரை யார் என்றே தெரியாத நிலைக்கு தமிழ் இனம் ஆட்பட்டு விடும். பெரியாரின், அண்ணாவின், கலைஞரின் எண்ணங்களில் உதித்த பொருள் பொதிந்த தமிழ் அமிழ்தம் பொங்கும் தமிழ் நூல்களை கற்றுணர இயலாத தாழ்மையுற்றவர்களாக தமிழ் மக்கள் ஆகிவிடுவார்கள்.

“ஒரு மொழி அழிகிறதென்றால் அந்த மொழியைப் பேசும் இனத்தின் அடையாளங்கள் அழியத் தொடங்கி விட்டன என்பதே உண்மை.” என்று வத்திக்கானின் போப் பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளது.(Vatican news.com) உலகின் அனைத்து இன மக்களும் ஆழ்ந்துணர்ந்து செயலாற்ற வேண்டிய விசயமாகும்.

இத்தகைய சூழலில் அந்த இன மக்களின் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அந்த இன மக்களின் வரலாறு, பண்பாடு, தாய்மொழி பாதுகாக்கப்பட்டு எழுச்சி பெற தேவையான மாறாத விதிகளை வகுத்து காத்திட வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் அந்த இனத்தை ஆளும் அரசுக்கும், அந்த காலகட்டத்தில் உலவி வரும்

அரசியல் தலைவர்களுக்கும், இருந்தே ஆக வேண்டும். பெரும் புயலில் சிக்கிக் கொண்ட கப்பலை காப்பது அந்தக் கப்பலை வழிநடத்தும் தலைவன், அவன் கீழ் செயலாற்றும் மாலுமிகள் ஆகியோரின் முதற்கடமையல்லவா! அது போல் தமிழ்நாடு அரசாங்கமும், தமிழ்நாடு அரசியல் தலைவர்கள் மற்றும் தமிழ் பெருமக்கள் அனைவரும் அவர்கள் பெரும் முயற்சிகளோடு தங்களது கடமைகளை ஆற்ற வேண்டிய இது நேரமிது என்பதை விரிவாக, தரவுகளோடு இந்த ஆய்வறிக்கையில் தந்திருக்கிறேன். தமிழ்நாடு என்னும் கப்பலை வழிநடத்தும் தமிழ் மக்களின் தலைமகனான தமிழ் மீதும், தமிழ் மக்கள் மீதும் பேரன்பு கொண்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த ஆய்வறிக்கையின் மீது மிக்க கவனம் கொள்வது அவரது தலையாய கடப்பாடாக கருதுகிறேன்.

## ஆங்கில வழி கல்வியால் ஏற்பட்டுள்ள ஆபத்தினும் பேராபத்து

தமிழ்நாட்டின் பெரும்பாலான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் கல்வி முறையை ஆங்கில மொழி வழியிலேயே தேர்ந்தெடுக்கும் சூழல் உருவாகியுள்ளது என்பதையும், அனைத்து துறைகளிலும் வேலை வாய்ப்புகளை பெறுவதற்கும், தொழில் முனைவர்களாக உரு பெறுவதற்கும், மருத்துவராக, பொறியாளராக, விஞ்ஞானிகளாக, உயர்நிலை சிறப்புகளை அடைவதற்கும், வான்வெளி அணுசக்தி, செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் உச்சங்களை தொடுவதற்கும் ஆங்கில மொழியில் கல்வி பெறுவதே ஒன்றே

சால சிறந்த வழிமுறை என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட அடிப்படை அத்தியாவசியமான தேவை என்பது நின்று நிலை பெற்று பெற்றுவிட்டது என்பதை சென்ற அத்தியாயங்களில் பார்த்தோம்.

ஆங்கில வழி கல்வி என்பது

1. ஆங்கில மொழியில் சரளமாக பேசும் திறனை பெறுவது.
2. ஒருவர் தான் நினைப்பதை, தனது உணர்வுகளை பிறருக்கு உணர்த்த விரும்புவதை ஆங்கில மொழியில் தெளிவாக, விரிவாக, எழுத்து வடிவில் ஆக்கும் ஆற்றல் பெறுவது.
3. தாங்கள் சொந்தத் தாய் மொழியை பேசுபவர்களுடன் மிக இயல்பாக தன் தாய்மொழி தமிழில் பேசுவது போல, ஆங்கில
   மொழி பேசும் பிற நாட்டவருடன் ஆங்கில மொழியை சரளமாக பேசும் வல்லமை உடைய மனிதர்களுடன் ஆங்கில மொழியில் அவர்கள் பேசும் பேச்சை கண்ணிமைக்கும் நேரத்தில் புரிந்து கொண்டு அதற்கேற்ப பதில்களை ஆங்கிலத்தில் பேசி கலந்துரையாடும் ஆற்றலை பெறுவது.
4. ஆங்கில மொழியை தாய்மொழியாக கொண்ட ஆங்கில மொழியில் வல்லமை மிக்க அறிஞர்கள், மேதைகள், விஞ்ஞானிகள், பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆங்கில மொழியில் படைத்திருக்கும் நூல்களை படித்தாய்ந்து, அறிந்து கொள்ளும் திறனை பெறுவது.
5. ஆங்கில வழியில் கல்வி கற்றதன் பயனாக கலை அறிவியல், வின்ஞானம், மருத்துவம் மற்றும் இன்றைய புதுயுகத்தில் உருவாகி இருக்கும் அத்தனை துறைகளிலும் தங்களது திறமைகளை நிலைநாட்டி அறிவுவளத்திலும், பொருளாதார வளத்திலும் தாங்களையும், தாங்கள் சார்ந்த சமுதாயத்தை செழித்து வழக்கொழிந்து உயர்வடைய செய்யும் அற்புத திறனை பெறுவது.
   மேற்கூறிய ஐந்து வகையான திறன்களை பெறுவதே ஆங்கில மொழி வழி கல்வியின் சாராம்சங்களாக இருக்க முடியும்.

1 ஆம் வகுப்பு முதல் ஆங்கில மொழி வழியிலேயே கல்வி கற்கும் தமிழ்நாட்டினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் தங்களது பள்ளி படிப்பை முடித்து அதாவது +2 படித்து வெளிவரும் காலகட்டத்தில் அவர்கள் அனைவரும் மேற்கூறிய ஐந்து வகையான திறமைகளையும், முழுமையாக பெற்றிருந்தால் மட்டுமே அவர்கள் எந்த இலக்கினை அடைவதற்காக ஆங்கில கல்வியை மேற்கொண்டார்களோ அந்த இலக்கினை அடைந்து விட்டதாக கருத முடியும். மேலும் ஆங்கில வழி கல்வியின் அடிப்படை பயன்பாடுகளான மேற்கூறிய ஐந்து திறன்களை ஆங்கில மொழி வழியில் கல்வி பயிலும் மாணவர், மாணவியர் கூட்டம் பெறுவதே ஆங்கில மொழி வழியில் கல்வியை மேற்கொள்ளும் இளைய தலைமுறை மாணவ, மாணவியர் கூட்டம் அடைந்திட வேண்டிய இன்றியமையாத இறுதி பயன்படாக இருக்கும்.

தமிழ்நாட்டில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 1 கோடியே 50 லட்சம் மாணவர்கள் பயின்று வரும் நிலையில், தோராயமாக 10 லட்சம் மாணவர்கள் ஒன்றிய அரசின் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் தனியார் பள்ளிகளிலும், தோராயமாக 54,71,000 மாணவ, மாணவியர்கள் மாநில அரசு பாட திட்டத்தின் கீழ் செயல்படும் அரசு பள்ளிகளிலும், தோராயமாக 30,60,601 லட்சம் மாணவ, மாணவியர் மாநில அரசு கல்வி திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் மாநில அரசு நிதி உதவி பெறும் தனியார் பதின்ம பள்ளிகளிலும் தோராயமாக 56,00,006 மாணவ, மாணவியர் மாநில அரசு கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் சுயநிதி தனியார் பதின்ம பள்ளிகளிலும் பயின்று வருகிறார்கள். இவர்களில் ஒன்றிய அரசு பாட திட்டத்தின் கீழ் பயிலும் சுமார் தோராயமாக 10 லட்சம் மாணவர்கள் ஆங்கில வழியிலும், மாநில அரசு திட்டத்தின் கீழ் பயிலும் 1 கோடியே 40 லட்சம்

மாணவர்களின் தோராயமாக 1 கோடி பேர் ஆங்கில மொழி வழியில் கல்வி பயில்பவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களில் 12 ஆம் வகுப்பு முடித்து வருடந்தோறும் வெளிவரும் ஒன்றிய அரசு பாடதிட்டத்தின் கீழ் கல்வி பயிலும் தோராயமாக 75 ஆயிரம் மாணவ மாணவியர் கூட்டத்தில் 90 சதவீதம் பேர் மேற்கூறிய ஆங்கில மொழி வழிக் கல்வியின் பயன்பாடுகள் ஆன ஐந்து திறன்களை பெற்றவர்களாக இருப்பதாக கணிக்க முடிகிறது. மாநில பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழி வழியில் கல்வி பயின்று 12 ஆம் வகுப்பு முடித்து வருடந்தோறும் வெளிவரும் தோராயமாக 7 லட்சத்தி 25 ஆயிரம் மாணவ, மாணவியர்களின் அதிகபட்சமாக 10 சதவீத பேர் ஆங்கில வழியின் பயன்பாடான ஐந்து திறன்களை பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. மற்ற 90% மாணவ, மாணவியர் கூட்டம் ஆங்கில வழிக் கல்வியின் மேற்கூறிய ஐந்து வகையான திறன்களில் முதல் வகையான ஆங்கிலத்தில் சரளமாக பேசுவது என்ற பயன்பாட்டிலேயே மிகவும் திறன் குன்றியவர்களாக காணப்படுகிறார்கள். இவ்வாறு ஆங்கில வழி கல்வியை மேற்கொண்டு வருடம் தோறும் 12 ஆம் வகுப்பு முடித்து வெளிவரும் தோராயமாக 8 லட்சம் மாணவர்களில் தோராயமாக 1.5 லட்சம் மானவர்கள் ஆங்கில வழிக் கல்வியின் பயன்பாடான மேற்கூறிய ஐந்து திறன்களை பெற்றவர்களாக விளங்குகிறார்கள் என்பதும் மீதமுள்ள 6.5 லட்சம் மாணவ, மாணவியரின் கூட்டம் ஆங்கில வழி கல்வியின் ஐந்து வகையான பயன்பாடு திறன்களின் முதல் வகையான சரளமாக ஆங்கிலம் பேசுவது என்ற திறன் பாட்டிலேயே பின்தங்கி விடுகிறார்கள் என்பது தெரிய வருகிறது.

**இந்த நிலை மிகவும் கவலைக்குரியதாகும். இவ்வாறு ஆங்கில வழிக் கல்வியை மேற்கொள்ளும் மாணவ, மாணவியர் கூட்டத்தில் 100% பேர் தாய்மொழி தமிழில் எழுதுவது மற்றும் படிப்பது என்ற திறனில் மிகவும் குறைபாடு உள்ளவர்களாக உருவாகி வருவதும், அது மட்டுமல்லாமல் 80% மாணவ மாணவியர் ஆங்கில மொழிக் கல்வியின் பயன்பாடுகள் ஆன ஐந்து வகை திறன்பாடுகளில் முதல் வகை திறனை பெறுவதிலேயே மிகவும் குறைபாடு உள்ளவர்களாக உருவாக்கி வருவதும், இந்த இளம் தலைமுறை எதிர்கால வாழ்வுக்கு கேடு விளைவிக்கும் அம்சமாகும். இவ்வாறு தாய்மொழி தமிழையும் இழந்து, ஆங்கில மொழியிலும் வளம் பெறாமல் ஒரு பெருங்கூட்டம் உருவாகி வருவது தமிழ் மக்கள் சமுதாயத்தின், தமிழ்நாட்டின் எதிர்கால பொருளாதார வளத்தை தேக்கமடைய செய்யும் நிலைப்பாடாகும்.**

இந்த விதமான போக்கு ஒரு சிலர் வாழ பெரும்பாலானவர்கள் வேடிக்கை பார்க்கும் சூழல் அமைந்த சமுதாயத்தை நமக்கு நாமே உருவாக்கும் அபாயகரமான போக்கு ஆகும். பெருகிவரும் இந்த சூழ்நிலையை மாற்றி அமைப்பதற்கு ஆங்கில கல்வியில் பெரும் மாற்றங்களையும், புரட்சிகளையும், ஏற்றங்களையும் ஏற்படுத்துவதும், ஆங்கில மொழி கல்வியை கற்பிக்கும் ஆசிரியர் பெருமக்கள் கூட்டத்திற்கு ஏற்றமிகு பயிற்சிகளை இடைவிடாது தொடர்ந்து ஏற்படுத்திக் கொடுப்பது, ஆங்கில மொழி வழி கல்வியின் தரத்தினை மேம்படுத்தி, இலக்கினை அடைந்திட இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. மேலை நாடுகளுக்கு செல்வதற்கு ஆங்கில மொழியின் திறன் மேம்பாடு தேர்வுகளில் பயிற்சிகளை மேற்கொள்வது போல, மேம்பட்ட பயிற்சிகளை ஆங்கில மொழி கல்வியை மாணவ, மாணவியர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் பெருமக்கள் கூட்டத்திற்கு பெரிய அளவில் இடைவிடாது கொடுத்து ஆங்கில வழிக் கல்வியை மேற்கொள்ளும் மாணவ, மாணவியர் கூட்டம் மேற்கூறிய ஆங்கில வழிக் கல்வியில் அவர்களை தயார் செய்வதே தீர்வாக இருக்கும். **ஆங்கில வழி கல்வியின் மேற்கூறிய ஐந்து வகை பயன்பாடுகளில் மிக சிறந்தவர்களாக இளைய தலைமுறை மாணவர், மாணவியரை உருவாக்குவதற்கான வழிவகைகளை மேம்பட்ட அறிஞர் குழு அமைத்து தமிழ்நாடு அரசு உடனடியாக கண்டறிய வேண்டும்.**

இந்த ஆய்வறிக்கையில் பல்வேறு காரணிகளால் தாய்மொழி தமிழின் மீது தாக்கம் ஏற்பட்டு தமிழின் வளர்ச்சியில், எழுச்சியில், இருப்பில் தேக்கம் ஏற்படுவதை தடுத்து நிறுத்தி, நம் தாய்மொழி தமிழை எழுச்சி பெற வைப்பது நமது தலையாய கடமை என்று சொல்லப்பட்டுள்ளதுஎன்பது எவ்வளவு உண்மைதாதோ. அந்த அளவுக்கு மேம்பட்ட ஆங்கில வழி கல்வியும், இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவியருக்கும் மிகவும் இன்றியமையாத அம்சம் என்பது யாவரும் மறுக்க முடியாத உண்மை ஆகும்.

தந்தை பெரியார் குடியரசு தலையங்கத்தில் கீழ் வருமாறு கூறியுள்ளார். “வடமொழி தொடர்பால் ஏற்பட்ட இன்னல்கள் எண்ணற்றவை அதற்கு மாறாக ஆங்கில மொழி தொடர்பால் நமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளையும் அம்மொழியில் உள்ள கருத்து செறிவுகளையும் பாருங்கள். ஆங்கில மொழி நூல்களில் முன்னேற்றக் கருத்துக்கள் மலிந்து கிடக்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் இருக்கின்றன. நமது வாழ்க்கை நிலையை உயர்த்தி கொள்வதற்கான பல அரிய மார்க்கங்களை ஆங்கில நூல்களிலிருந்தே நாம் பெரும்பாலும் அறிந்து வருகிறோம். சுருங்க்கக் கூறின் அடிமை வாழ்வே ஆனந்தம் என்று நினைத்திருந்த இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டியதே ஆங்கில மொழி அறிவுதான் என்று கூறினால் மிகையாகாது. ராஜா வேண்டாம், குடியரசு வேண்டும் என்கிற அறிவு, ஆணும், பெண்ணும் சமம் என்கிற அறிவு ஆகிய சகல அரசியல் பொருளாதாரம் முன்னேற்ற அறிவுக் கருத்துக்களையும் ஆங்கில மொழி தான் நமக்குத்தந்தது. தந்தியையும், மின்சாரத்தையும், பட காட்சியையும், ஆகாய விமானத்தையும், ரேடியோவையும், எக்ஸ்ரேவையும் அதுதான் அறிமுகப்படுத்தியதே ஒழிய நமது தமிழ் மொழியோ அல்லது அதை அழிக்க வந்த வடமொழியோ அல்ல. வடமொழி தொடர்பு சாஸ்திரப், புராண, இதிகாச மூடநம்பிக்கைகளால் நம் பகுத்தறிவை அடிமைப்படுத்தியது. ஆங்கில மொழி நம்மை அவ்வடிமைத்தனத்திலிருந்து விடுவித்து எதையும் நம் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்கும்படி செய்தது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பிரதேஷ்ய அனுபவத்திற்கு ஒவ்வாத, சரித்திர காலத்திற்கு உட்படாத எதையும் ஒதுக்கித் தள்ளும்படி செய்தது ஆங்கில மொழி தான். அதை பேசிய மக்களைத் தமிழைக் காட்டிலும் வெகுவேகமாக அறிவு உலகத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது.” 1948 ல் குடியரசு பத்திரிக்கையின் ஈரோடு பதிப்பின் தலையங்கத்தில் “மொழி” - “எழுத்து” என்னும் பொருள் குறித்து குடந்தை, அரசியலார் கல்லூரியிலும்; சென்னை, பச்சையப்பன் கல்லூரியிலும் தந்தை பெரியார் ஆற்றிய விரிவுரையின் தொகுப்பு ஒருமுறை தந்தை பெரியார் மேடையில் அவர் பேசிக்கொண்டிருக்கும் போது ஒருவர் ஒரு துண்டுத் தாளில் ஒரு வினாவை எழுதி அனுப்பினார். அந்த மேடையில் அறிஞர் அண்ணாவும் இருந்தார். "நீங்கள் ஆங்கிலத்தை ஆதரித்தே பேசிக் கொண்டிருக்கின்றீர்களே, நீங்கள் ஆங்கிலேயனுக்கா பிறந்தீர்கள்?" என்பதே அந்த வினா.

அதற்கும் அய்யா பெரியார் பொறுமையாக விடை சொன்னார். "ஒருவர் யாருக்குப் பிறந்தவர் என்பது அவரவருடைய அம்மாவிற்குத்தான் தெரியும். எனக்கு மட்டுமில்லை, கேள்வி கேட்டவருக்கும் இது பொருந்தும். அது அவரவர் தனிப்பட்ட பிரச்சினை. அது குறித்துச் சந்தேகம் உள்ளவர்கள் தனித்தனியாக ஆராய்ச்சி செய்து கொள்ளலாம். இங்கு ஆங்கிலம் பற்றிய பொதுப் பிரச்சினையை நாம் பேசலாம். ஆங்கிலம் அந்நிய மொழிதான். ஆனால், அது நமக்குப் பயன்படுகின்ற மொழியாக. நம் முன்னேற்றத்திற்கு உதவுகின்ற மொழியாக உள்ளது. எனவே அதனைக் கற்று, அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறேன் நான்" என்ற பதில் அளித்தார் பெரியார்.

தாய்மொழிப் பற்றில் நாம் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை. ஆனாலும், தாய்மொழி தமிழோடு சேர்த்து ஆங்கிலத்தையும் நாம் சரியாகவும், ஆழமாகவும் கற்றுக் கொள்ள வேண்டியது இன்றைய மிகப் பெரும் தேவைகளில் ஒன்றாகும் நம் தாய்மொழி தமிழ், நம் உணர்வில், உயிரில் கலந்த மொழி! அந்நிய மொழியானாலும், ஆங்கிலம் உலகத்

தொடர்புக்கு, கூடுதல் அறிவியல் அறிவுக்கு உதவுகின்ற மொழி! இரண்டும் நமக்கு வேண்டும்.

ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழர்கள் முன்னேற வேண்டும் என்பதுவே அய்யாவும், அண்ணாவும் சொன்ன வழி! அதுவே நாம் இன்று ஏற்றுக்கொள்ள வேண்டிய வழியும் கூட! அன்றே தொலைநோக்குப் பார்வையுடன் கண்டறிந்தவர்கள்தாம் நம் அய்யா பெரியாரும், அறிஞர் அண்ணாவும்! அவர்கள் காலத்தில், கணிப்பொறியும் கிடையாது, அவுட் சோர்சிங் என்ற சொல்லும் கிடையாது. ஆனாலும், அவர்களின் 'வருமுன்னர் காத்திட்ட' அறிவு நமக்கு இன்று பயன்படுகிறது.

அதனை அடியொற்றியே, அறிஞர் அண்ணாவும் தமிழ்நாடு முதமைச்சர் ஆன பின்பு, 23.01.1968 அன்று, சட்டமன்றத்தைக் கூட்டி, இருமொழிக் கொள்கையைச் சட்டமாக நிறைவேற்றினார். ஆக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களின் கூற்றின்படி நம் தமிழ் மக்கள் கலை அறிவியல், மருத்துவம், விஞ்ஞானம், வான்வெளி அணுசக்தி, செயற்க்கை நுண்ணறிவு மற்றும் பல்வேறு துறைகளில் பெரும் வளம் கண்டிட ஆங்கில மொழி வழி கல்வி முறையினை சீர்படுத்தி, முறைப்படுத்தி, வளப்படுத்தி இளைய தலைமுறை மாணவ மாணவியருக்கு ஏற்றமிகு தலையான கடமையாகும்.

**எழுத்தறிவு, சதவீதம் (எழுதும் திறன், படித்து புரிந்து கொள்ளும் திறன், வாசித்து பிறருக்கு அறிவிக்கும் திறன்) (literacy percentage)**

தமிழ்நாடு எழுத்தறிவு சதவீதத்தில் 80.09 சதவீதம் என்ற உயர்நிலையில் இருப்பதாக ஒன்றிய அரசின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் வாயிலாக அறியப்பட்டுள்ளது. இந்த சதவீத கணக்கு கடந்த 13 வருடங்களில் வளர்ச்சி அடைந்து மேம்பட்ட ஒரு இலக்கை அடைந்திருக்கும் என்பதுதான் நம் அனைவரின் எண்ணமாக இருக்கிறது.

தமிழ்நாடு அரசு தரவுகளின் படி 10 ஆம் வகுப்பினை சென்றடையாமலேயே 15 வயது பருவத்தினர் 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் பள்ளி கல்வியை விட்டு வெளி சென்று விடுகிறார்கள் என்பது கள நிலவரமாக உள்ளது.

அரசு தரவுகளின் படி 10 ஆம் வகுப்பினை சென்றடையாமலேயே 15 வயது பருவத்தினர் 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் கல்வியை விட்டு வெளி சென்று விடுகிறார்கள் என்பது கள நிலவரமாக உள்ளது. எனது கள ஆய்வில் கண்ட நிலவரப்படி +2 முடித்து வெளிவரும் மாணவ, மாணவிகள் கல்லூரி பயின்று வரும் மாணவர்கள் ஆகியோரிடம் பெற்ற கருத்துக்களின் அடிப்படையில் கடந்த 30 வருடங்களில் பல்வேறு காரணிகளின் தாக்கங்கள் காரணமாக தமிழ் மொழியில் எழுதும் மற்றும் படிக்கும் திறன் பெருமளவில் குன்றியுள்ளது தெரிய வருகிறது. மேலும் ஆங்கில மொழியில் பேசுவது, எழுதுவது, படிப்பது என்ற மூன்று திறன்களிலும் பெரும்பாலானவர்கள் திறன் குன்றியவர்களாக காணப்படுகிறார்கள் என்பது தெரிய வருகிறது.

அடுத்த 30 வருட காலத்தில் இந்த விபரீதமான மாற்றம் பெரும் வேகம் எடுத்து தாய்மொழி தமிழில் எழுத, படிக்க, திறன் பெற்ற மக்கள் கூட்டம் 20 சதவீதமாகவும், தாய் மொழி தமிழில் எழுத, படிக்க திறன் குன்றிய மக்கள் கூட்டம் 80 சதவீதமாகவும் உருவாகும் சாத்தியக்கூறுகள் உருவாகி வருகின்றன. மேலும் கவலை கொள்ள தக்கதாக ஆங்கில மொழியில் பேச, எழுத, படிக்க திறன் உள்ளவர்கள் கூட்டம் 20 சதவீதமாகவும், பேச, எழுத, படிக்க திறன் குறைந்தவர்கள் கூட்டம் 80 சதவீதமாகவும் உருமாறும் பெரும் அபாயம் காத்திருக்கிறது. ஆக 2011 இல் தமிழ்நாட்டின் எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் 80. 09 சதவீதமாக கணிக்கப்பட்டு 2024 ஆண்டில் தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்களின் சதவீதம் பெரும் உயர்வினை அடைந்து மேம்பட்ட உயர் அளவினை அடைந்திருக்கும் என்று நாம் அனைவரும் திண்ணமாக நம்பிக்கொண்டிருக்கும் சூழலில் மேற்கூறிய பல்வேறு

காரணிகளால் அடுத்த 30 ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களின் எழுத்தறிவு சதவீதத்தில் தாக்கம் ஏற்பட்டு மிகவும் கீழான நிலையை அடைந்து விடக்கூடிய அபாயகரமான வழியில் நாம் அனைவரும் சென்று கொண்டிருக்கிறோம் என்பதே கள நிலவரமாக உள்ளது.

## தமிழ்நாடு அரசு நூலகங்களில் இன்றைய நிலைமை

**"கடை விரித்தேன் கொள்வார் இல்லை"** என்ற வள்ளலாரின் வேதனை தோய்ந்த வார்த்தைகள் போல் தினமும் தமிழ்நாடு முழுவதும் சுமார் 5000 அரசு பொது நூலகங்கள் நாள் முழுவதும் காலை 8:00 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்து வைக்கப்பட்டு வாசகர்களை எதிர்பார்த்து அங்கு பணிபுரியும் நூலக கல்வியின் வழிகாட்டிகள் ஆன அரசு ஊழியர்களான ஆயிரக்கணக்கான நூலகர்கள் காத்துக் கிடக்கின்றனர் சுமார் 8 கோடிக்கும் அதிகமான நூல்கள் வாசகர்களின் வருகைக்காக வழி மேல் விழி வைத்து காத்திருக்கின்றன. இளைய தலைமுறை மாணவ, மாணவியர்கள், தமிழ் பெருமக்கள் எங்களை தூசி தட்டி எடுத்து ஒரு முறையேனும் பாருங்களேன் என்று அந்த 8 கோடி புத்தகங்களும் கண்ணீர் விட்டு அழுதபடி நூலக அடுக்குகளில் புதையுண்டு கிடைக்கின்றன. மாவட்டங்கள் தோறும் கடந்த ஒன்றரை வருடகாலம் நடத்திய எமது நேரடி கள ஆய்வின் கிடைத்த தகவல்களின்படி தமிழ்நாட்டின் அரசு அனைத்து பொது நூலகங்களிலும் தோராயமாக மொத்தம் 8 கோடி நூல்கள் இதுவரை வரவு வைத்து சேர்க்கப்பட்டுள்ளன இந்த 8 கோடி நூல்களில் இதுவரை 25-30 சதவீத நூல்கள் அதாவது சற்றே ஏறக்குறைய தோராயமாக 2 கோடி நூல்கள் சேதமடைந்து விட்டன. மீதி இப்போது கையிருப்பில் இருக்கும் 6 கோடி நூல்கள் தீண்ட தகாதவைகளாக பெரும்பாலான மக்களால் புறக்கணிக்கப்படுவதால் அந்த 6 கோடி நூல்களும் மரண பயத்தில் அற்ப்ப ஆயுளில் தங்கள் வாழ்வு முடிந்து விடுமோ, தாங்கள் விரைவில் உபயோகமின்றி சிதைந்து விடுவோமோ என்று அஞ்சி கதறி அழுதபடி இருக்கின்றன.

**(Tn.data.gov.in) List of the stock of books available it all libraries distric wise in Tamil Nadu published andupdate on 21/02/2022**

| S.NO | DISTRIC | STOCK OF BOOKS |
|---|---|---|
| 1 | Ariyalur | 968565 |
| 2 | Chennai | 4425814 |
| 3 | Coimbatore | 5297696 |
| 4 | Cuddalore | 2547300 |
| 5 | Dharmapuri | 1632005 |
| 6 | Dindigul | 1808267 |
| 7 | Erode | 2271646 |
| 8 | Kancheepuram | 2710815 |
| 9 | Kanniyakumari | 1473797 |
| 10 | Karur | 1530592 |
| 11 | Krishnagiri | 1476179 |
| 12 | Madurai | 3416383 |
| 13 | Nagapattinam | 1942856 |
| 14 | Namakkal | 2044621 |
| 15 | Perambalur | 969913 |
| 16 | Pudukkottai | 1607059 |
| 17 | Ramanathapuram | 1876780 |
| 18 | Salem | 2339789 |
| 19 | Sivaganga | 2045659 |
| 20 | Thanjavur | 2460145 |
| 21 | The nilgiris | 2005739 |
| 22 | Theni | 2194082 |
| 23 | Tiruchirappalli | 2502458 |

| | | |
|---|---|---|
| 24 | Tirunelveli | 5344065 |
| 25 | Tiruppur | 2301362 |
| 26 | Tiruvallur | 3298132 |
| 27 | Tiruvannamalai | 2067983 |
| 28 | Tiruvarur | 1431334 |
| 29 | Thoothukudi | 2194088 |
| 30 | Vellore | 2745514 |
| 31 | Villupuram | 2060150 |
| 32 | Virudhunagar | 2451608 |
| 33 | Anna centenary library | 604140 |
| 34 | Connemara public library | 882054 |
| Total | District total | 76928590 |

நல்ல ஒழுக்கத்தை உருவாக்குவதாகவும், மனவலிமை வளர்ப்பதாகவும், ஒருவனை தன்னுடைய சுய வலிமையை கொண்டு நிற்க செய்வதாகவும், விரிந்து பட்ட அறிவை தருவதாகவும், தமிழ் இனகூட்டத்தின் தாய் மொழி தமிழை எழுச்சி பெற வைப்பதாகவும், மெய்கீர்த்தி பெறவைப்பதாகவும், செயல்திறன் கொண்ட வழிமுறையே நூலக கல்வி என்பதே எமது ஆய்வின் திண்ணமான முடிவாக இருக்கிறது. இதுவே நாம் கடந்த 2 வருட காலமாக சந்தித்த சாதாரண மக்களும், கல்வியாளர்களும், அறிஞர் பெருமக்களும், மருத்துவ துறை வல்லுனர்களும், வழக்கறிஞர்கள், மூத்த தமிழ் மக்கள், பெரியவர்கள் கருத்தாக உள்ளது.

**2023 ஜனவரி மாதம் முதல் 2024 டிசம்பர் வரை இரண்டு வருட காலம் தமிழ்நாட்டின் 20 மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு பொது நூலகங்களில் மேற்கொண்ட கள ஆய்வுப் பணிகளின் விவரங்கள்**

கன்னிமாரா நூலகத்தின் ஆரம்பம் 1860-இல் தொடங்குகிறது. அன்றைய பிரிட்டிசு இந்தியப் பேரரசின், மதராஸ் மாகாணத்தின் மதராஸ் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாகச் சிறு நூலகம் கேப்டன் ஜீன் மிட்செலால் தொடங்கப்பட்டது.இங்கிலாந்தின் எய்லிபரி கல்லூரியில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் தேவைக்கதிகமாக இருந்தன, அவையாவும் மதராஸ் மாகணத்துக்கு அனுப்பப்பட்டன. அவை, மதராஸ் அருங்காட்சியகத்துக்கு அளிக்கப்பட்டன. பிரிட்டிசு அருங்காட்சியக-நூலக மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்நூலகம் 1890 வரை அருங்காட்சியகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. அன்றைய மதராஸ் மாகாணத்தின் ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபு, மாகாணத்துக்கான பொது நூலகம் அமைக்கும் தேவையை உணர்ந்து 1890-ஆம் ஆண்டு மார்ச் 22-ஆம் நாள் அடிக்கல் நாட்டினார். 1896-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் நாள் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டது. இந்த நூலகம் திறக்கப்பட்டபோது அவர் ஆட்சியில் இல்லாவிடினும் அவருடைய பெயரே நூலகத்துக்கும் சூட்டப்பட்டது.

1948-ஆம் ஆண்டு மதராஸ் பொது நூலகச் சட்டத்தின்படி, (இச்சட்டமே இந்தியாவிலேயே முதன்முதலில் பொதுநூலகங்களை அங்கீகரித்து, அமைத்து, நிருவகித்தல் சம்பந்தமான முக்கிய செயல்பாடு ஆகும்) கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாயிற்று.

இங்கு மொத்தம் ஆறு இலட்சத்துக்கும் மேலான புத்தகங்கள் உள்ளன. 1981-ஆம் ஆண்டு இந்திய நடுவண் அரசின் ஆணைப்படி கன்னிமாரா பொது நூலகம் நாட்டின் களஞ்சிய நூலகமானது.[4] நாட்டில் மொத்தம் நான்கு களஞ்சிய நூலகங்கள் உள்ளன. எனினும் கன்னிமாரா பொது நூலகம், நூலக அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் பன்னாட்டுக் கூட்டமைப்பில் பதிவுபெற்ற உறுப்பினராக இல்லை.

தமிழ்நாடு அரசின் மாநில மைய நூலகமும் தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் திசம்பர் 5/1896 இல் நிறுவப்பட்ட மிகப் பழமை வாய்ந்த நூலகமான கன்னிமாரா பொது நூலகத்தில் பண்டைய காலத்து ஓலைச்சுவடிகளும், பிரிட்டிஷ் காலத்து அரசு கோப்புகளும், சுதந்திரத்திற்கு பிற்பட்ட தமிழ்நாடு அரசு கோப்புகளும் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் பல்வேறு நாட்டு மொழிகளில் மிகவும் பழமை வாய்ந்த நூல்களும், தமிழின் மிகவும் பழமை வாய்ந்த நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கன்னிமார நூலகத்தில் தினமும் நூலகத்தில் அமர்ந்து அங்குள்ள பொதுவான நூல்களை கோலன் பகுப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும் அறிவார்ந்த தமிழ் நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு தினசரி வரும் வாசகர்களின் எண்ணிக்கை தோராயமாக அதிகபட்சம் 100 பேராக உள்ளது. நூலகத்துறையின் ஆரம்பம் காலம் தொட்டு ஆயிரக்கணக்கில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்ற போதிலும் அதிகபட்சம் 500 வாசகர்கள் செயல்பாட்டு உறுப்பினர்களாக உள்ளனர். இதில் தோராயமாக அதிகபட்சம் 10 சதவீத வாசகர்கள் தினமும் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள் அதாவது தினமும் அதிகபட்சம் 50 வாசகர்கள் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். ஆக மொத்தம் தமிழ்நாடு அரசு கன்னிமாரா மாநில மையம் நூலகத்திற்கு நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கும், நூல்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காகவும் சேர்த்து தினமும் 150 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். மற்றும் நூலகத்தில் அமர்ந்து தினசரி தமிழ், ஆங்கில பத்திரிகைகள், வார மாத பருவ இதழ்களை படிப்பதற்காக தினமும் அதிகபட்சம் 150 வாசகர்கள் வருகை தருகிறார்கள். ஆக இந்த வகைகளில் சேர்த்து அதிகபட்சம் மொத்தம் 300 வாசகர்கள் தினமும் வருகை தருகிறார்கள்.

ஆசியாவின் பெரிய நூலகங்களில் முதன்மையான அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் கால்கோள் விழா முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர். மு.கருணாநிதியால் 2008-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 16-ஆம் நாள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைக்கப்பட்டது. நூல்கள் மற்றும் கற்பதில் அண்ணா கொண்ட பற்று மற்றும் தீராத ஆர்வத்தை மரியாதை செய்யும் பொருட்டும், அவரது நூற்றாண்டை நினைவுறுத்தும் விதமாகவும் "அண்ணா நூற்றாண்டு நூலகம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தரைத்தளம் நீங்கலாக 8 தளங்களைக் கொண்டது. தற்சமயம் பல்வேறு துறை சார்ந்த 5 லட்சம் புத்தகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம், மிகவும் குறுகிய காலத்தில் 12 லட்சம் புத்தகங்களாக அதிகரிக்கும் நோக்கத்துடன் இயங்குகிறது. இது தேசிய மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு அருகே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். நூலகத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக "உலக இணைய மின் நூலகத்துடன்" (World Digital Library) இணைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோவின் உலக இணைய மின் நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூலகம் சர்வதேச தரத்துடன் அமைந்துள்ளதால் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அனைத்துத் தரப்பு மக்களும் வருகை தருகிறார்கள். இந்நூலகத்தின் ஒவ்வொரு தளமும் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. சொந்த நூல்கள் பயன்படுத்தும் பிரிவு: பயனாளர்கள் தங்கள் சொந்த நூல்கள் மற்றும் மடிக்கணினிகளைக் கொண்டு வந்து படிப்பதற்கான தனிப்பிரிவு உள்ளது. உரிய அனுமதியுடன் வாசகர்கள் தங்கள் புத்தகங்களைக் குறிப்பிட்ட பகுதிக்குள் பயன்படுத்தலாம்.

மெய்ப்புல அறைகூவலர் பிரிவு : மெய்ப்புல அறைகூவலர் பிரிவில் பார்வையற்றோர்களுக்காகச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவில் மெய்ப்புல அறைகூவலர்கள் தங்களின் கல்வி தாகத்தைப் போக்கிக்கொள்ளலாம். இப்பிரிவில் 500-இக்கும் மேற்பட்ட பிரைய்லி புத்தகங்களும், 400-இக்கும் மேற்பட்ட குறுந்தகடுகளும் உள்ளன.

நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் பிரிவு : நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் பிரிவில் தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம் மற்றும் தெலுங்கில் பல நாளிதழ்களும் பருவ இதழ்களும் உள்ளன. தமிழில் வெளியிடப்படும் அனைத்துப் பருவ இதழ்களும் இங்கு உள்ளது என்பது தனிச்சிறப்பு. கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு, சமயம், மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு சம்மந்தமான பருவ இதழ்களும் உள்ளன. உள்நாடு மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் பருவ இதழ்கள் பெறப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன. இங்குப் பருவ இதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் என்று பகுக்கப்பட்டு எளிய முறையில் நிலைப்பேழையில் (அலமாரியில்) வைக்கப்பட்டுள்ளன. கூடுதலாகப் பழைய நாளிதழ்களும், பருவ இதழ்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

குழந்தைகள் பிரிவு : முதல் தளத்தில் 15000 சதுரடிப் பரப்பில் குழந்தைகளுக்கென்று உருவாக்கப்பட்ட நூற்பிரிவு அமைந்துள்ளது. இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட பல்லூடகக் குறுந்தகடுகள் அவர்கள் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் குழந்தைகளுக்காகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நூல்கள் பிரிவு : இரண்டாவது தளத்தில் தமிழ் நூல்கள் அ மற்றும் ஆ என இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. 'அ' பிரிவில், அண்ணா எழுதிய மற்றும் அண்ணாவைப் பற்றிய நூல்கள், பெரியாரின் நூல்கள், கலைஞரின் நூல்கள், பொது அறிவு நூல்கள், கணினி அறிவியல், கலைக் களஞ்சியம், தொகுப்பு நூல்கள், இதழியல், தத்துவம் மற்றும் உளவியல், சுய முன்னேற்ற நூல்கள், சமய நூல்கள், ஆன்மீகம், சமூகவியல், அரசியல், பொருளியல், சட்டம், வணிகவியல், மொழியியல், நாட்டுப்புறவியல், தமிழ் அகராதி, இலக்கண நூல்கள், அறிவியல், வானியல், கணிதவியல், தொழில் நுட்பவியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, நுண்கலைகள், திரைப்படவியல், விளையாட்டு பற்றிய அனைத்து நூல்களும் உள்ளன.

'ஆ' பிரிவில், சங்க இலக்கிய நூல்கள், சிற்றிலக்கியங்கள், கவிதைகள், கதைகள், கட்டுரைகள், சிறு கதைகள், புதினம், நாடகம், பயணக்கட்டுரைகள், கடிதங்கள், நகைச்சுவை நூல்கள், வாழ்க்கை வரலாறு, இலங்கைத் தமிழர் வரலாறு, புவியியல் மற்றும் அரிய நூல்கள் போன்றவை மிகச்சிறந்த முறையில் பகுத்து வைக்கப்பட்டுள்ளன.

ஆங்கில நூல்கள் பிரிவு : மூன்றாவது முதல் ஏழாம் தளம் வரை ஆங்கில நூல்கள் பாட வாரியாகப் பகுத்து வைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது தளத்தில் ஆங்கில மொழியிலான பல புத்தகங்கள் உள்ளன. பொது அறிவு, கணினி அறிவியல், நூலகம் & தகவல் அறிவியல், தத்துவம், உளவியல், அறவியல் மற்றும் மதம், சமூகவியல், புள்ளியியல், மற்றும் அரசியல் தொடர்பான நூல்கள் உள்ளன.

நான்காவது தளத்தில் பொருளியல், சட்டம், பொது நிருவாகம், கல்வி, வணிகவியல், மொழியியல், மற்றும் இலக்கியம் தொடர்பான நூல்கள் உள்ளன. ஐந்தாவது தளத்தில் பொது அறிவியல், கணிதவியல்,, வானவியல், இயற்பியல், வேதியியல், புவியமைப்பியல், உயிரியல், மற்றும் மருத்துவம் தொடர்பான நூல்கள் உள்ளன. ஆறாவது தளத்தில் பொறியியல், வேளாண்மை, உணவியல், மேலாண்மை, கட்டடக்கலை, நுண்கலை, மற்றும் விளையாட்டு தொடர்பான நூல்கள் உள்ளன. ஏழாவது தளத்தில் வரலாறு, புவியியல், வேதியியல், சுற்றுலா & பயண மேலாண்மை மற்றும் வாழ்க்கை வரலாறு தொடர்பான நூல்கள் உள்ளன. ஏழு தளங்கள் உள்ளன.

அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தினமும் நூலகத்தில் அமர்ந்து அங்குள்ள பொதுவான நூல்களை, அமெரிக்க நூலக முறையான டேவே பகுப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் அறிவார்ந்த நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு தினசரி வரும் வாசகர்களின் எண்ணிக்கை தோராயமாக அதிகபட்சம் 300 பேராக உள்ளது. நூலக துறையின் ஆரம்பம் காலம் தொட்டு ஆயிரக்கணக்கில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்ற போதிலும் அதிகபட்சம் 1000 வாசகர்களே செயல்பாட்டு உறுப்பினராக உள்ளனர். இதில் தோராயமாக அதிகபட்சம் 10 சதவீத வாசகர்கள் தினமும் நூல்களை எடுத்து செல்வதற்காக வந்து செல்கிறார்கள். அதாவது தினமும் அதிகபட்சம் 100 வாசகர்கள் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். ஆக மொத்தம் தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கும், நூல்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காகவும் சேர்த்து தினமும் 400 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். மற்றும் நூலகத்தில் அமர்ந்து தினசரி தமிழ், ஆங்கில பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக தினமும் அதிகபட்சம் 150 வாசகர்கள் வருகை

தருகிறார்கள். ஆக இந்த வகைகளில் சேர்த்து அதிகபட்சம் மொத்தம் 550 வாசகர்கள் தினமும் வருகை தருகிறார்கள்.

தமிழகத்தில் 2021ஆம் ஆண்டு மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை முதலமைச்சராகக் கொண்டு பதவியேற்ற அரசு தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் நூற்றாண்டு நினைவாக ரூபாய் 206 கோடி செலவில் மதுரை மாநகரில் நூலகம் அமைக்கத் திட்டமிட்டது. இதன் தொடர்ச்சியாக 2022ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நூலக கட்டுமானப் பணிகள் துவங்கியது. இந்நூலக கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இந்நூலகத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சூலை 15, 2023 அன்று திறந்துவைத்தார்.

இந்நூலகம் சுமார் 206 கோடி ரூபாய் செலவில் 6 தளங்களுடன் 2 லட்சத்து 13 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 5 இலட்சம் புத்தகங்கள் வைக்க வசதியுடன் அமைக்கப்பட்ட இந்நூலகத்தில் தற்பொழுது 3.5 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. புத்தகங்கள் அனைத்தும் அமெரிக்க நூலக முறையான டேவே பகுப்பின் படி வகைப்படுத்தி அடுக்கப்பட்டுள்ளன, எனவே வாசகருக்குப் புத்தகத்தின் இருப்பை அறிந்து, தேடுவது எளிதாகும்.

தரைத்தளம் மாற்றுத் திறனாளிகளுக்கானது

முதல் தளம் குழந்தைகள் நூல் சிறுவர் திரையரங்கம், கலையரங்கம், மாதிரி வானூர்தி, எண்ணிம திரைகள்

இரண்டாம் தளம் தமிழ் நூல்கள்

மூன்றாம் தளம் ஆங்கில நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் தமிழ்நூல்கள் சில இங்கு உள்ளன

நான்காம் தளம் போட்டித் தேர்வுகளுக்கான நூலகப்பகுதி

ஐந்தாம் தளம் பார்வையற்றவர்களுக்கான நூல்கள் மின்னூல், ஒலிநூல்

ஆறாம் தளம் மேற்கோள் நூல்கள் நிர்வாகப் பகுதி இந்நூலகம் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு அடுத்த பெரிய நூலகமாகத் தமிழகத்தில் உள்ளது.

மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் தினமும் நூலகத்தில் அமர்ந்து அங்குள்ள பொதுவான நூல்களை, அமெரிக்க நூலக முறையான டேவே பகுப்பின் அடிப்படையில்

பிரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் அறிவார்ந்த நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு தினசரி வரும் வாசகர்களின் எண்ணிக்கை தோராயமாக அதிகபட்சம் 400 பேராக உள்ளது. நூலகங்களில் இருந்து நூல்களை எடுத்துச் செல்லக்கூடிய செயல்பாட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,500 தினமும் அதிகபட்சம் 150 வாசகர்கள் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். ஆக மொத்தம் தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கும், நூல்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காகவும் சேர்த்து தினமும் 550 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். மற்றும் நூலகத்தில் அமர்ந்து தினசரி தமிழ், ஆங்கில பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக தினமும் அதிகபட்சம் 100 வாசகர்கள் வருகை தருகிறார்கள். ஆக இந்த வகைகளில் அதிகபட்சம் மொத்தம் 650 வாசகர்கள் தினமும் வருகை தருகிறார்கள்.

ஒவ்வொரு நூலகத்திலும் 10 - 20 நூலக நண்பர்கள் தயார் செய்து புத்தகங்களை எடுத்துச் சென்று வீடுகளுக்கு தர வேண்டும் என தமிழ்நாடு அரசு நூலகத்துறையினால் முடிவெடுக்கப்பட்டது. மேலும் நூலக நண்பர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ரூ 1000 அரசு வழங்கும் என்று தற்போது நூலக துறையின் பொறுப்பில் இருக்கும் தமிழ்நாடு நூலகத்துறை இயக்குனரால் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்ட ஆரம்ப நிலையிலேயே நடைமுறைப்படுத்த இயலாமல் கைவிடப்பட்டது. காரணம் மாதம் ரூ 1000 என்ற சிறு தொகையை பெற்றுக்கொண்டு வீடு வீடாகச் சென்று நூலக புத்தகங்களை விநியோகம் செய்யும் நூலக நண்பர்கள் என்ற பொறுப்பினை எடுத்துக் கொள்ள யாரும் முன் வரவில்லை. அதேபோல் வீடு தேடி கல்வி என்ற திட்டத்தின் கீழ் நூலகர்கள் வீடுகள் தோறும் சென்று ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரையாவது நூலக உறுப்பினராக சேர்த்து புத்தகம் வழங்குதல். இந்த திட்டம் முழு தோல்வி அடைந்து விட்டது காரணம் நூலகங்களில் பணி புரிவதற்கு தேவையான அளவில் நூலகர்கள் இல்லாத சூழ்நிலையை தமிழ் நூலகத்துறை உருவாக்கியுள்ளது. ஆயிரம் ஆயிரம் பேர் (Library science) நூலகர் தகுதி பட்டய படிப்பு முடித்துவிட்டு வேலையில்லாமல் காத்திருக்கும் சூழலில் தமிழ்நாடு அரசு நூலகங்களுக்கு பெருமளவில் நூலகர்களை புதிதாக பணிக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறாக ஆட்குறைப்பு செய்து நூலகத்துறை செலவினங்களை குறைக்கும் வேளையில் நூலகத் துறை ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மாவட்ட மைய நூலகங்களை தவிர்த்து கிளை நூலகங்கள், முழு நேர கிளை நூலகங்கள், பகுதி நேர கிளை நூலகங்களில் வாசகர் வருகை பெருமளவு குறைவுபட்டு வருவதையும் நூலக செயல்பாட்டின் (Active) உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருமளவு குறைந்து விட்டதும் கிளை நூலகங்களும், கிராம நூலகங்களும் அழிவின் விளிம்பிலேயே சென்றடைந்து விட்டன. என்பதை நாங்கள் நேரில் சென்று ஆய்வு செய்தபோது அறிந்து பெரும் அதிர்ச்சி அடைந்து விட்டோம். மேலும் கிராம நூலகங்கள் செத்தேவிட்டன. **பிணங்கள் வராத கிராம சுடுகாட்டில் வெட்டியான் வெட்டியாக உட்கார்ந்து கொண்டு பொழுதை கழிப்பதை போல் கிராம நூலகர்கள் செயல்பட்டு வருகின்றார்கள்.** வேலை நாட்களில் பெயரளவில் கிராம நூலகங்களை திறந்து வைத்துக்கொண்டு. நூலகத்துறை ஆரம்ப காலத்தில் இருந்து வாங்கி சேர்க்கப்பட்ட ஆயிரக்கணக்கான பழைய புத்தகங்களையும், அவ்வப்போது மாவட்ட மைய நூலகத்தில் இருந்து வந்து சேரும் புதிய புத்தகங்களையும் கட்டுக்கட்டாக கட்டி மளிகை சாமான் மூட்டைகளை போல் போட்டு குவித்து விட்டு ஒருவர் கூட அமர இடமில்லாத நிலையில் தானிய சேமிப்பு கிடங்குகள் போல் அந்த புத்தகங்களை தூசு தட்ட கூட ஆளில்லாமல் ஒரே ஒரு நூலகர் வாசகர்கள் வந்து போவதாக தினமும் கணக்கெழுதி கொண்டு காலம் கழித்து வருவதை கண்டு பெரும் வேதனை அடைந்தோம்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 12618 ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் நூலகங்கள் அமைப்பதற்கு 25/10/2007 இல் Rural Development and Panchayat Raj (SGS II) Department G.O. (Ms) No. 177 கீழ் திட்டமிடப்பட்டு அடுத்த ஐந்து வருடங்களில் அதாவது 2012 க்குள்ளாக தமிழ்நாட்டின் அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் நூலகங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆயினும் இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான அறிகுறியே தமிழ்நாட்டின் எந்த கிராம பஞ்சாயத்திலும் காணப்படவில்லை என்பதுவும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கான அறிகுறியாக அங்கொன்றும், இங்கொன்றுமாக சில கிராம பஞ்சாயத்துகளில் காண முடிகிறது. இத்தகைய சிறப்புமிக்க திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் பின்னடைவு என்பது தமிழ்நாட்டின் கிராமப்புற பள்ளி மாணவ, மாணவியர்கள், பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், ஊனமுற்றோர் நூலக கல்வி பெறுவதில் 21 ஆம் நூற்றாண்டில் கால் நூற்றாண்டு கடந்த பின்பும் மக்களின் அறிவு வளர்ச்சியை பின்னோக்கி இழுத்துச் செல்லும் கேடான, மானக்கேடான விசயமாகும்.

மாவட்ட மைய நூலகங்களிலோ இன்னும் மோசமான நிலைமை நகர்புறங்களில் 1950, 1960, 1970, 1980, 1990 பிறந்து உயிர் வாழ்ந்து வரும் மக்களில் மிக மிகச் சிறிய எண்ணிக்கையில் நூலக உறுப்பினராக செயல்பாட்டில் இருந்து வருபவர்கள் நூலகங்களில் புத்தகங்கள் எடுத்துச்செல்ல வந்து போவதால் நூலகங்கள் தங்களது சாவு படுக்கையில் இறுதி மூச்சை விட்டுக் கொண்டு இருப்பதை கண்கூடாக காண முடிந்தது. ஆனால் ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்திலும் தினமும் நூலகத்தில் அமர்ந்து நூலகத்திலுள்ள பொதுவான நூல்களைப் படிப்பதற்கு 10 பேர் வருவதே அரிதாக இருக்கிறது. அதாவது தினமும் எல்லா மாவட்ட மைய நூலகத்திலும் சேர்த்து நூலகங்களில் அமர்ந்து நூல்களைப் படிப்பதற்கு தோராயமாக மொத்தம் 320 பேர் வந்து செல்கிறார்கள். தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு ஒரு மாவட்ட மைய நூலகத்திற்கு வருவோரின் எண்ணிக்கை 10 - 30 வரை உள்ளது. ஆக 32 மாவட்ட மைய நூலகங்களில் சேர்த்து தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக தினமும் அதிகபட்சம் மொத்தம் 960 வாசகர்கள் வந்து செல்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நூலக சட்டம் நடைமுறைக்கு வந்த ஏப்ரல் 1/1950 முதல் இன்று வரை ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்திலும் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை வாசகர்களாக சேர்க்கப்பட்டுள்ளன . ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்திலும் 100 முதல் 150 உறுப்பினர்களே செயல்பாட்டு உறுப்பினர்களாக உள்ளனர். ஆக தமிழ்நாட்டின் 32 மாவட்ட மைய நூலகங்களிலும் சேர்த்து அதிகபட்சம் 4800 பேர் செயல்பாட்டு உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் தினமும் 10% சதவீதம் பேர் அதாவது அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் சேர்த்து அதிகபட்சம் 480 பேர் நூல்களை எடுத்து செல்வதற்காக வந்துசெல்கிறார்கள். அதாவது ஒரு மாவட்ட மைய நூலகத்திற்கு நூல்களை எடுத்துச் செல்வதற்காக தினமும் அதிகபட்சம் 15 பேர் வந்து செல்கிறார்கள் ஆக 32 மாவட்ட மைய நூலகங்களையும் சேர்த்து தினமும் நூல்களைப் படிப்பதற்கு அதிகபட்ச மொத்தம் 320 வாசகர்களும், தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு அதிகபட்சம் மொத்தம் 960 வாசகர்களும் நூலகத்தில் இருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்காக அதிகபட்ச மொத்தம் 480 வாசகர்களும் ஆக இந்த வகைகளில் தினமும் அதிகபட்சம் மொத்தம் 1760 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். அதாவது ஒரு மாவட்ட மைய நூலகத்திற்கு தினமும் தோராயமாக சராசரி 55 வாசகர்கள் வந்து செல்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் 314 முழு நேர கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் பெரும்பாலான கிளை நூலகங்களில் வந்து அமர்ந்து அங்குள்ள நூல்களை எடுத்து படிப்பதற்கான வாசகர்கள் வருகை அற்றுப் போய்விட்டது என்பதை எங்களின் கள ஆய்வில் அறிந்து அதிர்ச்சியுற்றோம். தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக முழு நேர கிளை நூலகங்களுக்கு தினமும் அதிகபட்சம் 10 - 20 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். ஆக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 314 கிளை நூலகங்களையும்

சேர்த்து தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் மொத்தம் 6,280 ஆக உள்ளது. நூலக ஆரம்ப காலம் தொட்டு முழுநேர கிளை நூலகங்களில் ஆயிரக்கணக்கில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றுள்ளன போதிலும் 50 - 100 வாசகர்களே செயல்பட்டு உறுப்பினர்களாக உள்ளனர். ஆக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 314 முழு நேர கிளை நூலகங்களை சேர்த்து அதிகபட்சம் மொத்தம் 31,400 செயல்பாட்டு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் அதிகபட்சம் 10% சதவீத வாசகர்கள் தினமும் முழு நேர கிளை நூலகங்களில் இருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள் அதாவது அனைத்து முழு நேர கிளை நூலகங்களையும் சேர்த்து தினமும் அதிகபட்சம் மொத்தம் 3,140 வாசகர்கள் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். அதாவது ஒரு முழு நேர கிளை நூலகத்திற்கு நூல்களை எடுத்துச் செல்வதற்காக தினமும் சராசரி 10 பேர் வந்து செல்கிறார்கள் ஆக 314 முழு நேர கிளை நூலகங்களையும் சேர்த்து தினமும் நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை 0 ஆக உள்ளது. ஒரு சில முழு நேர கிளை நூலகங்களில் ஒரு சில வாசகர்கள் வந்து அமர்ந்து படிப்பதை பார்க்க முடிந்தது. தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்ச மொத்தம் 6280 ஆகவும், நூலகத்திலிருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்காக வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்ச மொத்த 3,140 ஆக உள்ளது. ஆக இந்த வகைகளில் தினமும் அதிகபட்சம் மொத்தம் 9,420 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். அதாவது ஒரு முழு நேர கிளை நூலகத்திற்கு தினமும் தோராயமாக சராசரி 30 வாசகர்கள் வந்து செல்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் 1,612 கிளை நூலகங்கள் செயல்பட்டுவருகின்றன. அவற்றுள் பெரும்பாலான பகுதி நேர கிளை நூலகங்களில் வந்து அமர்ந்து அங்குள்ள நூல்களை எடுத்து படிப்பதற்கான வாசகர்கள் வருகை அற்று போய்விட்டது என்பதை எங்களின் கள ஆய்வில் அறிந்து கொண்டோம். தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக பகுதி நேர கிளை நூலகங்களுக்கு தினமும் அதிகபட்சம் 15 பேர் வாசகர்கள் வந்து செல்கிறார்கள். ஆக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பகுதி நேர கிளை நூலகங்களையும் அனைத்தையும் சேர்த்து தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்ச மொத்தம் 24,180 ஆக உள்ளது. நூலக ஆரம்பம் காலம் தொட்டு பகுதி நேர கிளை நூலகங்களில் ஆயிரக்கணக்கில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றுள்ள போதிலும் 30 - 60 வாசகர்களே செயல்பாட்டு உறுப்பினர்களாக உள்ளனர். ஆக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 1,612 பகுதி நேர கிளை நூலகங்களையும் அனைத்தையும் சேர்த்து அதிகபட்சம் மொத்தம் 96,720 செயல்பாட்டு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் அதிகபட்சம் 10 சதவீத வாசகர்கள் தினமும் பகுதி நேர கிளை நூலகங்களிருந்து நூல்களை எடுத்து செல்வதற்காக வந்து செல்கிறார்கள். அதாவது அனைத்து நூலகங்ளையும் சேர்த்து தினமும் அதிகபட்சம் மொத்தம் 9,720 வாசகர்கள் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். ஆக 1,612 பகுதி நேர கிளை நூலகங்களையும் சேர்த்து தினமும் நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு வாசகர்களின் எண்ணிக்கை 0 ஆக உள்ளது. தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்ச மொத்தம் 24,180 ஆகவும் நூலகத்திலிருந்து நூல்களை எடுத்து செல்வதற்காக வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் மொத்தம் 9,720 ஆகவும் உள்ளது. ஆக இந்த வகைகளில் தினமும் அதிகபட்ச மொத்தம் 33,852 வாசகர்கள் வந்து செல்கிறார்கள். அதாவது ஒரு பகுதி நேர கிளை நூலகத்திற்கு தினமும் தோராயமாக சராசரி 21 வாசகர்கள் வந்து செல்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் 771 பகுதி நேரம் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் பெரும்பாலான பகுதிநேர நூலகங்களில் வந்து அமர்ந்து அங்குள்ள நூல்களை எடுத்து படிப்பதற்கான வாசகர்கள் வருகை அற்றுப் போய்விட்டது என்பதை எங்களின் கள ஆய்வில் அறிந்து கொண்டோம். தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை

படிப்பதற்காக பகுதி நேர நூலகங்களுக்கு தினமும் அதிகபட்சம் 10 பேர் வாசகர்கள் வந்து செல்கிறார்கள். ஆக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து பகுதிநேர நூலகங்களையும் சேர்த்து தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்காக வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்ச மொத்தம் 7,710 ஆக உள்ளது. நூலக ஆரம்ப காலம் தொட்டு பகுதி நேர நூலகங்களில் ஆயிரக்கணக்கில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்ற போதிலும் 25 - 50 வாசகர்களே செயல்பாட்டு உறுப்பினர்களாக உள்ளனர். ஆக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 771 பகுதி நேர நூலகங்களை சேர்த்து அதிகபட்சம் 15,420 செயல்பாட்டு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் அதிகபட்சம் 10 சதவீத வாசகர்கள் தினமும் பகுதி நேர நூலகங்களில் இருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். அதாவது பகுதி நேர அனைத்து நூலகங்களையும் சேர்த்து தினமும் அதிகபட்சம் மொத்தம் 1,542 வாசகர்கள் நூல்களை எடுத்துச் செல்வதற்காக வந்து செல்கிறார்கள். ஆக 771 பகுதி நேர நூலகங்களையும் சேர்த்து தினமும் நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு வரும் வாசகரின் எண்ணிக்கை 0 உள்ளது. தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் மொத்தம் 7,710 ஆகவும் நூலகத்திலிருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்காக வரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் மொத்தம் 1,542 ஆகவும் உள்ளது. ஆக இந்த வகைகளில் தினமும் அதிகபட்சம் மொத்தம் 9,252 வாசகர்கள் வந்து செல்கிறார்கள் அதாவது ஒரு பகுதி நேர நூலகத்திற்கு தினமும் தோராயமாக சராசரி 12 வாசகர்கள் வந்து செல்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 1915 கிராம நூலகங்களில் பெரும்பாலான நூலகங்கள் வாசகர்கள் வந்து அமர்ந்து நூல்களை படிப்பதற்கு இடம் வசதி இல்லாமல் இருக்கின்றன. மேலும் நூல்களைப் படிப்பதற்கோ தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கோ அல்லது நூல்களை எடுத்துச் செல்வதற்கோ வாசகர்கள் இல்லாமல் செயலற்று போய் இருப்பதை எங்கள் கள ஆய்வில் காணமுடிந்தது. ஒரு சில பெரிய கிராமங்களில் உள்ள கிராம நூலகங்களில் வாசகர்கள் வந்து அமர்ந்து படிப்பதற்கு இடம் வசதி உள்ளது என்பதையும் ஒரு சில வாசகர்களை தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு வந்து செல்வதை காண முடிந்தது.

**தமிழ்நாடு அரசு பொது நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கும் நூல்களைப் படிப்பதற்காக தங்களின் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காக வருகை தரும் வாசகர்களின் விவரம் கள ஆய்வின்படி**

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மைய நூலகத்திற்கு தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி | 100 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மைய நூலகத்திற்கு தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டின் உறுப்பினர்கள் எண்ணிக்கை | 50 பேர் |

| | | |
|---|---|---|
| 3 | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மைய நூலகத்திற்கு தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 150 பேர் |

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு தினமும் பொதுவான நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்த படி | 300 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கை | 100 பேர் |
| 3 | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 400 பேர் |

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு தினமும் பொதுவான நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்த படி | 400 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 150 பேர் |
| 3 | ஆக இந்த வகையில் தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 550 பேர் |

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு மாவட்ட மைய நூலகங்கள் 32 லும் சேர்த்து தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 10 பேர் என்ற எண்ணிக்கையின்படி 32 நூலகங்கள் x 10 பேர் | 320 பேர் |

| | | |
|---|---|---|
| 2 | தமிழ்நாடு அரசு மாவட்ட மைய நூலகங்கள் 32 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டின் உறுப்பினர்களின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி தினமும் அதிகபட்சம் 15 பேர் என்ற எண்ணிக்கையின் படி 32 நூலகங்கள் x 15 பேர் | 480 பேர் |
| 3 | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு மாவட்ட மைய நூலகங்கள் 32 ல் சேர்த்து தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 800 பேர் |
| 4 | தினமும் தோராயமாக சராசரி ஒரு மாவட்ட மைய நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 55 பேர் |

| **வரிசை எண்** | **பொருள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு முழு நேர கிளை நூலகங்கள் 314 ல் சேர்த்து தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 0 பேர் என்ற எண்ணிக்கையின்படி 314 நூலகங்கள் x 0 பேர் | 0 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு முழு நேர கிளை நூலகங்கள் 314 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டின் உறுப்பினர்களின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி தினமும் அதிகபட்சம் 10 பேர் என்ற எண்ணிக்கையின் படி 314 நூலகங்கள் x 10 பேர் | 3,140 பேர் |

| | | |
|---|---|---|
| 3 | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு முழு நேர கிளை நூலகங்கள் 314 ல் சேர்த்து தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 9,420 பேர் |
| 4 | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு முழு நேர கிளை நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 30 பேர் |

| **வரிசை எண்** | **பொருள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| **1** | தமிழ்நாடு அரசு கிளை நூலகங்கள் 1612 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை 0 என்ற எண்ணிக்கை படி 1612 நூலகங்கள் x 0 பேர் | 0 பேர் |
| **2** | தமிழ்நாடு அரசு கிளை நூலகங்கள் 1612 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூல்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டின் உறுப்பினர்களின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி தினமும் அதிகபட்சம் 30 பேர் என்ற எண்ணிக்கையின் படி 1612 நூலகங்கள் x 30 பேர் | 9,720 பேர் |
| **3** | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு கிளை நூலகங்கள் 1612 ல் சேர்த்து தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 33,852 பேர் |
| **4** | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு பகுதி நேர கிளை நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 21 பேர் |

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு பகுதி நேர நூலகங்கள் 771 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை 0 என்ற எண்ணிக்கை படி 771 நூலகங்கள்-0 பேர் | 0 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு பகுதி நேர நூலகங்கள் 771 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூல்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டின் உறுப்பினர்களின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி தினமும் அதிகபட்சம் 20 பேர் என்ற எண்ணிக்கையின் படி 771 நூலகங்கள் x 20 பேர் | 1,542 பேர் |
| 3 | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு பகுதி நேர நூலகங்கள் 771 ல் சேர்த்து தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை | 9,252 பேர் |
| 4 | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு பகுதி நேர நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 12 பேர் |

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு கிராம நூலகங்கள் 1915 சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்கு வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை 0 என்ற எண்ணிக்கையின்படி 1915 நூலகங்கள் x 0 பேர் | 0 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு கிராம நூலகங்கள் 1915 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள பொதுவான நூல்களை படிப்பதற்காக எடுத்துச் செல்லும் செயல்பாட்டின் | |

| | | |
|---|---|---|
| | உறுப்பினர்களின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி தினமும் அதிகபட்சம் 0 பேர் என்ற எண்ணிக்கையின் படி1915 நூலகங்கள் x 0 பேர் | 0 பேர் |
| 3 | ஆக இந்த வகைகளில் தமிழ்நாடு அரசு கிராம நூலகங்கள் 1915 ல் சேர்த்து தினமும் வந்து போவோரின் எண்ணிக்கை 0 | 0 பேர் |
| 4 | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு கிராம நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 0 பேர் |

**தினசரி பத்திரிகைகள், தினசரி தமிழ், ஆங்கில பத்திரிகைகள், வாரமாத தமிழ், ஆங்கில பருவ இதழ்கள் ஆகியவற்றை படிப்பதற்கு தமிழ்நாடு அரசு நூலகங்களுக்கு வருகை தரும் வாசகர்களின் விவரம் கள ஆய்வின்படி**

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மையம் நூலகத்திற்கு நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை | 200 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள் வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை | 150 பேர் |
| 3 | தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள் வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை | 100 பேர் |

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு மாவட்ட மைய நூலகங்கள் 32 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 30 பேர் என்ற எண்ணிக்கையின் படி 32 நூலகங்கள் x 30 பேர் | 960 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு முழு நேர கிளை நூலகங்கள் 314 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 20 பேர் என்ற எண்ணிக்கையின் படி 314 நூலகங்கள் x 20 பேர் | 6,280 பேர் |
| 3 | தமிழ்நாடு அரசு கிளை நூலகங்கள் 1612 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 15 பேர் என்ற எண்ணிக்கையின் படி 1612 நூலகங்கள் x 15 பேர் | 24,180 பேர் |
| 4 | தமிழ்நாடு அரசு பகுதி நேர நூலகங்கள் 771 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 10 பேர் என்ற எண்ணிக்கையின் படி 771 நூலகங்கள் x 10 பேர் | 7,710 பேர் |

| | | |
|---|---|---|
| 5 | தமிழ்நாடு அரசு கிராம நூலகங்கள் 1915 ல் சேர்த்து மொத்தம் தினமும் நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்தபடி ஒரு நூலகத்திற்கு அதிகபட்சம் 0 என்ற எண்ணிக்கையின் படி 1915 நூலகங்கள் x 0 பேர் | 0 பேர் |

**தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நூலகங்களையும் சேர்த்து நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கும், நூலகங்களில் இருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்கும் ஆக இந்த இரண்டு வகைகளில் நூலகங்களுக்கு வருகை தரும் வாசகர்களின் மொத்த எண்ணிக்கை விவரப்பட்டியல்**

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தினமும் தோராயமாக சராசரி அரசு சென்னை கன்னிமாரா மாநில மையம் நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 150 பேர் |
| 2 | தினமும் தோராயமாக சராசரி அரசு சென்னை சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 400 பேர் |
| 3 | தினமும் தோராயமாக சராசரி அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 550 பேர் |
| 4 | தினமும் தோராயமாக சராசரி ஒரு மாவட்ட மைய நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 55 பேர் |
| 5 | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு முழு நேர கிளை நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 30 பேர் |
| 6 | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு பகுதி நேர கிளை நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 21 பேர் |
| 7 | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு பகுதி நேர நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 12 பேர் |
| 8 | | |

| | | |
|---|---|---|
| | தினமும் தோராயமாக சராசரி ஒரு அரசு கிராம நூலகத்திற்கு வந்து செல்லும் வாசகர்களின் எண்ணிக்கை | 0 பேர் |
| 9 | தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நூலகங்களையும் சேர்த்து நூலகங்களில் அமர்ந்து நூல்களைப் படிப்பதற்கும், நூலகங்களில் இருந்து நூல்களை எடுத்துச் செல்வதற்கும் தினசரி வந்து போவோரின் மொத்த எண்ணிக்கை | 1218 பேர் |

| **வரிசை எண்** | **பொருள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மையம் நூலகம், சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாவட்ட மைய நூலகம், முழுநேர கிளை நூலகம், பகுதிநேர கிளை நூலகம், பகுதிநேர நூலகம், கிராம நூலகங்களில் உள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்களை படிப்பதற்கு தினமும் வருவோரின் எண்ணிக்கை கள ஆய்வில் கண்டறிந்த படி | 39,580 பேர் |

**தமிழ்நாடு அரசு நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நூல்களை வாசிப்பதில் நடைமுறையில் செயல்பாட்டில் இருக்கும் வாசகர்களின் மொத்த எண்ணிக்கை விவரப்பட்டியல்**

**மொத்த எண்ணிக்கை பட்டியல்-1**

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மைய நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 100 x 3 | 300 பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 300 x 3 | 900 பேர் |
| 3 | தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 400 x 3 | 1200 பேர் |
| 4 | தமிழ்நாடு அரசு மாவட்ட மைய நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 320 x 3 | 960 பேர் |

| | | |
|---|---|---|
| 5 | தமிழ்நாடு அரசு முழு நேர கிளை நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 0 x 0 | 0 பேர் |
| 6 | தமிழ்நாடு அரசு கிளை நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 0 x 3 | 0பேர் |
| 7 | தமிழ்நாடு அரசு பகுதி நேர நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 0 x 3 | 0பேர் |
| 8 | தமிழ்நாடு அரசு கிராம நூலகங்களில் அமர்ந்து நூல்களை படிப்பதற்கு தினசரி வருகை தரும் வாசகர்களின் தோராய எண்ணிக்கையின் மூன்று மடங்கை நூல்களை வாசிப்பவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் என்று எடுத்துக் கணக்கில் கொண்டால் 0 x 3 | 0 பேர் |
| 9 | மொத்த எண்ணிக்கை | 3,360 பேர் |

**மொத்த எண்ணிக்கை-2**

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு சென்னை கன்னிமாரா மாநில மைய நூலகத்தில் இருந்து நூல்களை படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 500பேர் |
| 2 | தமிழ்நாடு அரசு சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இருந்து நூல்களை படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 1000பேர் |
| 3 | தமிழ்நாடு அரசு மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் இருந்து நூல்களைப் படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 1,500 பேர் |
| 4 | தமிழ்நாடு அரசு மாவட்ட மைய நூலகத்தில் இருந்து நூல்களை படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 4,800 பேர் |
| 5 | தமிழ்நாடு அரசு முழு நேர கிளை நூலகங்களில் இருந்து நூல்களை படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 31,400 பேர் |
| 6 | தமிழ்நாடு அரசு கிளை நூலகங்களில் இருந்து நூல்களை படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 96,720 பேர் |
| 7 | தமிழ்நாடு அரசு பகுதி நேர நூலகங்களில் இருந்து நூல்களைப் படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 15,420 பேர் |

| | | |
|---|---|---|
| 8 | தமிழ்நாடு அரசு கிராம நூலகங்களில் இருந்து நூல்களைப் படிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் செயல்பாட்டு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 0 பேர் |
| 9 | தமிழ்நாடு அரசு நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நூல்களை வாசிப்பதில் நடைமுறையில் செயல்பாட்டில் இருக்கும் வாசகர்களின் மொத்த எண்ணிக்கை | 1,51,340 பேர் |
| 10 | பட்டியல் 1-ன் படி<br>பட்டியல் 2-ன் படி | 3,360 பேர்<br>1,51,340 பேர் |
| 11 | ஆக மொத்தம் செயல்பாட்டில் இருக்கும் வாசகர்களின் மொத்த எண்ணிக்கை | 1,54,700 பேர் |

**தமிழ்நாட்டில் வாசிக்கும் திறன் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் வாசிக்கும் பழக்கத்தில் நடைமுறையில் உள்ள மக்கள் எண்ணிக்கை சதவீத கணக்கு**

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இணைய தரவுகளின் படிதமிழ்நாட்டின் 2024 projected மக்கள் தொகையான 8.4 கோடி மக்களின் 1 to 10 வயது வரை உள்ள 1.2 கோடி சிறார்களை கழித்துவிட்டு பார்த்தால் தமிழ்நாட்டில் 11 வயதுக்கு மேற்பட்டு வாசிக்கும் திறன் கொண்ட மக்களின் எண்ணிக்கை சராசரி வயது சதவீத அடிப்படையில் மொத்த எண்ணிக்கை | 7,20,00,000 |
| 2 | அட்டவணைப ------படி தமிழ்நாடு அரசு நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நூல்களை வாசிப்பதில் நடைமுறையில் செயல்பாட்டில் இருக்கும் வாசகர்களின் மொத்த எண்ணிக்கை | 1,54,700 |

| | | |
|---|---|---|
| 3 | சதவீத கணக்குப்படி மொத்த வாசிப்பு திறன் கொண்ட மக்களின் நடைமுறையில் வாசிப்பு பழக்கத்தில் உள்ள மக்களின் சதவீதம்<br>1,54,700 x100<br>7,20,00,000 | 0.21% |
| 4 | அதாவது ஒரு ஆயிரம் மக்கள் தொகைக்கு தோராயமாக நடைமுறையில் வாசிப்பு பழக்கத்தில் மக்கள் எண்ணிக்கை<br>0.21 x 1000<br>100 | தோராயமாக ஆயிரம் பேருக்கு இருவர் |

ஆக ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு பொது நூலகங்களையும் சேர்த்து கோலன் பகுப்பின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் சுமார் 6 கோடி நூல்களை நூலகங்களில் அமர்ந்து படிப்பதற்காகவும், நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்காக நடைமுறையில் பழக்கத்தில் உள்ள மொத்த வாசகர்களின் எண்ணிக்கை தோராயமாக 1,54,700 ஆக இருக்கிறது. அதாவது இணைய தரவுகளின் படி தமிழ்நாட்டின் 2024 project மக்கள் தொகையான 8.4 கோடி மக்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் எண்ணிக்கை தோராயமாக 1 கோடியாக உள்ளது. மீதமுள்ள 7.4 கோடி மக்கள் தொகையை ஒவ்வொரு வயதிற்கும் சமமாக பிரிக்கும் பொழுது ஒவ்வொரு வயதிற்கும் தோராயமாக 12 லட்சம் மக்கள் எண்ணிக்கையில் இருக்க வாய்ப்புள்ளது. ஒவ்வொரு வயது மக்களின் சராசரி சதவீத மக்கள் தொகை கணக்கு படி 1-10 வயது வரை உள்ள 1.2 எண்ணிக்கையில் உள்ள சிறார்களை கழித்து விட்டு பார்த்தால் தமிழ்நாட்டில் 11 வயதுக்கு மேற்பட்ட வாசிக்கும் திறன் கொண்ட மக்களின் எண்ணிக்கை சராசரி வயது சதவீத மக்கள் அடிப்படையில் மொத்தம் 7.2 கோடி பேராக இருக்கும். இந்த 7.2 கோடி வாசிப்பு திறன் உள்ள மக்களில் 0.21 சதவீத மக்களே அதாவது ஆயிரத்தில் 2 பேர் எண்ணிக்கையில் மட்டுமே நூலகங்களில் நூல்களைப் படிக்கும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதே பட்டவர்த்தனமான உண்மையாக உள்ளது. நூலகங்கள், நூலக கல்வியில் ஏற்பட்டுள்ள இந்த பெரும் பின்னடைவு தமிழ் மொழியின் சிதைவிற்கான மூல காரணி ஆகவும், பெரும் அவல நிலையாகவும் உள்ளது. **இன்று நிலுவையில் நூலக வாசகர்களாக உள்ளவர்கள் 1950, 1960, 1970, 1980, 1990 களின் காலகட்டத்தில் பிறந்த 30 to 70 வயதிற்கு உட்பட்ட மக்கள் மட்டுமே என்பதும் இன்னும் 30 ஆண்டுகளில் இந்த மக்கள் வாழ்வு முற்றுப்பெற்று பிறகு நூலக வாசகர்கள் எண்ணிக்கை 0 வை அடைந்து முற்றுப்புள்ளி விழுந்துவிடும் பேரபாய பாதையில் நூலகத்துறை போய்க்கொண்டிருக்கிறது. என்பதே நம் அனைவருக்கும் பெரும் வேதனையும் கவலையும் தரக்கூடிய விசயமாக உள்ளது.** தமிழ்நாடு அரசு நூலகங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கோலன் பகுப்பு விவர பட்டியலின் படியான பூமி தோன்றியது முதல் இன்று வரையிலான சகல தகவல்களையும், வரலாறுகளையும், புவியியல் மாற்றங்களையும், சுற்றுச்சூழல்களையும் பருவநிலை மாற்றங்களையும், விஞ்ஞான, தொழில்நுட்ப மாற்றங்களையும், சமூக அரசியல் புரட்சிகளையும், உலக நாடுகளின் வரலாறுகளையும், நம் நாட்டு அரசியல் தலைவர்கள், உலகத் தலைவர்கள், அறிஞர்கள் ஆக அத்தனை அத்தனை அறிவு பெட்டகமாக ஞானத்தின் இருப்பிடமாக, உறைவிடமாக விளங்கும் நம் தமிழ்நாடு அரசு பொது நூலகங்களில் கையிருப்பில் குவிந்து கிடக்கும் 6 கோடிக்கு மேலான நூல்கள் படிப்பார்ன்றி

வீணே சிதைந்து பட காத்திருக்கின்றன என்பது மிகவும் கவலைக்கிடமான உண்மையாக இருக்கிறது.

**பட்டய கல்வி ஆராய்ச்சி கல்வி மாணவர்கள் தேர்வுகள் எழுதுவதற்கு தங்களை தயார் செய்து கொள்வதற்காகவும் மாநில மத்திய அரசு பணிகளில் சேர்வதற்கான மாநில மத்திய தேர்வாணையங்கள் தேர்வுகளை எழுதுவதற்கு தங்களை தயார் செய்து கொள்வதற்காகவும் தமிழ்நாடு அரசின் மாவட்ட மைய நூலகங்களுக்கு வருகை தரும் இளைஞர்கள் பற்றிய விவரம் கள ஆய்வின்படி.**

ஒவ்வொரு மாவட்ட மையம் நூலகங்களிலும் தமிழக அரசு வேலையில் சேர்வதற்கான தமிழ்நாடு அரசு தேர்வாணைய குழுவின் TNPSC குரூப்-1, குரூப் -2, குரூப் -2A, குரூப் -3 குரூப்-4 ஆகிய தேர்வுகளுக்கு தங்களை தயார் செய்து கொள்ளும் ஆர்வமிக்க இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக வருகின்றார்கள். முதுகலை பட்டய படிப்பு முடித்த இளைஞர்கள் தங்களின் ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்வதற்கு நூலகம் வருகிறார்கள். மேலும் ஒன்றிய அரசின் வேலைகளில் சேர்வதற்கான ஒன்றிய அரசு தேர்வாணைக்கு குழுவின் (UPSC) தேர்வுகளுக்கு தங்களை தயார் செய்து கொள்ளும் ஆர்வமிக்க இளைஞர் கூட்டம் நூலகங்களுக்கு வருகை தருகிறார்கள். இவ்வாறு மாவட்ட மைய நூலகங்களுக்கு தினமும் அதிகபட்சம் 70 to 100 தினமும் இளைஞர்கள் வருகிறார்கள். திருச்சி மாவட்ட மைய நூலகத்திற்கு 200 to 300 மாணவர்கள் வருகிறார்கள், சென்னை மாவட்ட மையம் நூலகத்திற்கு தினமும் அதிகபட்சம் 50 பேர் வருகிறார்கள், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு இவ்வகையில் தேர்வுகளுக்கு தங்களை தயார் செய்வதற்கு தினமும் 800 இளைஞர்கள் வருகிறார்கள், சென்னை கன்னிமாரா நூலகத்திற்கு தினமும் 300 to 50 இளைஞர்கள் வருகிறார்கள், மதுரை கலைஞர் நூலக வளாகத்திற்கு தினமும் 500 to 60 இளைஞர்கள் வருகிறார்கள், ஒரு சில முழு நேர கிளை நூலகங்களில் இந்த வகை இளைஞர்கள் அதிகபட்சம் 50 பேர் வருகிறார்கள்.

இவ்வகையில் மாநில அரசு பணிகளுக்கான தேர்வுகள் மற்றும் மத்திய அரசு பணிக்கான தேர்வுகள் மற்றும் ஆராய்ச்சி பணிக்கான தேர்வுகள் ஆகியவற்றிற்கு தங்களை தயார் செய்து கொள்ளும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு தமிழக அரசின் மாவட்ட மைய நூலகங்களும் ஒரு சில கிளை நூலகங்களும் சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை கன்னிமாராக நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் ஆகிய நூலகங்கள் இந்த இளைஞர்கள் நாள் முழுவதும் அமர்ந்து படிப்பதற்கு இடம் வசதி அளித்து அவர்களுக்கு தேவையான குறிப்பு பாட புத்தகங்களை அளித்து பெரும் பணியாற்றி வருகின்றன.

மாநில, ஒன்றிய அரசு பணிகளுக்கான தேர்வாணைய தேர்வுகளுக்கு இளைய தலைமுறை மாணவ, மாணவியர் தயார் செய்யும் பணியானது தமிழக அரசு பொது நூலக துறையின் பொது நூலகங்களின் தலையான பணியான “**நூலக கல்வியை வளர்த்தல், தாய்மொழி தமிழை எழுச்சி பெற செய்தல்**”ஆகிய இன்றியமையாத அடிப்படை விதிகளின் கீழ் உட்படாது என்று அமையாத காரணத்தினால் எனது “நூலக கல்வி தமிழ் மொழி எழுச்சி” ஆய்வு பற்றிய இந்த ஆய்வு அறிக்கையில் இத்தகைய இளைஞர்கள் கூட்டத்தின் நூலக வருகையும் முக்கிய காரணியாக கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

**இத்தகைய பெரும் எண்ணிக்கையிலான இளைய தலைமுறையினரின் நூலக வருகை அவர்களது பட்டய கல்வி ஆராய்ச்சி கல்வி மற்றும் வருங்கால வேலை வாய்ப்பிற்கான பணிகளை சார்ந்த தேர்வுகளுக்கான பாடங்களை கற்றுக் கொள்வதற்காக மட்டுமே. அல்லாது இத்தகைய இளைஞர் கூட்டத்தின் வருகையும் கால அர்பணிப்பும் “நூலக கல்விக்கும், தமிழ் மொழி எழுச்சிக்கும்” ஒரு துளியும்**

**பயன்படாது என்பதோடு இல்லாமல் அதற்கு எந்த வகையிலும் சம்பந்தமும், பயன்பாடும் இல்லாத ஒன்றாகும்.**

ஆயினும் பட்டய கல்வி ஆராய்ச்சி கல்வி மற்றும் ஒன்றிய மாநில அரசு பணிகளுக்கு சேர்வதற்கான தேர்வுகள் எழுத லட்சக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு இளைஞர்களை தயார் செய்யும் தனியார் கல்வி பயிற்சி நிறுவனங்களுக்கு மாற்றாக எந்த விதமான கட்டணமும் இல்லாமல் ஆயிரக்கணக்கான ஏழை, எளிய இளைஞர்களுக்கு தமிழக அரசு நூலகங்கள் தேவையான நூல்களை அவர்களுக்கு தந்து மற்றும் நாள் முழுவதும் அமர்ந்து படிப்பதற்கு இடம் அளித்து கைகொடுத்து உதவி வருவது போற்றுதலுக்குரிய பெரும் பணியாகும்.

**விபரீத விளைவு**

நூலகங்கள், நூலக கல்வி அழிந்துபட்டு தமிழ் மொழியின் வளம் குன்றினால் தமிழ் மக்களின் அறிவு வளம் மற்றும் பொருளாதார வளம் குன்றி பாழ்பட்டு போகும். தமிழ் மக்களிடையே காலக்கணக்கு இல்லாது நிலைத்து வளர்ந்து வந்திருக்கும் அன்புடமை என்னும் பண்பாடும், ஒற்றுமை என்னும் சமுதாய கோட்பாடும் இவர்களை விட்டு அகன்று சென்று விடும். மத உணர்வுகளாலும், சாதி உணர்வுகளாலும் எளிதில் ஆட்கொள்ளப்பட்டு, பிளவுப்பட்ட சமுதாயமாக சிறுசிறு குழுக்களாக ஒருவர் மீது ஒருவர் வெறுப்புணர்வு கொண்டவர்களாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் நிகழும் அவல நிலை ஏற்பட பெரும் வாய்ப்புகள் உருவாகும்.

அலைபேசி, இணைய சேவை, திரைப்படங்கள், வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் பல்வேறு வகைப்பட்ட பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் ஆங்கில வழி கல்வி ஆகிய காரணிகளின் பெரும் தாக்கங்கள் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 2000 லிருந்து இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் மனதை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது என்று கள நிலவரப்படி முன்னர் கண்ட அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ள தோராயக் கணக்குகளின் படியும் தமிழ்நாடு அரசு தரவுகளின் படியும் CBSE கல்வி திட்டத்தின் கீழ் 95,438 மாணவ, மாணவியரும் தமிழ்நாடு அரசு சமச்சீர் கல்வி மாநில பாடத்திட்டத்தின் கீழ் 8,94,264 மாணவ, மாணவியரும் ஆக மொத்தம் வருடம் தோறும் 9,89,702 லட்சம் மாணவ, மாணவியர்கள் CBSE மற்றும் state board 10 ஆம் வகுப்பு முடித்து வெளி வருகின்றார்கள் என்ற தமிழ்நாடு அரசு கணக்கின்படி 2000 - 2024 வரையிலான கடந்த 25 வருடங்களில் தோராயமாக 2,47,42,550 கோடி பேர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவந்திருக்கின்றார்கள் என்று கருத முடியும். இவர்கள் அனைவருமே மேலே குறிப்பிட்ட காரணிகளின் தாக்கங்களின் விளைவாக தமிழ் மொழியில் எழுதுவதிலும், படிப்பதிலும், வாசிப்பதிலும் மிகவும் திறன் குன்றியவர்களாக இருக்கிறார்கள் என்பதே கள நிலவரமாக உள்ளது. மேலும் 10 வகுப்பு வரையிலான பள்ளிக் கல்வியை முடிக்கும் 15 வயதில் உள்ளவர்களின் மக்கள் தொகை தமிழ்நாடு அரசு தரவுகளின் படி வயது அடிப்படையிலான சராசரி மக்கள் தொகை கணக்கின்படி 12 லட்சமாக உள்ளது. இதில் 9,89,702 லட்சம் மாணவ, மாணவிகள் மட்டுமே 10 ஆம் வகுப்பு படிப்பை முடிக்கிறார்கள் என்ற உண்மை நிலவரப்படி இந்த வயதினரில் 2,10,298 லட்சம் பேர் பள்ளிக் கல்வியை இடைநிலையில் விட்டவர்களாக உள்ளனர். ஆகவே 2000 வருடத்தில் இருந்து 2024 வரை கடந்த 25 வருடங்களில் அதாவது 15 வயதிலிருந்து 40 வயது வரையிலான பள்ளிக்கல்வியை கூட பெறாமல் வாழ்ந்து வரும் மக்களின் எண்ணிக்கை 52,57,450 இருக்க வாய்ப்புள்ளது.

மேலும் தற்கால நிலையை கணக்கில் எடுத்துக் கொண்டால் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எழுதுவது, படிப்பது என்பது இயலாத விசயம். ஒவ்வொரு வயதிற்கான சராசரி மக்கள் தொகை கணக்கு வழக்கின்படி ஒவ்வொரு வயதிற்கான மக்கள் தொகை 12 லட்சம் என்று எடுத்துக் கொண்டால் 1 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின்

மக்கள் தொகை 60 லட்சம் ஆக இருக்கக்கூடும். மேலும் 1 வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று வரும் இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் மக்கள் தொகை 1 கோடியே 20 லட்சமாக இருக்ககூடும். 2000 ஆண்டுகளில் ஆரம்பித்த மேற்கூறிய காரணிகளின் தாக்கங்கள் தற்கால சூழலில் பன்மடங்கு அதிகரித்து இந்த 1 கோடியே 20 லட்சம் மாணவ, மாணவிகளின் மனதை பெரிய அளவில் காலத்தை விரையம் செய்யும் வழியிலும், தாய்மொழி மீது ஈடுபாடு இல்லாத நிலையை உருவாக்கும் விதத்திலும் இவர்களை மடைமாற்றம் செய்துள்ளன என்பது பெரும் துயர நிகழ்வாக உருவாகியுள்ளது.

ஆக மேற்குறிப்பிட்ட படி தற்காலத்தை சேர்ந்த 1 வயது முதல் 15 வயதிற்குட்பட்ட இளைய தலைமுறையினர் மொத்தம் 1 கோடியே 80 லட்சம் பேர் தாய் மொழி தமிழில் எழுதும், படிக்கும், வாசிக்கும் திறன் பிறழ்ந்து உருவாகி வருகின்றார்கள் என்பதே உண்மை நிலவரம் ஆக இருக்கிறது. ஆகமொத்தம் 2000 - 2024 ஆண்டு வரை 10 வகுப்பு வரை பள்ளிக்கல்வி முடித்து வெளிவந்த 40 வயதுக்குட்பட்ட 2,47,42,550 மக்கள் தொகையினரும் 15 வயது முதல் 40 வயது வரையிலான பள்ளிக் கல்வியை பெறாத மக்கள் தொகையினரான 52,57,450 பேரும் தற்காலத்தில் வாழ்ந்து வரும் 1 வயது முதல் 15 வயதிற்கு உட்பட்டவர்கள் 1 கோடியே 80 லட்சம் பேரும் ஆக மொத்தம் 4 கோடியே 80 லட்சம் பேர் மேற்சொன்ன காரணிகளின் தாக்கங்களினால் தமிழில் எழுத, படிக்க, வாசிக்க பெருமளவு திறன் குறைந்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதே இன்றைய கள நிலவர தரவுகளின் வாயிலாக நமக்கு கிடைக்கும் கருத்தாக்கமாக உள்ளது.

இந்த விபரீத விளைவில் இருந்து நம் தமிழ் சமுதாயம் எப்படி தப்பி பிழைக்கப் போகிறது, நம் தாய்மொழி தமிழை எப்படி பேணிப் பாதுகாக்க போகிறோம், நம் தாய்மொழி தமிழையும், தமிழ் சமுதாயத்தையும் மீட்டெடுத்து புத்துயிர் கொடுத்து வாழ வைக்கும் முழு திறன் படைத்த நூலகங்களையும், நூலக கல்வியையும் நாம் எவ்வாறு வலிமைப்படுத்தப் போகிறோம் என்பதையெல்லாம் குறித்து பின்வரும் அத்தியாயங்களில் காணப்போகிறோம்.

## எச்சரிக்கை மணி ஓசை

பருவநிலை தீவிர மாற்றங்களால் திடீர், திடீர் என ஓரிரு நாட்களில் பெருமழை வெடிப்பு காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டு அழிவுகள் தாங்கொணா துயரங்கள் ஏற்படுவதே இன்றைய காலகட்டத்தில் காலத்தின் விபரீதம் மாற்றமாக உள்ளது.

இத்தகு அபாயகரமான சூழ்நிலையில் அறிவியலின் முன்னேற்றத்தால் வானிலை அறிக்கைகள் மூலமாக பெருமழை, வெள்ளம், சூறாவளி காற்று. போன்ற பெரும் அபாயங்கள் குறித்து முன்னெச்சரிக்கை பெறுவதால் அரசாங்கங்களின் மக்களை பேராபத்தில் இன்று காத்திட பேருதவியாக இருக்கிறது.

**அதுபோல் தான் எனது இந்த ஆய்வு பணி மூலம் நூலகங்களின் இன்றைய நடப்பு நிலை, தாய்மொழி தமிழுக்கு நேர்ந்திருக்கும் அவலம். இன்றைய இளந்தலைமுறையினரிடம் ஏற்பட்டிருக்கும் தாய்மொழி மீதான ஈடுபாடற்ற அக்கறையின்மையான விபரீதமான போக்கு ஆகியவற்றை ஆய்ந்துணர்ந்து அறிக்கை தயார் செய்துள்ளேன். மேலும் இந்த பின்னோக்கிய அழிவு பாதையின்று மீண்டும் புத்தாக்கம் பெற்றிட வழி வகைகள் எனது ஆய்வின் வழியாக கிடைக்கப்பெற்றுள்ளன.**

ஒரு நாட்டின் பொருளாதார வளம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியையும், தொழில்துறையில் அந்த நாட்டு மக்களாலும், தொழில்துறையிலும், சேவை துறையிலும், விவசாய துறையிலும் ஆகிய இந்த முக்கிய மூன்று துறைகளிலும் அந்நாட்டு மக்கள் முன்னெடுக்கும் புரட்சிகளையும், வளர்ச்சியையும் சார்ந்ததாகவே அமையும் இவ்வாறு அடிப்படையான மூன்று துறைகளில் பெரும் வளர்ச்சியையும், பெரும் வளங்களையும் உருவாக்க தகைமையுள்ள நாடுகள் மட்டுமே மருத்துவம், வான்வெளி, அணுசக்தி, ராணுவ பலம் ஆகியவற்றில் ஒரு நாட்டை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றி அமைத்திட முடியும். முக்கிய நான்கு துறைகளில் தடம் பதித்து தலைநிமிர்ந்து நின்றிட முடியும். ஏழை நாடாக இருந்து, வளரும் நாடாக உருமாறுவது மற்றும் வளரும் நாடாக இருந்து வளர்ச்சி அடைந்த நாடாக உருமாறுவது என்பதை எல்லாம் மேற் சொன்னவாறு பல்வேறு துறைகளில் அனைத்து துறைகளிலும் பெரும் வளர்ச்சி கண்டு உலகின் பெரும் வளர்ந்த நாடுகளோடு போட்டியிட்டு முன்னேற்ற நிலையை எட்டுவதாகும். ஆக ஒரு நாடு பொருளாதார பலம் நிறைந்த நாடு, ராணுவ பலம் நிறைந்த நாடு என்று உலக அரங்கில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள எண்ணற்ற பல்வேறு துறைகளில் அந்த நாட்டு மக்கள் அடையும் உன்னதமான முன்னேற்றங்கள் முக்கிய காரணிகளாக பங்குவகுக்கின்றன.

ஒரு நாட்டை அந்த நாட்டு மக்களை உயர்வாழ்வு வாழ செய்திட காரணமான எல்லா காரணிகளுக்கும் அடிப்படை மூல காரணியாக ஒன்றே ஒன்றுதான் காரணியாக உள்ளது. அது அந்த நாட்டு மக்களுடைய அறிவு வளம் என்பது உலக நாடுகளின் அறிஞர்களாலும், பொருளாதார மேதைகளாலும், அரசியல் வல்லுனர்களாலும், தலைசிறந்த அரசியல் தலைவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்ட அசைக்க முடியாத ஆணித்தரமான உண்மையாகும். அறிவு வளம் மிகுந்த மக்கள் சமுதாயம் தான் தங்களை நலப்படுத்தி, வளப்படுத்தி, தங்கள் நாட்டை நலப்படுத்தி, வளப்படுத்தி உயர்த்துவதற்கான பல்வேறு துறைகளில் அத்தனை துறைகளிலும் உச்சங்களை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள். இத்தகைய அறிவு பலம் அந்த நாட்டு மக்கள் பெரும் கல்வியின் தரத்தையும், வளத்தையும் பொறுத்ததே ஆகும்.

கல்வி என்பது பள்ளி கல்வி, பல்வேறு கலை, விஞ்ஞான தொழில்நுட்ப, பொறியியல் உயர்நிலைக் கல்விகளை உள்ளடக்கியது. இத்தகைய பள்ளிகளிலும் பல்வேறு உயர்நிலைக் கல்விகளிலும் மேம்பட்ட திறனை அடைய பெரு வழிகாட்டியாகவும், உற்ற துணையாகவும் விளங்குபவை நூலகங்களும், நூலக கல்வியும், தாய்மொழி ஆகிய மூன்றுமே என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட, மறுக்க முடியாத, இன்றியமையாத விசயமாகும். வளர்ச்சி அடைந்த நிலையை எட்டிவிட்ட உள்ள நாடுகள் அனைத்துமே தங்கள் நாட்டின் பள்ளிக்கல்வியையும், பள்ளி கல்விக்கு மேற்பட்ட கலை அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பம், பொறியியல் ஆகிய உயர்நிலை கல்வியையும் தங்களது நாட்டின் நூலக கல்வியும், தங்களது தாய் மொழியிலேயே கொண்டுள்ளன.

**தந்தை பெரியார் அவர்களும் தாய்மொழி வழியில் பல்வேறு கலைகளை கற்று உணர்வதில் மேன்மையை தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்திருக்கிறார். 1923 முதல் 1973 காலகட்டத்தில் தந்தை பெரியார் பேசிய பேச்சுக்கள், எழுதிய எழுத்துக்களின் காலத்தால் அழியாத தொகுப்புகளில் இருந்து நமக்கு இவை காணகிடைக்கின்றன**. இருப்பினும் சுதந்திரத்திற்கு முந்திய காலகட்டத்திலும், அதற்கு பிற்பட்ட காலங்களிலும் ஏற்பட்டுள்ள மருத்துவ, விஞ்ஞான, தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் வான்வெளி அணுசக்தி, ராணுவ ஆயுத உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளின் தரவுகள் அனைத்தும் ஆங்கில மொழியிலே உள்ளன.

இந்த தரவுகள் அனைத்தும் தமிழ் மொழியில் உருவாக்கப்படவும் இல்லை, தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு முழுமை பெறவும் இல்லை ஆக ஆங்கிலம் தமிழரின் வாழ்வின் அசைக்க முடியாத அங்கமாக இடம்பெற்று நிலை பெற்று விட்டது. இருப்பினும் வருங்காலங்களில் மேற் சொன்ன பல்வேறு சம்பந்தப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து தாய்மொழி தமிழிலே படித்து கல்வி வளம் பெறும் காலத்தை வெகு விரைவில் உருவாக்க வேண்டியதை நமது தலையாய கடமையாக உள்ளது.

அனைத்து துறைகளும் ஆங்கில மயமாகும் காரணத்தினாலும் மற்றும் இணையம், அலைபேசி, தொலைக்காட்சி பெட்டிகள், அசுர வளர்ச்சி கண்டு உள்ள திரையுலகம் மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள எண்ணில் அடங்காத பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவற்றின் காரணமாக தாய்மொழி தமிழின் இருப்பு கேள்விக்குறியாக்கப்படுவதை நாம் அனுமதிக்க இயலாது. ஆங்கில வழி கல்வி வாழ்வின் அத்தியாவசிய தேவை என்ற நிலையிலும் மற்றும் உள்ள அலைபேசி, இணைய சேவை இவை அனைத்துமே வாழ்வின் அத்தியாவசிய அடிப்படை தேவைகள் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுவிட்ட இன்றைய காலகட்டத்தில் **தாய் மொழி தமிழை வளங்குன்றாது பாதுகாத்திடவும், என்றென்றும் தாய்மொழி தமிழ் நிலைத்து நின்றிடவும் செய்திடும் பெரும் வல்லமை தமிழ் மொழி வழியில் நூலக கல்வி என்ற காரணிக்கு உள்ளது. எனவே இந்த ஆய்வறிக்கையின் தலையான அம்சமான தாய் மொழி தமிழில் நூலக கல்வி என்பதை என்ற திட்டத்தினை முன்னெடுப்பதே சாலச் சிறந்ததாகும்.**

மேலும் பள்ளி கல்வி பாடத்திட்டங்கள் அறிஞர் பெருமக்களாலும், கல்வி கல்வியாளர்களாலும், தமிழ்நாடு அரசின் கல்வித் துறையினாலும் உருவாக்கப்பட்டவை.

சமச்சீர் கல்வி முறை என்பது தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மிகச் சிறந்த கல்வி முறையாகும். ஒன்றிலிருந்து 12-ம் வகுப்புவரை செயல்படுத்தப் பட்டிருக்கும் இந்த சமச்சீர் கல்வி முறையானது, மாநில அளவில் இருந்து வந்த நான்கு தொடக்கக்கல்வி அமைப்புகள் ஒன்றாக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முறையாகும். மாநில அரசு கல்வி, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல் என்ற நான்கு அமைப்புகளின் கல்வி முறையை ஒன்றாக்கி மாநில அரசின் கீழ் செயல்படும் அமைப்பாக இந்த சமச்சீர் கல்வி திட்டம் தமிழ்நாடு அரசினால் நவம்பர் 30/2009 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாநில பள்ளி பாடத்திட்டம் என்பது குறிப்பிட்ட வரைமுறைக்கு உட்பட்டது. 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு மாணவர்களின் வயது பருவத்திற்கு ஏற்றவாறு பாடத்திட்டங்கள் கட்டமைக்கப்பட்டிருக்கும். இத்தகு பாடங்களின் கீழ் வரும் அத்துணை விஷயங்களும் மாணவ, மாணவிகளின் படித்து, அறிந்து, புரிந்து, உணர்ந்து தேர்வு எழுதும் வகையில் கல்வியாளர்கள் இந்த பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் பெரும்பாலான மாணவ, மாணவியர் இந்தப் பாடங்களை வாசித்து, மனனம் செய்து கொண்டு தேர்வு எழுதும் சூழல் உள்ளது. இந்த தவறான பழக்கத்தினால் பள்ளி பாடத்திட்டங்களில் கல்வியாளர்களும், அறிஞர்களாலும், தொகுக்கப்பட்டு, பகுக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான உயர் வழிகாட்டுதல்களும் ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம் சார்ந்த கருத்துகளும் பெரும்பாலான மாணவ, மாணவியர் மனதில் நிலைத்து நிற்க இயலாத போக்கு உள்ளது என்பது கண்கூடாக பார்க்க முடிகிறது.

நூலக கல்வி என்பது இளைய தலைமுறை மாணவ, மாணவியர் அறிவு, நல்லொழுக்கம் ஆகியவற்றுடன் கூடிய மன வளர்ச்சி பெற்று உயர்வடைய உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வியாளர்கள் கூற்றின்படி, இளைய தலைமுறை மாணவ, மாணவியர்களை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் நூலக கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. நூலக கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம். அறிவு,

திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை, போன்றவற்றையும் தந்து ஒவ்வொரு மனிதனையும் ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடைய செய்கிறது. இது சமுதாயத்தில் நுட்பத் தகைமை ஏற்படுத்துவதையும், திறன்கள்,தொழில்கள், உயர்தொழில்கள் என்பவற்றோடு, மனம், நெறிமுறை, அழகியல் என்பவை சார்ந்த வளர்ச்சியையும் சமுதாய வளர்ச்சியில் பங்கு பெறச்செய்யும் அமைப்பு ஆகும்.

நூலக கல்வி என்பது பள்ளி மாணவ, மாணவியர் நூலகம் சென்று அமர்ந்து அங்கு குவிந்திருக்கும் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தமிழ் நூல்களில் தங்களுக்கு பொருத்தமான, தங்கள் மனதிற்கு விருப்பமான, தங்கள் ஈடுபாடுடன் படிக்கும் வகையிலான தமிழ் நூல்களை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டு படித்து உணரும் இயல்பான நடைமுறைக்கு சாத்தியமான, சுதந்திரமான ஒரு கல்வி முறையை தமிழ் மொழியில் அடைவார்கள். இவ்வாறு சுதந்திரமான, தனித்துவமான, தற்சார்புள்ள பாடமாக நூலக கல்வியை மேற்கொள்ளும் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான 10 வயது முதல் 17 வயதுவரையிலுள்ள மாணவ, மாணவியர் அறிவில் மேலோங்கி திகழ்வார்கள். பள்ளி படிப்பினை முடித்து வெளிவரும் மாணவ, மாணவியர் கூட்டம் அறிவார்ந்த, ஒழுக்கம் நிறைந்த, சமுதாயமாக திகழ்வார்கள். பண்பட்ட, குற்றங்களற்ற தமிழ் மக்கள் சமுதாயத்தை கட்டமைப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவ்வாறு 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தாய்மொழி தமிழில் நூலக கல்வியையும், தங்களது கல்வி திட்டத்தில் ஒரு பாடமாகவும், தவிர்க்க முடியாத, இன்றியமையாத ஒரு பகுதியாகவும் மேற்கொண்டு பள்ளி, கல்வியை முடித்து வருடம் தோறும் வெளிவரும் 7.25 லட்சம் மாணவ, மாணவியர்கள் தாங்களை தாங்களே வழிநடத்திக் கொண்டு சமுதாயத்தையும், நாட்டையும் சிறப்பாக வழி நடத்துவார்கள். இவ்வாறு நடைமுறையில் உள்ள ஐந்து விதமான பள்ளி பாட திட்டங்களுடன் புதிய பாடத்திட்டமாக அறிமுகமாகும் தாய்மொழி தமிழில் நூலக கல்வி பாடத்திட்டத்தையும் சேர்த்து பள்ளி, படிப்பு முடித்து வெளிவரும் இந்த மாணவ மாணவியர் கூட்டத்திலிருந்து புதிய வடிவில் பெரியாரையும், அண்ணாவையும், கலைஞரையும், அப்துல்கலாமையும், எண்ணற்ற மேதைகளையும், அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும் தமிழ் சமுதாயம் பெற முடியும் என்பது உண்மையான நிகழ்வாக இருக்கும். நூல்களையும், நூலகங்களையும் தங்கள் இளம் வயதில் நேசித்தவர்கள் சமுதாயத்தை வழிநடத்தும் உயர்ந்த வழியில் சமைத்திடும், சமுதாயத்தை வழிநடத்தும் மக்கள் தலைவர்களாக உருவாகினர் என்பது சரித்திரம் நமக்கு காட்டும் பாடம்.

சென்னை அறிஞர் அண்ணா நூலகத்திலும், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திலும், அமெரிக்காவின் DEWAY DECIMAL CALASSIFICATION SYSTEM கீழ் நூலகத்தின் நூல்களும் அனைத்து அம்சங்களும் பகுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசின் மாநில மைய நூலகமான கன்னிமார நூலகத்திலும், மாவட்ட மைய நூலகங்களிலும், கிளை நூலகங்களிலும், கிராம நூலகங்களிலும், இந்தியாவின் நூலக தந்தையான தமிழ்நாட்டைச் சேர்ந்த ரங்கநாதன் ஐயாவின் கோலன் பகுப்பு முறை நடைமுறையில் உள்ளதாக எனது கள ஆய்வில் தரவுகள் கிடைத்துள்ளன.

**தமிழ்நாடு அரசு நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மொழி நூல்கள், ஆங்கில மொழி நூல்கள், பிறமொழி நூல்கள், இணைய வழி நூல்கள் மற்றும் பிற அம்சங்கள் ஆகியவற்றை நூலகங்கள் வகுத்து அளிக்கும் முறைமைகள் பற்றிய விவரங்கள்**

**Library Classification Schemes**

**Their Origin With Developers**

| Schemes | Devised by | Origin year |
|---|---|---|
| Dewey Decimal Classification | Melvil Dewey | 1876 |
| Expensive Classification | C.A. Cutter | 1891 |
| Library of Congress Classification | C. M. Hanson/Library of Congress | 1904 |
| Universal Decimal Classification | Paul Otiet/ H. D. Fontain | 1905 |
| Subject classification | J.D. Brown | 1906 |
| Colan Classification | S. R. Ranganathan | 1933 |
| Bibliographic Classification | Bliss | 1935 |
| Riders International Classification | F. M. Riders | 1961 |
| Broad System of Ordering | Broad | 1978 |

**கோலன் வகைப்படுத்துதல்**

நூலக துறையின் தந்தை சீர்காழி இராமாமிர்தம் ரங்கநாதன் அவர்கள் நூலக நூலகவியலுக்கு செய்த பங்களிப்புக்காக இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கியது. இவரது பிறந்த நாளான ஆகத்து 9 தேதி இந்தியாவில் தேசிய நூலக தினமாக கொண்டாடப்படுகிறது. இவர் இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நூலகராகவும், நூலகத்துறை பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். நூலகவியல் உயர் பட்டைங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இந்திய நூலகவியல் பள்ளிகளில் பணியாளராகவும் பணியாற்றினார் தவிர, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு நூலகவியல் சார்ந்த உயிர் துறை தொழிற் கழகங்களிலும் உறுப்பினராக இருந்து உயர் பதவிகளையும் வகித்துள்ளார்.

**நூலகவியலின் ஐந்து விதிகள் இந்திய நூலகவியலின் தந்தை எனக் கொல்லப்படும் எஸ்.ஆர். ரங்கநாதனால் 1931 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டவை. இவை, நூலக முறைமை ஒன்றை இயக்குவதற்கான கொள்கைகளை விளக்குகின்றன.**

**இந்த ஐந்து விதிகளும் பின்வருமாறு,**

**முதல் விதி : நூலகங்கள் பயன்பாட்டுக்கானவை.**

**இரண்டாம் விதி: ஒவ்வொரு வாசகருக்கும் அவரது நூல்**

**மூன்றாம் விதி:ஒவ்வொரு ஒவ்வொரு நூலுக்கும் அதன் வாசகர்.**

**நான்காம் விதி: வாசகருடைய நேரத்தை சேமிக்க வேண்டும்.**

**ஐந்தாம் விதி :நூலகம் ஒரு வளரும் உயிரினம்.**

**விளக்கம்:**

முதல்விதி: நூல்கள் பயன்பாட்டுக்கானவை

முதல் விதி நூலகச் சேவைக்கான அடிப்படையை உள்ளடக்குகிறது. நூல்களை வெளியே எடுக்காமலிருப்பதற்காக அவற்றைப் பூட்டி வைத்திருப்பதையும், பயன்படுத்துவதிலும் பார்க்கச் சேமிப்பதற்கும் பாதுகாப்பதற்குமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதையும் அரங்கநாதன் கவனித்தார். சேமிப்பதையும் பாதுகாப்பதையும் மறுக்காதபோதும் இந்த நடவடிக்கைகள் அவற்றைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காகவே இருக்கவேண்டும் என்றார் அவர். பயன்படுத்தாவிட்டால் நூலக உருப்படிகளுக்குப் பெறுமதி கிடையாது. பயன்படுத்துவது என்பதை வலியுறுத்தியதன் மூலம், நூலக அமைவிடம், இரவல் கொடுப்பது தொடர்பான கொள்கைகள், திறந்திருக்கும் நேரமும் நாட்களும், நூலகத் தளவாடங்கள், பணியாளர்களுடைய தரம் போன்ற, மக்களுக்கு நூல்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவது தொடர்பான விடயங்கள் குறித்துக் கவனத்தை ஈர்த்தார்.

இரண்டாவது விதி: ஒவ்வொரு வாசகருக்கும் அவரது நூல்

இந்த விதி, சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தமக்குத் தேவையான நூல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறது. எல்லாச் சமூகச் சூழல்களையும் சேர்ந்த தனிப்பட்டோர் எல்லோரும் நூலக சேவைகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்றும், கல்வியே நூலகப் பயன்பாட்டுக்கான அடிப்படை என்றும் அரங்கநாதன் கருதினார். இந்த உரிமைகள், நூலகங்கள்/ பணியாளர், நூலகப் பயனர்கள் என்னும் இரு தரப்பாருக்கும் உரிய கடமைகளையும் கொண்டுள்ளது. தாங்கள் சேவை வழங்கும் மக்கள் பற்றிய நேரடியான அறிவு நூலகர்களுக்கு அவசியம். நூலகச் சேமிப்புகள் சமூகத்தின் சிறப்பான தேவைகளை நிறைவேற்றக்கூடியனவாக இருக்கவேண்டும் என்பதுடன், நூலகங்கள், பலதரப்பட்ட வாசகர்களையும் கவரும் வகையில் ஊக்கமளித்து விளம்பரம் செய்யவும் வேண்டும்.[2]

மூன்றாவது விதி: ஒவ்வொரு நூலுக்கும் அதன் வாசகர்

இரண்டாவது விதியுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதாயினும் இந்தவிதி நூலக உருப்படியில் கவனத்தைச் செலுத்துகிறது. இது, நூலகம் ஒன்றில் உள்ள ஒவ்வொரு நூலுக்கும், அதனைப் பயன்படுத்தக்கூடிய ஒருவர் அல்லது பலர் இருக்கவேண்டும் என்பது இதன் பொருள். ஒவ்வொரு நூலக உருப்படியும், பொருத்தமான வாசகரைச் சென்றடைவதை உறுதி செய்துகொள்வதற்கு, ஒரு நூலகம் பல வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்பது அரங்கநாதனின் வாதம். ஒரு வழிமுறை, நூலக உருப்படிகளைப் பெறுக்கொள்வதற்கான அடிப்படை விதிகளோடு தொடர்புள்ளது. குறிப்பாக திறந்த தட்டுக்களில் நூலக உருப்படிகளை வைக்கவேண்டிய தேவை இவற்றுள் ஒன்று.

நான்காவது விதி: வாசகருடைய நேரத்தைச் சேமிக்கவேண்டும்

நூலகப் பயனர்களுடைய தேவைகளைச் செயற்றிறனுடன் நிறைவேற்றக் கூடிய வல்லமை நூலகச் சேவையின் உயர்தரத்தின் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொள்வது இவ்விதியின் சிறப்பு. இதற்காக, பொருத்தமான வணிக முறைகளைப் பயன்படுத்தி நூலக மேலாண்மையை மேம்படுத்தவேண்டும் என அரங்கநாதன் ஆலோசனை வழங்கினார்.

நூலகச் சேகரிப்புக்களை ஒரு இடத்தில் மையப்படுத்துவது சாதகமானது என அவர் கருதினார்.

ஐந்தாவது விதி: நூலகம் ஒரு வளரும் உயிரினம்

நூலகமொன்றின் சூழல் மாற்றங்களையன்றி உள்ளார்ந்த மாற்றங்களின் தேவையையே இவ்விதி முக்கியமாகக் கவனத்தில் கொள்கிறது. பணியாளர் எண்ணிக்கையின் வளர்ச்சி, நூலகச் சேகரிப்புக்களின் வளர்ச்சி, பயனர் எண்ணிக்கை வளர்ச்சி என்பவற்றுக்கு இடமளிக்கக்கூடிய விதத்தில் நூலகம் இருக்கவேண்டும் என்பதே அரங்கநாதனின் கருத்து. இது, கட்டடம், வாசிப்பதற்கான இடவசதி, நூல் அடுக்குகள், விபரப்பட்டியலுக்கான இடவசதி என்பவற்றின் வளர்ச்சிக்கு இடமளிக்கவேண்டும் என்பதையே குறிக்கிறது.

உலகம் முழுவதிலும் உள்ள பல நூலகங்கள் நூலக தந்தை ரங்கநாதன் ஐயாவின் அவர்களின் மேற்கூறிய ஐந்து விதிகளை தமது கொள்கைகளுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு பொது நூலகங்கள் இந்த ஐந்து விதிகளின் அடிப்படையிலேயே இயங்குவதற்கு நூலக துறையின் ஆரம்ப காலத்திலேயே இயக்க விதிகளாக வகுத்துக் கொண்டனர்.

கோலன் வகைப்படுத்தல்

கோலன் வகைப்படுத்தல் (Colon classification) என்பது நூலகத்தில் உள்ள தகவல் மூலங்களை வகைப்படுத்த சீர்காழி இரா. அரங்கநாதனால் அறிமுகப்படுத்த பட்ட ஒரு பகுப்பு முறையாகும். இதன் முதல் பதிப்பு 1933 ம் ஆண்டு வெளியானது.[1] இதுவரை 6 பதிப்புகள் வெளியாகியுள்ளன. இந்தியாவில் பெரும்பாலான பொது நூலகங்களில் இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

அமைப்பு

இந்த பகுப்பு முறை 42 வகையாக பிரிக்கப்பட்டு அதற்கென ஒரு எழுத்து அல்லது குறியீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நூலக காங்கிரஸ் வகைப்படுத்தலின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.

உட்கூறுகள்

இப்பகுப்பில் 5 முதன்மை பிரிவுகள் பயன்படுத்தப்பட்டு பகுப்பிற்கு உதவுகிறது அவை PMEST என்பதாகும்.[2]

P - ஆளுமை

M - கருப்பொருள்

E - ஆற்றல்

S - இடம்

T – நேரம்

பின்வருபவை கோலன் வகைப்படுத்துதலில் முக்கிய வகுப்புகள், சில துணைப்பிரிவுகளுடன், PMEST திட்டத்தைப் பயன்படுத்தி துணைப்பிரிவை வரிசைப்படுத்தப் பயன்படுத்தப்படும் முக்கிய முறை மற்றும் PMEST இன் பயன்பாட்டைக் காட்டும் எடுத்துக்காட்டுகள்.

z ஜெனரலியா

1 அறிவின் பிரபஞ்சம்

2 நூலக அறிவியல்

3 புத்தக அறிவியல்

4 பத்திரிகை

ஒரு இயற்கை அறிவியல்

பி கணிதம்

B2 இயற்கணிதம்

சி இயற்பியல்

டி பொறியியல்

இ வேதியியல்

எஃப் தொழில்நுட்பம்

ஜி உயிரியல்

எச் புவியியல்

எச்எக்ஸ் மைனிங்

நான் தாவரவியல்

ஜே விவசாயம்

ஜே1 தோட்டக்கலை

J2 ஊட்டம்

ஜே3 உணவு

J4 தூண்டுதல்

ஜே5 எண்ணெய்

ஜே6 மருந்து

ஜே7 துணி

ஜே8 சாயம்

கே விலங்கியல்

KZ கால்நடை பராமரிப்பு

எல் மருத்துவம்

LZ3 மருந்தியல்

LZ5 பார்மகோபோயா

எம் பயனுள்ள கலைகள்

M7 டெக்ஸ்டைல்ஸ் [பொருள்]:[வேலை]

Δ ஆன்மீக அனுபவம் மற்றும் மாயவாதம் [மதம்],[நிறுவனம்]:[சிக்கல்]

N நுண்கலை

ND சிற்பம்

என்என் வேலைப்பாடு

NQ ஓவியம்

என்ஆர் இசை

ஓ இலக்கியம்

பி மொழியியல்

கே மதம்

ஆர் தத்துவம்

எஸ் உளவியல்

டி கல்வி

U புவியியல்

வி வரலாறு

W அரசியல் அறிவியல்

X பொருளாதாரம்

ஒய் சமூகவியல்

YZ சமூக பணி

Z சட்டம்

உதாரணம்

கோலன் வகைப்பாட்டின் பொதுவான எடுத்துக்காட்டு:

"1950 களில் இந்தியாவில் எக்ஸ்ரே மூலம் நுரையீரலின் காசநோயைக் குணப்படுத்துவதற்கான ஆராய்ச்சி":

முக்கிய வகைப்பாடு மருத்துவம்;

(மருந்து)

மருத்துவத்தில், நுரையீரல் முக்கிய கவலையாக உள்ளது;

(மருந்து, நுரையீரல்)

நுரையீரலின் சொத்து அவர்கள் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்;

(மருந்து, நுரையீரல், காசநோய்)

காசநோய் (:) அன்று செய்யப்படுகிறது, அதாவது குணப்படுத்துவது (சிகிச்சை);

(மருந்து, நுரையீரல்; காசநோய்: சிகிச்சை)

காசநோய்க்கு நாம் சிகிச்சை அளிக்கும் விஷயம் எக்ஸ்-கதிர்கள்;

(மருந்து, நுரையீரல்; காசநோய்: சிகிச்சை; எக்ஸ்ரே)

மேலும் இந்த சிகிச்சையின் விவாதம் ஆராய்ச்சிக் கட்டத்தைப் பற்றியது;

(மருந்து, நுரையீரல்; காசநோய்: சிகிச்சை; எக்ஸ்ரே: ஆராய்ச்சி)

இந்த ஆராய்ச்சி ஒரு புவியியல் இடத்தில் (.), அதாவது இந்தியா;

(மருந்து, நுரையீரல்; காசநோய்: சிகிச்சை; எக்ஸ்ரே: ஆராய்ச்சி. இந்தியா)

1950 ஆம் ஆண்டின் (') காலத்தில்;

(மருந்து, நுரையீரல்; காசநோய்: சிகிச்சை; எக்ஸ்ரே: ஆராய்ச்சி. இந்தியா'1950)

இறுதியாக, ஒவ்வொரு பாடத்திற்கும் முகத்திற்கும் பட்டியலிடப்பட்டுள்ள குறியீடுகளில் மொழிபெயர்ப்பது வகைப்பாடு ஆகும்

L,45;421:6;253:f.44'N5

**The American Dewey Decimal Classification and Relative Index**

000 Computer science, information & general works

100 Philosophy & psychology

200 Religion

300 Social sciences

400 Language

500 Science

600 Technology

700 Arts & recreation

800 Literature

900 History & geography

**The Hundred Divisions Of Dewey Decimal Classification And Relative Index**

000 Computer science, knowledge & systems

010 Bibliographies

020 Library & information sciences

030 Encyclopedias & books of facts

040 [Unassigned]

050 Magazines, journals & serials

060 Associations, organizations & museums

070 News media, journalism & publishing

080 Quotations

090 Manuscripts & rare books

100 Philosophy

110 Metaphysics

120 Epistemology

130 Parapsychology & occultism

140 Philosophical schools of thought

150 Psychology

160 Logic

170 Ethics

180 Ancient, medieval & eastern philosophy

190 Modern western philosophy

200 Religion

210 Philosophy & theory of religion

220 The Bible

230 Christianity & Christian theology

240 Christian practice & observance

250 Christian pastoral practice & religious orders

260 Christian organization, social work & worship

270 History of Christianity

280 Christian denominations

290 Other religions

300 Social sciences, sociology anthropology

310 Statistics

320 Political science

330 Economics

340 Law

350 Public administration & military science

360 Social problems & social services

370 Education

380 Commerce, communications & transportation

390 Customs, etiquette & folklore

400 Language

410 Linguistics

420 English & Old English languages

430 German & related languages

440 French & related languages

450 Italian, Romanian & related languages

460 Spanish & Portuguese languages

470 Latin & Italic languages

480 Classical & modern Greek languages

490 Other languages

500 Science

510 Mathematics

520 Astronomy

530 Physics

540 Chemistry

550 Earth sciences & geology

560 Fossils & prehistoric life

570 Life sciences; biology

580 Plants (Botany)

590 Animals (Zoology)

600 Technology

610 Medicine & health

620 Engineering

630 Agriculture

640 Home & family management

650 Management & public relations

660 Chemical engineering

670 Manufacturing

680 Manufacture for specific uses

690 Building & construction

700 Arts

710 Landscaping & area planning

720 Architecture

730 Sculpture, ceramies & metalwork

740 Drawing & decorative arts

750 Painting

760 Graphic arts

770 Photography & computer art

780 Music

790 Sports, games & entertainment

800 Literature, rhetoric & criticism

810 American literature in English

820 English & Old English literatures

830 German & related literatures

840 French & related literatures

850 Italian, Romanian & related literatures

860 Spanish & Portuguese literatures

870 Latin & Italic literatures

880 Classical & modern Greek literatures

890 Other literatures

900 History

910 Geography & travel

920 Biography & genealogy

930 History of ancient world (to ca. 499)

940 History of Europe

950 History of Asia

960 History of Africa

970 History of North America

980 History of South America

990 History of other areas

**"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான **அடிப்படை திட்ட விதிகள் குறித்த விபரம்**

அலெக்சாண்டர் கிரகாம்பெல் தொலைபேசியை கண்டுபிடித்தது ஜனவரி 19 அந்த நாள் நல்ல நினைவுகளை கொண்டாடும் தினமாக கொண்டாடப்படுகிறது. அத்தகு ஜனவரி 19 2023 அன்று எனது ஆய்வு பணியை தகைசால் தமிழர் ஐயா நல்லக்கண்ணு அவர்களது வழிகாட்டுதலின்படி துவங்கினேன். தமிழ்நாட்டின் தென்கோடியான கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பித்தேன்.

இருபதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் அங்கு அமைந்துள்ள தமிழ்நாடு அரசின் மாவட்ட மைய நூலகங்கள் ஒரு சில கிளை நூலகங்கள், கிராம நூலகங்கள் ஆகியவற்றிற்கு நேரில் சென்று கள ஆய்வு பணியை மேற்கொண்டேன். மேலும் அந்த மாவட்டங்களின் சில அரசு உயர்நிலைப் பள்ளிகள், தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை சந்தித்து இன்றைய இளைய தலைமுறை மாணவர்களின் மனநிலை, தமிழ்மொழி நூல்களை படிப்பதில் அவர்களுக்கு இருக்கும் மனப்பாங்கு குறித்து கேட்டறிந்தேன். மேலும் அந்த மாவட்டத்தில் உள்ள சில மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வங்கி அதிகாரிகள் போன்ற அறிவுசால் பெருமக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினேன்.

நான் சந்தித்த அத்தனை பேரும் நூலகங்கள், நூலக கல்வியின் மேன்மை குறித்தும் இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவியர் இத்தகு உன்னதமான கல்வித்திறன் மேம்பாட்டுக்கும், நம் தாய்மொழி மேம்பாட்டுக்கும் மிகவும் அத்தியாவசியமான அடிப்படை தேவையான நூலகங்கள், நூலக கல்வியில் இருந்து முற்றிலும் வெளியேறி விட்டார்கள் என்பதை முழுமையாக அறிந்துணர்ந்தவர்களாக இருந்தார்கள். மேலும் இளைய தலைமுறை மாணவ, மாணவியர் பெரும் கூட்டத்தை எவ்வழிலேனும் இத்தகைய ஆய்வுப் பணியின் முன்னெடுப்புகளாலும், உரிய உடனடி திட்டங்களாலும் தமிழக அரசு நூலகங்களுக்கு கொண்டு சேர்த்திட வேண்டும். இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவியர்களுக்கு நூலகம் செல்வதே வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஆக்கி நூலக கல்வியையும், தமிழ் மொழி எழுச்சியையும் மேம்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதையும் மிகவும் அறிவுறுத்தி கூறினார்கள்.

எனது இந்த **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான ஆய்வுப் பணிக்கு பெரும் வரவேற்பும், உற்சாகமும் தந்து ஊக்கப்படுத்தினார்கள். நான் சந்தித்த இத்தகைய அறிவு சார்ந்த தமிழ் பெருமக்களிடமிருந்து பல்வேறு தரப்பட்ட தரவுகளும், கருத்தாக்கங்களும் கிடைக்கப்பெற்றேன். குறிப்பாக நான் சந்தித்த திருநெல்வேலி மாவட்ட மைய தலைமை நூலகர் அய்யா மீனாட்சி சுந்தரம் அவர்களும், கன்னியாகுமரி மாவட்ட மைய தலைமை நூலகர் ஐயா மந்திரம் அவர்களும், தூத்துக்குடி மாவட்ட மைய மேலதிகாரி வெங்கடாசலபதி அவர்களும், திருச்சி மாவட்ட மைய தலைமை நூலகர் ஐயா சிவக்குமார் அவர்களும், நாமக்கல் மாவட்டம் மைய நூலகர் அம்மா அவர்களும், தமிழ்நாடு மாநில மைய கன்னிமாரா நூலகத்தின் தலைமை துணை நூலகர் ஐயா கணேஷ் அவர்களும், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் தலைமை நூலகர் அம்மா காமாட்சி அவர்களும், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் தலைமை நூலகர் அவர்களும், சேலம் மாவட்ட மைய நூலகத்தின் தலைமை நூலகர் அவர்களும், செங்கல்பட்டு மாவட்ட மைய நூலகத்தில் சந்தித்த அம்மா பார்வதி அவர்களும், திருவள்ளுவர் மாவட்ட மைய நூலகர் அவர்களும், தென்காசி மாவட்ட மைய நூலகர் அவர்களும், சென்னை மாவட்ட மைய நூலகர் அவர்களும், மதுரை மாவட்ட மைய நூலகர் அம்மா பாலா சரஸ்வதி அவர்களும், விருதுநகர் மாவட்டம் மைய நூலகர் அய்யா செந்தில் அவர்களும், குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் கடந்த காலங்களில் தமிழ்நாடு அரசின்

நூலகத்துறை நூலகங்கள், நூலக கல்வியை வளர்த்தெடுப்பதில் மேற்கொண்ட பல்வேறு திட்டங்களையும், முன்னெடுப்புக்களையும் விரிவாக எடுத்துரைத்தார்கள். காலப்போக்கில் சமுதாயத்தில், பெற்றோர்கள், இடத்தில் பள்ளி மற்றும் மாணவ மாணவியர் மத்தியிலும், பெரும் மனம் மாற்றம் நிகழ்ந்துள்ளதால் நூலகங்களின் வாசகர் வட்டம் மிகவும் குறுகி அற்றுப்போய்விடும் நிலையில் இருப்பதை மிகவும் கவலையுடனும், வேதனையுடனும் எடுத்துரைத்தார்கள். அனைவருமே நூலகங்களுக்கு இன்றைய இளைய தலைமுறை பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளை அவர்களுடைய கல்விக் காலம் முழுவதும் தொடர்ந்து வருகை தருவதற்கு உரிய மாற்ற முடியாத விதிமுறைகளை வகுத்தெடுப்பது மிகவும் அத்தியாவசியமான தேவை என உறுதிப்பட கூறினார்கள். இதனை உயர் அதிகாரத்தில் உள்ள அமைச்சர் பெருமக்களாலேயே சாதிக்க முடியும் என்பது அவர்களது அனைவரின் கருத்தாக இருந்தது.

இவர்கள் அனைவரும் நூலக துறையில் அர்ப்பணிப்பு உணர்வோடும், விடாமுயற்சியுடன் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இன்றைய சூழலில் தமிழக நூலகங்களில் குவிந்துள்ள கையிருப்பில் உள்ள 6 கோடி நூல்களை படிப்பதற்கு வாசகர் வட்டம் மிகவும் குறுகி கிட்டதட்ட அற்று போய் விட்ட நிலை ஏற்பட்டு படிக்கும் திறன் உள்ள மக்கள் தொகையில் ஒரு சிறிய கூட்டமே இன்றும் வாசகர்களாக நூலகங்களுக்கு வருகை தருகிறார்கள் என்பது இன்றைய நிலைபாடாக உள்ளது என்ற புரிதல் மேற்கூறிய பெருமக்களிடமிருந்து பெற்ற தரவுகளின் வாயிலாக புரிகிறது.

ஆயினும் மாநில அரசு பணியிலும், மத்திய அரசு பணியிலும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தேர்வுகளிலும், IAS, IPS தேர்வுகளிலும், ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்பவர்கள் மற்றும் தங்களது கல்லூரி படிப்புகளில் குறிப்பு புத்தகங்களை தேடியும் வரும் இளைஞர் கூட்டத்திற்கு புகழிடமாகவும், அவர்களுக்கு அத்துணை வசதிகளையும் செய்து கொடுத்து தேவையான குறிப்பு நூல்கள் அனைத்தையும் வழங்கி மாவட்ட மைய நூலகங்கள் பெரும் பணியாற்றி வருகின்றன.

பெரும்பாலான அரசு பள்ளிகளில் சிறிய அளவில் நூல்களும், நூலகங்களும் இருந்த போதிலும் அந்த நூல்களை மாணவ மாணவியர் படிக்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளது. தனியார் பள்ளிகளிலும் ஒரு சில பள்ளிகளில் கட்டமைப்புடன் சிறிய அளவில் நூல்களும், நூலகங்களும் இருந்த போதிலும் அவற்றிற்கு போதிய முக்கியத்துவம் கொடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது. இன்றைய மாணவ மாணவிகளை தமிழ்நாடு அரசு மாநில பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் உள்ள ஐந்து பாடங்களை படிக்க வைத்து அவர்களை தேர்ச்சி பெற வைப்பது பெரும் விசயமாக உள்ளது. **மேலும் அரசாங்க பள்ளிகளும், தனியார் பள்ளிகளும் மாணவ மாணவியர் தேர்ச்சி சதவீதத்தை 100 சதவீதமாக காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில், நெருக்கடியான சூழ்நிலையில் பள்ளி ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களும் நிர்பந்திக்கப்படுவதால் அவர்களது முழுமையான கவனம் மாணவ மாணவியரை அந்த ஐந்து பள்ளி பாடத்திட்டங்களில் அந்த குறிப்பிட்ட ஆண்டு முழுவதும் பயிற்சி அளித்து அதிகபட்சமாக தேர்ச்சி பெற வைப்பதில் முழு கவனம் இருப்பதால் நூலகங்கள், நூலக கல்வி குறித்து சிறிதேனும் கவனம் செலுத்தும் நிலையில் அரசு பள்ளிகளும், தனியார் பள்ளிகளும் ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களும் இல்லை என்பதே உண்மையான கள நிலவரம் ஆக உள்ளது. பல்வேறு பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் வாங்கி வைக்கப்படும் தினசரி தமிழ், ஆங்கில பத்திரிகைகளை மாணவ மாணவியர் தொட்டுக் கூட பார்ப்பதில்லை என்பதையும், நூலகங்களிருந்து நூலகர்கள் வாரந்தோறும் பள்ளிக்கு எடுத்து வந்து தரும் தமிழ் நூல்களின் கட்டுக்களை பிரித்துக் கூட பார்ப்பதில்லை என்பதையும், மறுவாரம் நூலகங்களில் இருந்து நூலகர் வந்து வேறு கட்டுகளை எடுத்து வந்து கொடுத்துவிட்டு, சென்ற வாரம் வைத்துவிட்டு போன தமிழ் நூல்களை அப்படியே**

**திருப்பி எடுத்துச் சென்று போவதை வேதனையுடனும், வருத்தத்துடனும் தெரிவித்துள்ளார்கள்.**

இணைய தரவுகளின் படி தமிழ்நாட்டின் 2024 ல் தோராய மொத்த மக்கள் தொகையான 8.4 கோடி பேரில் ஒவ்வொரு வயதுக்கும் ஆன சதவீத தோராயக் கணக்கின்படி அதாவது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தோராயமாக 1 கோடி பேர் இருக்கிறார்கள் மீதமுள்ள 7.4 கோடி என்று எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு வயதிலும் வாழ்ந்து வரும் மக்கள் தொகை தோராயமாக 12 லட்சம் ஆகும். மேலும் 10 வயதுக்கு மேற்பட்ட சிறார்களே அதாவது 6 ம் வகுப்பில் இருந்து அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் தமிழ் மொழியில் ஓரளவு எழுத, படிக்கத் தெரிந்தவர்களாக இருப்பார்கள் என்று பெரும்பாலான ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் கருத்தாக உள்ளது. மேலும் 8 ம் வகுப்பு முதல் அதாவது 13 வயதிலிருந்து மாணவர்களின் மனப்போக்கில் பெரும் மாற்றம் ஏற்படுவதாகவும், அவர்களை வழிநடத்துவது மிகவும் கடினமாக உள்ளதாகவும் நான் சந்தித்த எண்ணற்ற பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் கூறினார்கள்.

**மேலும் 8 ம் வகுப்பு முதல் மாணவர்களுடைய ஒரு சிறு பகுதியினர் போதைப் பழக்கங்களில் ஈடுபட்டு வழிநடத்த, கட்டுப்படுத்த முடியாதவர்களாகவும் ஆகி விடுகிறார்கள் என்பதும் பள்ளி ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஆகியோரிடம் இருந்து பெற்ற வேதனைக்குரிய தகவலாகும்.** ஆகவே ஆறாம் வகுப்பு முதல் அவர்களது 11 வயது முதல் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நூலகங்கள் செல்லும் பழக்கத்தை உருவாக்கி விடுவதன் மூலமாக இவர்களிடம் ஒரு நல்லதொரு மடை மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று கணிக்க முடிகிறது.

இந்த வயதுகளில் சமுதாய ஒழுக்க நெறி சார்ந்த நூல்கள், பகுத்தறிவு நூல்கள், தலைசிறந்த தமிழ் தலைவர்கள், இந்திய தலைவர்கள், உலகத் தலைவர்கள், விஞ்ஞானிகள், அறிஞர்கள், மேதைகள் மற்றும் உலக நாடுகளின் வரலாறு, உலக நாடுகளில் நடந்துள்ள யுத்தங்களின் வரலாறு ஆகியன பற்றிய நூல்களை தமிழ்நாடு அரசு நூலகங்களுக்கு சென்று படிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலமாக இந்த மாணவ, மாணவிகள் சுய கட்டுப்பாடு உள்ளவர்களாக தங்கள் தாய், தந்தையர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் மீது மதிப்பு கொண்டவர்களாக உருவாகி வருவார்கள் என்பது திண்ணம். இத்தகைய மாணவ, மாணவிகளை 8 ம் வகுப்பிலும் அதற்கு மேற்பட்ட வகுப்பிலும், அவர்களது கல்வியிலும், அவர்களது மற்ற செயல்பாடுகளிலும் அவர்களை வழிநடத்துவது பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் சிரமம் இல்லாத எளிய செயலாக மாறும் என்பதை நிச்சயம். ஆகவே இதன்படி

1. 1 to 10 வயது வரை உள்ள சிறார்கள் மக்கள் தொகை ஒவ்வொரு வயதுக்குமான மக்கள் தொகை சதவீத கணக்குப்படி 1 கோடியே 20 லட்சம். இவர்கள் நூலகம் சென்று தமிழ் நூல்களை படிக்கும் திறன் அற்றவர்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

2. நூலகம் சென்று படிக்கும் திறன் உள்ள 11 வயது முதல் 17 வயது வரை ஆன அதாவது 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய இளைய தலைமுறை மாணவ மாணவியர் மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு வயதுக்குமான மக்கள் தொகை சதவீத கணக்குப்படி தோராயமாக 84 லட்சம் பேர் என்று எடுத்துக்கொள்ளலாம்.

3. 18 வயது முதல் 21 வயது வரை காண மாணவர்களின் மக்கள் தொகை அதாவது 12ஆம் பள்ளி தேர்வை முடித்து முடித்துவிட்டு அடுத்த நான்கு வருடங்கள் பல்வேறு உயர் படிப்புகளை மேற்கொள்ளும் மாணவ மாணவிகள் மற்றும் 12ஆம் வகுப்பு அளவிலேயே அல்லது அதற்கு முன்னதாகவே படிப்பினை நிறுத்திவிட்டு பல்வேறு வேலைகள், தொழில்கள் முனைவோர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு வயதுக்குமான

மக்கள்தொகை சதவீத கணக்குப்படி தோராயமாக 48 லட்சம் பேர் என்று எடுத்துக்கொள்ளலாம்.

4. 22 வயதில் இருந்து 30 வயது வரை அதாவது மேற்படிப்புக்கு செல்பவர்கள், அரசு மற்றும் தனியார் துறை வேலைகளுக்கு செல்பவர்கள், சுயமாக பல்வேறு தொழில்கள் செய்ய முற்படுபவர்கள், திருமண வாழ்க்கையை துவங்குதல், குழந்தைகளை பெற்றுக்கொள்ளுதல் ஆக இது போன்ற வாழ்க்கையில் தாங்களை நிரந்தரமாக நிறுத்திக் கொள்ள வேண்டிய அதிசிறப்பு மிக்க காலத்தில் பயணிக்கும் மக்களின் ஒட்டுமொத்த மக்கள் தொகை ஒவ்வொரு வயதுக்குமான சதவீத கணக்குப்படி தோராயமாக 1 கோடியே 20 லட்சம் பேர் என்று எடுத்துக்கொள்ளலாம்.

5. 30 வயதிலிருந்து 60 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகை ஒவ்வொரு வயதுக்குமான சதவீத கணக்குப்படி தோராயமாக 3 கோடியே 60 லட்சம் பேர் என்று எடுத்துக்கொள்ளலாம்.

6. இணைய தரவுகளின் படி 60 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகை தோராயமாக 1 கோடியாக இருக்க வாய்ப்புள்ளது.

1. மேற்கூறிய மக்கள் தொகை தோராயக் கணக்குகளின் படி 1 வயது முதல் 10 வயதுக் குட்பட்ட தமிழ் மொழியில் சரளமாக வாசிக்கும், எழுதும் மற்றும் புரிந்து கொள்ளும் திறனை முழுமையாக பெற்றிடாத, நூலகங்களில் அமர்ந்து படிக்கக்கூடிய பக்குவ நிலையை அடைந்திடாத தோராயமாக 1 கோடியே 20 லட்சம் சிறார்களை நூலகங்களுக்கு அழைத்துச் செல்வது, நூலக கல்வியை புகட்டுவது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத செயலாக இருக்கும்.

2. 10 வயதுக்கு மேற்பட்ட (6 வகுப்பு முதல்) 17 வயது வரையிலான (12 ஆம் வகுப்பு வரையில்) பள்ளிகளில் மாநில கல்வி திட்டத்தின் கீழ் தமிழ் மொழி வழியிலும், ஆங்கில மொழி வழியிலும் கல்வி பயின்று வரும் மாணவ மாணவியரின் ஒட்டுமொத்த எண்ணிக்கை தமிழ்நாடு பள்ளி கல்வித்துறையின் தரவுகளின் படி தோராயமாக 65 லட்சம் எண்ணிக்கையில் உள்ளனர். 12 ஆம் வகுப்பு பள்ளி கல்விக்கு மேல் பல்வேறு வகைப்பட்ட பல்தொழில் நுட்ப கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் இன்னும் எண்ணற்ற வகைபட்ட உயர்நிலைக் கல்விகளில் இளங்கலை பட்டம் பெறுவதற்காக அடுத்த நான்கு வருடங்கள் அதாவது 18 வயது முதல் 21 வயது வரையிலான இளைய தலைமுறை மாணவ மாணவியரின் எண்ணிக்கை தமிழ்நாடு அரசின் உயர்நிலைக் கல்வித் துறையில் தரவுகளின் படி தோராயமாக 24 லட்சம் பேர். ஆக மொத்தம் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் பள்ளி மற்றும் கல்லூரிகளில் இளங்கலை பயிலும் இளைய தலைமுறை மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாக 89 லட்சமாக உள்ளது. இந்த 89 லட்சம் எண்ணிக்கையில் உள்ள தமிழில் எழுதும், படிக்கும், வாசிக்கும் திறனுடைய இளைய தலைமுறை மாணவ மாணவிகள் அரசு பொது நூலகங்களுக்கு வருகை தந்து தமிழ் மொழியில் நூலக கல்வியை பெற்றுக் கொள்வதும், தமிழ் மக்களின் தமிழ்நாட்டின் நாகரீகம், வரலாறு, பண்பாடு, தமிழ் மொழியின் இலக்கியச் செழுமை, கலைகள், கவிதைகள், தமிழ்நாடு தலைவர்களின், அறிஞர்களின், விஞ்ஞானிகளின் வரலாறு ஆகியவற்றை அறிந்து தங்கள் மனங்களின் நிறைத்து கொள்ள வேண்டியது இன்றியமையாத மிகவும் அத்தியாவசியமான கட்டாய தேவையாகும். எனவே 10 வயது முதல் 17 வயது வரையிலான 6 ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவ மாணவியர், 12ஆம் வகுப்பு மேல் இளங்கலை பட்டய படிப்பு வரையிலான கல்வி நிலையில் பல்வேறு வகைப்பட்ட கல்விகளை பயிலும் கல்லூரி மாணவ மாணவிகள் ஆகியோர் **விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்கிளின் வாரம் 5 மணி நேரம் புத்தகம் வாசிப்பு என்ற விதியின் அடிப்படையில்** அதாவது மாதம் 20 மணி நேரம் புத்தகம் வாசிப்பது என்ற அளவிற்கு இந்த வயது மாணவ மாணவிகளுக்கு நூலக கல்வியை

பெறுவதற்கு அவர்கள் நூலகம் வருகை தருவது எல்லா வகையிலும் என்றும் மாறாத விதியாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாக்கப்பட வேண்டும்.

3. 22 வயது முதல் 30 வயது வரையிலான மக்கள் தொகையில் ஒவ்வொரு வயதுக்குமான சராசரி மக்கள் தொகை சதவீத கணக்கின்படி மொத்தம் தோராயமாக 1 கோடியே 8 லட்சமாக உள்ளது. இவர்களில் பள்ளி கல்வியை மேற்கொள்ளாதவர்கள் ஆரம்ப பள்ளி கல்வி நிலையிலேயே கல்வியை விட்டு வெளியேறியவர்கள், நடுநிலைப்பள்ளி கல்வி நிலையிலேயே கல்வியை விட்டு வெளியேறியவர்கள், உயர் பள்ளி கல்வி நிலையில் கல்வியை விட்டு வெளியேறியவர்கள், மேலும் 12 ஆம் வகுப்புக்கு மேல் உயர்கல்விக்காக கல்லூரிகளுக்கு செல்ல இயலாதவர்கள் என்ற குறிப்பிட்ட சதவீத மக்கள் தொகை இருப்பார்கள். இவர்கள் பல்வேறு வகையான தனியார் துறைகளில் வேலை செய்பவர்களாகவும், சுய தொழிலில் வியாபாரம் செய்பவர்களாகவும், வாழ்ந்து வருபவர்கள் இவர்கள் 22 வயது முதல் 30 வயது வரையிலான காலகட்டத்தில் தாங்கள் செய்து வரும் வேலைகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட வேலை வாய்ப்புகளிலோ தாங்கள் செய்து வரும் சுயதொழில்களிலோ, வியாபாரமோ அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களிலோ, வியாபாரங்களிலோ, தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்வதற்கு காலத்தை செலவிடும் போராட்ட காலமான வயதாகும். மேலும் இந்த வயதில்தான் சிலர் படிக்காத மேதைகளாக உருவாகும், சிலர் சமுதாயம் சேர்ந்த சிந்தனைகள், சித்தாந்தங்களை முன்னெடுத்து சமுதாயத்தை முன்னேற்ற முன்வருவதும் உண்டு. இந்த வயது ஆண், பெண்களுக்கு திருமண வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது அவர்கள் குழந்தைகளை பெற்று எடுத்து வளர்ப்பதும் இந்த வயதில்தான்.

இந்த வயது அதாவது 22 வயது முதல் 30 வயது வரையிலான மக்கள் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீத பேர் கலை மற்றும் அறிவியல் மற்றும் பொறியியல் மற்றும் எண்ணற்ற தொழில்நுட்ப கலைகளில் பட்டங்களை பெற்றவர்களாகவும், அதற்கும் மேலாக உயர்நிலை கல்விகளை கற்றவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் பல்வேறு வகையான மாநில ஒன்றிய அரசு பணிகளில் வேலை செய்பவர்களாகவும், சுய தொழிலில் வியாபாரம் செய்பவர்களாகவும், வாழ்ந்து வருபவர்கள் இவர்கள் 22 வயது முதல் 30 வயது வரையிலான காலகட்டத்தில் தாங்கள் செய்து வரும் வேலைகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட வேலை வாய்ப்புகளிலோ தாங்கள் செய்து வரும் சுயதொழில்களிலோ, வியாபாரமோ அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களிலோ, தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்வதற்கு காலத்தை செலவிடும் போராட்ட காலமான வயதாகும். மேலும் இந்த வயதில்தான் சிலர் சமுதாயம் சேர்ந்த சிந்தனைகள், சித்தாந்தங்களை முன்னெடுத்து சமுதாயத்தை முன்னேற்ற முன்வருவதும் உண்டு. இந்த வயது ஆண், பெண்களுக்கு திருமண வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது அவர்கள் குழந்தைகளை பெற்று எடுத்து வளர்ப்பதும் இந்த வயதில்தான். ஆகவே இந்த வயது அதாவது 22 வயது முதல் 30 வயது வரையான காலகட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தொகை கூட்டத்தினர் ஏதாவது ஒரு நிலையில் தங்களை குறிப்பிட்ட வேலையில் தொழிலில் அல்லது வியாபாரத்தில் நிறுத்திக் கொள்வதற்காகவும் மற்றும் திருமண வாழ்வில் நிலை நிறுத்திக் கொள்வதற்காகவும் பெரு முயற்சிகளை முன்னெடுக்கும் காலகட்டத்தில் வாழ்ந்து வருபவர்கள். மேலும் இந்த வாழ்க்கை பருவ காலகட்டம் பெரும்பாலானோருக்கு போராட்டக் காலமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. எனவே இந்த வயது காலகட்டத்தில் உள்ள அதாவது 22 வயது முதல் 30 வயது வரையிலுள்ள மக்களிடம் “நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி வளர்ச்சி” பற்றிய எடுத்துரைப்பதோ, நூலகங்களுக்கு வருகை தருமாறு அறிவுறுத்துவதோ இயலாத அறிவுக்கு ஒவ்வாத செயலாக அமையும். ஆகவே இந்த வயது பருவத்தினர் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய

எண்ணங்களை உள்வாங்கி கொள்ள முடியாத, செயல்படுத்த முடியாத கூட்டமாகவே இருப்பார்கள் என்பதை கருதுவதற்கு இடமுண்டு.

4. 30 வயதிலிருந்து 60 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகை ஒவ்வொரு வயதுக்குமான சதவீத கணக்குப்படி 3 கோடியே 60 லட்சம் பேர் என்ற எண்ணிக்கையில் உள்ளார்கள். இவர்கள் வெவ்வேறு தனியார் துறைகளில் வேலை செய்பவர்களாகவும், மாநில ஒன்றிய அரசு பணிகளில் உள்ளவர்களாகவும், பல்வேறு வகையான சுய தொழில் வியாபாரம் செய்பவர்களாகவும், பெரும் தொழில் நிறுவனங்கள் வியாபார நிறுவனங்கள் நடத்துபவர்களாகவும் இருப்பார்கள். இந்த வயதுக்குட்பட்ட பெண்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அதாவது 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இல்லத்தரசிகளாகவே இருப்பார்கள். இவர்களில் ஒரு சிலர் மாநில ஒன்றிய அரசாங்கங்களை வழிநடத்தும் மக்கள் பிரதிநிதிகளாகவும் இருப்பார்கள் நாட்டின் மொத்த பொருளாதாரமும் இவர்களுடைய கையில் தான் உள்ளது நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு இந்த வயது மக்களின் அதாவது 30 வயது முதல் 60 வயது வரையிலான மக்களின் அதாவது மூன்று கோடியே 6 லட்சம் மக்களின் செயல்பாடுகளே காரணமாக அமையும். நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதில் முக்கிய காரணியாக செயல்படும் மக்கள் கூட்டத்தினர் இவர்கள்தான். இத்தகு திறன் மிகுந்த சமுதாய மக்கள் கூட்டம் நூலகங்களுக்கு வருகை தந்து நூலக கல்வியை பெறுவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை. மேலும் நூலகங்களுக்கு வருகை தருவதால் தங்கள் தாய்மொழி தமிழின் தொன்மைகளை அறிந்துணர்ந்து ஒரு அறிவார்ந்த, பண்பட்ட சமுதாய உறுப்பினர்களாக திகழ்வார்கள் என்பது நிச்சயம். ஆகவே இவர்களுக்கு விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்கிளின் அவர்களின் வாரம் 5 மணி நேரம் அதாவது மாதம் 20 மணி நேரம் நூல்கள் வாசிப்பது என்ற விதியை திட்டவட்டமாக கட்டாயமாக்கப்பட வேண்டும்.

இந்த வயது மக்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் மாதம் இரண்டு முறை நூலகங்களுக்கு வருகை தந்து 5 மணி நேரமாவது தமிழ் நூல்களைப் படிப்பதிலும் தங்கள் படித்ததை சுருக்கமாக குறிப்பு எடுத்துக் கொள்வதிலும் செலவிட வேண்டும் என்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 30-60 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் அவர்களது நூலக வருகையை ஊக்குவிக்கும் விதமாக நூலக ஊக்கத்தொகையாக வருடம் 1,000 ரூபாய் வழங்கிட தமிழ்நாடு அரசு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும் இவர்கள் குறைந்தபட்சம் மாதம் இருமுறை நூலகம் செல்வதற்கு இலவச பேருந்து பயணம் அளித்திட தமிழ்நாடு அரசு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

6. 60 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகை தமிழ்நாடு அரசின் தரவுகளின் படி தோராயமாக 1 கோடி என்ற எண்ணிக்கையில் உள்ளது. இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அறிந்துணர்ந்த, பட்டறிந்த, கற்றறிந்த விடயங்களை இளைய தலைமுறை மக்களிடமும், நடுத்தர வயதினரிடமும், அனைத்து சமுதாய மக்களிடமும் பகிர்ந்து கொள்ளும் விசயங்களின் பெட்டகமாக, அனுபவங்களின் கலாசாலையாக விளங்குகிறார்கள். 60 வயதுக்குட்பட்ட மக்கள் சமுதாயம், 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை தங்களுக்கு வழிகாட்டிகளாகவும், முன்மாதிரிகளாகவும் அமைத்துக் கொள்வதே சமுதாயம் எல்லா துறைகளிலும் சிறந்தோங்கிட வழி செய்யும் என்பதில் ஐயமில்லை. இந்த 60 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் சமுதாயம் வாரம் ஒரு முறை நூலகங்களுக்கு வருகை தருவதன் மூலம் அவர்களது உடல் நலமும், மன நலமும் ஓங்கி வாழ்ந்திட ஏதுவாக அமையும். மேலும் புதிது புதிதாக நூல்களை கற்பதன் மூலம் மிகவும் மேன்மையான போக்குடன், மேன்மையான விஷயங்களை தன் குடும்பத்திற்கு, தமது நண்பர்களுக்கும், தன்னை சுற்றியுள்ள சமுதாயத்திற்கும் பகிர்ந்து நம் தமிழ் சமுதாயம் தகைசால் சமுதாயமாக வாழ்ந்திட இவர்கள் தங்கள் பங்கினை சிறப்பாக செய்திட முடியும்.

எனவே 60 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் சமுதாய சேர்ந்த தமிழ் பெருமக்கள், நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சி திட்டத்தில் பங்கு பெற்ற நூலகங்களுக்கு வருகை தருவது இன்றியமையாத ஒன்றாக ஆகிறது இதற்காக 60 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் அவர்களது நூலக வருகையை ஊக்குவிக்கும் விதமாக நூலக ஊக்கத் தொகையாக மாதம் 1,000 ரூபாய் வழங்கிட தமிழ்நாடு அரசு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும் இவர்கள் வாரம் ஒரு முறை நூலகம் செல்வதற்கு இலவச பேருந்து பயணம் அளித்திட தமிழ்நாடு அரசு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

**“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான **முதற்கட்டமாக முன்னெடுக்க வேண்டிய திட்டங்களின் விவரம்**

மேற்குறிய விபரங்களின்படி 6 ஆம் வகுப்பு முதல் (11 வயதுக்கு மேற்பட்ட) 12 ஆம் வகுப்பு வரை (17 வயதுக்குட்பட்ட) மாணவ மாணவிகளிடமும், பள்ளி படிப்பு முடித்துவிட்டு பல்வேறு இளங்கலை பட்டிய படிப்புகளுக்கும் பல் தொழில்நுட்ப கல்லூரிகளுக்கும் சென்று படிக்கும் மாணவ மாணவிகளிடமும் நூலக கல்வியை கொண்டு சேர்ப்பது நூலகங்கள், நூலகத்துறை, தமிழ் மொழி எழுச்சி எழுச்சி பெறுவதற்கு இன்றியமையாத அம்சமாகும். கடந்த 30 வருடங்களில் தமிழ்நாடு அரசு கல்வித்துறையும், நூலகத்துறையும், பள்ளி தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் பல்வேறு திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் தொடர்ந்து இடைவிடாது செய்து வந்த போதிலும் அலைபேசி, இணைய சேவை, சினிமா, வண்ணமயத் தொலைக்காட்சி பெட்டிகள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பங்களால் பெரும் வளர்ச்சி பெற்றுள்ள கேளிக்கை அம்சங்களாலும் மேலும் வாழ்க்கையின் அடிப்படை தேவை ஆங்கில வழி கல்வி முறை வளர்ச்சி போக்கினாலும் சமுதாயத்திலும் பெற்றோர்கள் மத்தியிலும், இளைய தலைமுறை மாணவ மாணவிகள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றத்தினால், செயல்பாடுகளினால் ஏற்பட்டுள்ள மாற்றங்களினாலும் நூலகங்களும், நூலக கல்வியும் தளர்ச்சியுற்று தமிழ் மொழி வளர்ச்சியில் மாறுபட்ட போக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றிட இன்றைய பள்ளி மாணவ மாணவியரையும், பல்வேறு தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் கலை அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் கல்வி பயிலும் இளங்கலை மாணவ மாணவிகளையும் அவர்களது பெற்றோர்களையும் தாங்களாக மனம் முன் வந்து நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சி அவர்களது வாழ்வின் ஒரு பகுதி பகுதியாக, அங்கமாக ஆக்கிவிடுவதற்கான மனமாற்றத்தை, நடை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு இத்தகைய நிரந்தர சட்டங்களால் மட்டுமே 21ம் நூற்றாண்டிலும் பின்வரும் நூற்றாண்டுகளிலும் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சி ஆகியவற்றின் தொடரி நிகழ்வாக நம் தமிழ் மக்கள் சமுதாயம் பெற்றிட முடியும் என்பதே கள நிலவரங்களின் மூலமாக கண்டறியப்பட்ட உண்மையாக உள்ளது. என்றும் மாற்ற முடியாத நியதிகளை, சட்டங்களை வடிவமைப்பது ஒன்றே சரியான தீர்வாக இருக்க முடியும்.

1. தமிழ்நாடு அரசின் கல்வி திட்டத்தில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சி பெறுவதற்கான சில அடிப்படை மாறுதல்களை ஏற்படுத்தி புதியதொரு கொள்கையை உருவாக்குவது.

2. மாநில கல்வி திட்டத்தின் கீழ் 5 வகையான பாடமாக உள்ளதுடன் மேற்கொண்டு தமிழ் மொழியில் நூலக கல்வியை ஒரு பாடமாக சேர்த்திடல் வேண்டும்.

3. 10 வகுப்பு, 12ஆம் வகுப்பு இறுதி தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு நூலக பாடத்திட்டத்தையும் ஆறாவது பாடத்திட்டமாக சேர்த்து 6 பாடத்திட்டத்திலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள குறைந்தபட்ச சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற வேண்டும் என்ற திட்டத்தினை உருவாக்கிட வேண்டும்.

4. தமிழ் மொழியில் நூலக கல்வி பாடத்திட்டமானது 100 மதிப்பெண்களுடன் கூடிய பாடத்திட்டமாக ஆக்கப்பட வேண்டும்.

5. இந்த கட்டாய தமிழ் வழி நூலக பாடம் என்பது மாநில பாடத்திட்டத்தின் கீழ் தமிழ்மொழி வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான கல்வி கற்கும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ஆங்கில மொழி வழி கல்வி முறையில் கல்வி கற்கும் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளி மாணவர், மாணவியர்களுக்கும் 6 வது பாடமாக சேர்க்கப்பட வேண்டும்.

6. ஆங்கில வழி கல்வி முறையில் பள்ளி மாணவர், மாணவியர்களுக்கு தமிழ் ஒரு பாடமாக இருப்பது தொடர்ந்து இருத்திடல் வேண்டும்.

7. பள்ளி படிப்பு முடிந்து பல் தொழில்நுட்ப கல்வியை இளங்கலை கலை மற்றும் அறிவியல் கல்வி மற்றும் இளங்கலை பொறியியல் கல்வி மேற்கொள்ளும் மாணவ மாணவிகளுக்கு அவர்களது அந்த கல்வி காலத்திலும் நூலக கல்விபாடம் என்பது இப்பொழுது நடைமுறையில் உள்ள பாடங்களோடு கூடுதலாக ஒரு பாடமாக சேர்க்கப்படுதல் வேண்டும். தேர்வு மற்றும் மதிப்பெண்களுடன் கூடிய பாடமாக திட்டத்தில் தமிழ்நாடு அரசு உயர் நிலை கல்வி திட்டத்தில் நூலக கல்வி பாடம் என்பது கூடுதலாக ஒரு பாடமாக சேர்க்கப்பட வேண்டும்.

ஆக இவ்வாறு தமிழ்நாடு அரசு பள்ளி கல்வி திட்டத்திலும், இளங்கலை பட்டய படிப்புகளான உயர்நிலை கல்வி திட்டத்திலும் நூலக கல்வியை தேர்வு மற்றும் 100 மதிப்பெண்கள் உடன் கூடிய கூடுதல் பாடமாக சேர்ப்பதன் மூலமாக மட்டுமே இன்றைய இளைய தலைமுறை மாணவ மாணவியர் மத்தியிலும், அவர்களது பெற்றோர் மத்தியிலும் நூலக கல்வியை ஒரு பாடமாக ஏற்றுக்கொண்டு நூலக கல்வியை கற்பதில் விழிப்புணர்வையும், ஆர்வத்தையும், அக்கறையும் ஏற்படுத்த முடியும் என்பது உறுதி. இவ்வாறு நூலக கல்வியானது தமிழ்நாடு அரசு கல்வி திட்டத்தில் ஒரு அங்கமாக என்றும் மாற்ற முடியாத விதியாக உருவாக்கப்பட்டால் மட்டுமே நூலகங்களும், நூலக கல்வியும் 11 வயதுக்கு மேற்பட்ட 20 வயதிற்கு உட்பட்ட இளைய தலைமுறை மாணவ மாணவியர் மனதிலும் அவர்களது பெற்றோரும் மனதிலும் வாழ்கை தலைமுறையிலும் ஒரு அங்கமாக உருபெறும் சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறு பாடத்திட்டத்தின் ஒரு அங்கமாக நூலக கல்வி ஏற்படுத்தும் போதுதான் இன்றைய சமுதாயத்தில் இளைய தலைமுறை மாணவ மாணவியரின் பெற்றோர்கள் நூலக கல்வி மீது அக்கறை கொள்வதற்கான முனைப்புகளை ஏற்படுத்த முடியும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முனைப்புடன் நூலக கல்வியில் ஈடுபடுத்துவார்கள். நூலக கல்வி என்று ஒரு பாடம் உள்ளது அதில் தேர்ச்சி பெற்றிட வேண்டும் என்ற அக்கறை உணர்வும், முயற்சியும் பெற்றோர்களிடமும், மாணவ மாணவியரிடம் ஏற்படும். நூலக கல்வி என்பது அனைவரது வாழ்க்கையில் முக்கிய அம்சமாக இடம் பெறும் போதுதான் **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான வழி பிறக்கும். இத்தகைய உயர்யுற்ற நிலையை வெற்றிகரமாக நம் தமிழ் சமுதாயம் பெற்று அகமகிழ்ந்து வாழ்ந்திட பல்துறைகளிலும் நம் தமிழ் மக்கள் விற்பனர்களாக பிரகாசித்திட ஒரே வழி தமிழ்நாடு அரசின் கல்வி திட்டத்தில் தமிழ் மொழி வழியில் நூலக கல்வியை ஒரு கூடுதல் பாடத்திட்டமாக சேர்த்து நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தை தமிழ்நாடு அரசு

வகுத்திட வேண்டும் என்பது இந்த ஆய்வறிக்கையின் மூலமாக தகைசால் தமிழர் ஐயா நல்லகண்ணு அவர்களிடமும், தமிழ்நாட்டின் முதல் தமிழ் மகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களிடமும், மாண்புமிகு தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சரிடமும், அறிவுசால் தமிழ்நாட்டு பெருமக்களிடமும் நான் சமர்ப்பிக்கும் ஆய்வறிக்கையின் முடிந்த முடிவாகவும் எல்லோரும் இணைந்து உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டிய தமிழ் மொழி வழி நூலக கல்வி திட்டத்தின் முதல் முக்கிய அம்சமாக உள்ளது.

தமிழ்நாடு அரசு மது கடைகளுக்கு மாதம் ஒருமுறை நூலக விடுமுறை அளிக்க வேண்டும். மது கடைகளில் வேலை செய்யும் ஊழியர்கள் சுமார் 30,000 பேர் கட்டாயம் அன்று நூலகங்களுக்கு சென்று குறைந்தது ஐந்து மணி நேரமாவது அங்குள்ள தினசரி பத்திரிகைகள், வார மாத பருவ இதழ்கள், தமிழ் நூல்கள் படிப்பதில் செலவிட வேண்டும் என்பதை கட்டாயமாக்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு துறையில் பணிபுரிபவர்கள் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறையேனும் தமிழ்நாடு அரசு நூலகங்களுக்கு சென்று தினசரி தமிழ் பத்திரிகைகள், வார மாத பருவ இதழ்கள், தமிழ் நூல்கள் ஆகியவற்றில் படிப்பதில் ஐந்து மணி நேரம் செலவிட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். இவர்கள் நூலகம் வருவதை ஊக்குவிக்கும் வகையில் வருடம் வருடம் ஒரு முறை அவர்கள் வங்கி கணக்கில் ரூபாய் 1,000 நூலக ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கும் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். மேலும் இவர்கள் மாதம் ஒரு முறை நூலகம் செல்வதற்கு இலவச பேருந்து பயணம் அளித்திட தமிழ்நாடு அரசு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

தனியார் துறையில் பணிபுரிபவர்கள் மற்றும் சுய தொழில் புரிபவர்கள் மற்றும் 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மாதம் ஒருமுறையேனும் தமிழ்நாடு அரசு நூலகங்களுக்கு சென்று தினசரி பத்திரிகைகள், வார மாத இதழ்கள், தமிழ் நூல்கள் ஆகியவற்றில் படிப்பதில் ஐந்து மணி நேரம் செலவிட வேண்டும் என்பதை கட்டாயமாக்கப்பட வேண்டும். மேற்கூறியவாறு நூலகங்களில் செலவிடும் ஐந்து மணி நேரத்தில் முதல் நான்கு மணி நேரம் வாசிப்பதற்காகவும், மீதமுள்ள ஒரு மணி நேரம் தாங்கள் வாசித்ததை சுருக்கமாக தமிழில் குறிப்பு எடுத்துக் கொள்வதற்கும் உபயோகித்துக் கொள்ள வேண்டும். என்றவாறு அரசு அறிவுறுத்த வேண்டும். இவ்வாறு மேற்கூறப்பட்டவர்கள் நூலகம் செல்வதற்கும் அவர்கள் தங்களது தமிழில் வாசிக்கும் திறனையும், தமிழில் எழுதும் திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்காக “தமிழ் எழுத்து, வாசிப்பு மற்றும் எழுத்துத் திறனை மேம்படுத்தும் திட்டத்தை” தமிழ்நாடு அரசு முன்னெடுக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படும் 30 வயதிற்கு மேற்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைவருக்கும் நூலக ஊக்கத்தொகையாக அவர்களது வங்கி கணக்கில் வருடம் இருமுறை ரூபாய் 1,000 செலுத்திட முன்வர வேண்டும். இந்த திட்டம் குறித்தும், நூலக ஊக்கத் தொகை குறித்தும் தகவல் தமிழக மக்களை சென்றடையும் வண்ணம் தமிழ்நாடு அரசாணைகள் மூலமாகவும், சுற்றறிக்கைகள் மூலமாகவும், விளம்பரம் மூலமாகவும் தமிழ்நாடு மக்களிடம் கொண்டு சேர்த்து நூலகங்கள் நூலக கல்வி ஆகியவற்றை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியது தமிழ்நாடு மக்களுடைய தலையாயக் கடமை. என்பதையும் இதன் வழியாக மட்டுமே நம் தாய்மொழி தமிழை என்றும் பேணி பாதுகாத்திட முடியும் என்கின்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் இவர்கள் நூலகம் செல்வதற்கு இலவச பேருந்து பயணம் அளித்திட தமிழ்நாடு அரசு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

இவர்கள் திட்டத்தில் பங்கு கொள்வதையும், இவர்கள் மாதம் ஒருமுறையேனும் நூலகங்களுக்கு வந்து ஐந்து மணி நேரம் காலம் தமிழ் மொழி வாசிப்பு மற்றும் எழுதும் திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக உபயோகிப்படுத்திக் கொள்வதை உறுதி செய்து கொள்ளும் வகையிலும், இவர்கள் நூலகங்களில் உள் செல்வதையும், வெளிவருவதையும், விரல் ரேகை பதிவு, இலக்க பதிவு முறைகள் மூலம் இந்த திட்டம் நிறைவேற்றப்பட

வேண்டும். இந்த தமிழ்நாடு அரசின் தமிழ் எழுத்து, வாசிப்பு மற்றும் எழுதும் திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் கிராம அளவிலும், தாலுகா அளவிலும், மாவட்ட அளவிலும் விழாக்களை நடத்திட வேண்டும். இவர்கள் மேலும் தமிழ்நாடு அரசு தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள்,

சொல்வேந்தர்கள் துணையுடன் பேச்சுப்போட்டி, கட்டுரை எழுதல் போட்டி, கவிதை போட்டி, தமிழ் இலக்கணப் போட்டி இன்னும் வகை வகையான அத்துணை போட்டிகளையும் நடத்தி, தமிழ் மக்களை உற்சாகம் கொள்ள செய்து 30 வயதிற்கு மேற்பட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இந்த திட்டத்தில் மகிழ்வுடன் பங்கு கொள்ள செய்திடல் வேண்டும்.

**எழுத படிக்க தெரியாத தமிழ் மக்களுக்கு**

தமிழ் மொழியில் எழுத, படிக்கத் தெரியாத 30 வயதிற்கு மேற்பட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு மாதம் ஒரு முறையேனும் நூலகங்களுக்கு வருவதை தமிழ் எழுத்து, வாசிப்பு மற்றும் எழுதும் திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் கட்டாயமாக்கப்பட வேண்டும். அவ்வாறு வருகை தரும் எழுத படிக்கத் தெரியாத மக்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு அரசு பள்ளிகள் சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் வாயிலாக முற்றிலும் தன்னார்வலர் வளர்ச்சி முறையில் கற்போம், எழுதுவோம் திட்டம் மற்றும் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் 2022-2027 என்ற ஐந்தாண்டுக்காண வயது வந்தோர் கல்வி திட்டங்களின் மூலமாக தமிழ்நாடு அரசு கல்வியறிவு பெறாத நபர்களைக் கண்டறிந்து அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு வழங்குதல், நிதிசார்ந்த கல்வியறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பம், உடல் நலம் மற்றும் விழிப்புணர்வுக் கல்வி, குழந்தை நலம் மற்றும் கல்வி, வணிக கல்வியறிவு மற்றும் குடும்பநலம், தொழில்சார்ந்து திறன் வளர்ச்சி, உள்ளூர் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் சார்ந்து அறிதல், அடிப்படை மற்றும் தொடர் கற்றல் போன்றவற்றில் தமிழ்நாடு அரசு தமிழ்மக்களை மேம்படுத்தி வருவது போற்றுலதற்குரய அருஞ்செயலாகும். தகுந்த தமிழ் ஆசிரியர்களை கொண்டு தமிழ் எழுத படிக்க கற்றுக் கொடுக்க வேண்டும். இத்தகு திட்டத்தினாலும், வருங்காலங்களில் இடைவிடாது இத்தகைய முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலமாக தாய்மொழி தமிழை எழுத படிக்கத் தெரியாதவர் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலை குறுகிய காலத்தில் எட்டிவிட முடியும். இந்த திட்டத்தின் மூலம் கல்வி அறிவு பெற்றுள்ள இல்லத்தரசிகள் மேலும் திறன் மேம்பாடு அடைய முடியும் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளும் ஆவல் அதிகரிக்கும் இந்த திட்டத்தின் கீழ் இருகாறும் கல்வி அறிவை பெற்றிடாத இல்லத்தரசிகள் தங்கள் தாய்மொழி தமிழில் எழுதுவதற்கும், படிப்பதற்கும் ஆன திறமையை நூலகங்களுக்கு வருகை தருவதன் மூலமாக தமிழ் மொழி பயிற்சிகளை பெற்று மேம்பாடு அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த திட்டத்தின் கீழ் 30 வயதிற்கு மேற்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த தாய்மொழித் தமிழை எழுத படிக்க தெரியாத ஆண், பெண்கள் மாதம் ஒருமுறை தமிழ்நாடு அரசு பொது நூலகங்களுக்கு சென்று அமர்ந்து ஐந்து மணி நேரம் நூலகங்களில் தமிழ் ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் தமிழில் எழுதுவது, படிப்பது பயிற்சி திட்டத்தில் சேர்வது தவிர்க்க முடியாத அம்சமாக ஆக்கப்பட வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் சேரும் 30 வயதிற்கு மேற்பட்ட தமிழ் எழுத படிக்க தெரியாத தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆண், பெண்களுக்கு தமிழை கற்றுக்கொண்டு தாய்மொழி தமிழில் எழுதும் படிக்கும் திறனை வளர்ப்பதற்காக அவர்கள் நூலகம் வருவதை ஊக்குவிப்பதற்காக ஒரு வருட காலம் மாதம் 1,000 ரூபாய் ஊக்கத்தொகை இவர்களுக்கு வழங்கிட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும். ஒரு வருட காலத்தில் தமிழ் மொழியில் எழுத படிக்க தேர்ச்சி பெற்ற பின்னர் இவர்கள் தொடர்ந்து தமிழ்நாடு அரசு பொது நூலகங்களுக்கு வருகை தருவதை உறுதி செய்யும் விதமாக, ஊக்கத்தொகையாக ஆண்டுக்கு இருமுறை 1,000 ரூபாய் மேற்கூறிய வண்ணம் வங்கி கணக்கில் வழங்கப்பட வேண்டும்.

இத்தகைய திட்டத்தை தமிழ்நாடு அரசு முன்னெடுப்பது மூலமாக 30 வயதிற்கு மேற்பட்ட தமிழ்நாட்டு ஒட்டுமொத்த மக்கள் சமுதாயம் நூலகங்களுக்கு வருகை தந்து தங்கள் தாய்மொழி தமிழின் பல்வேறு வகைப்பட்ட தமிழ் நூல்களை படித்து உணரும் பெரும் வாய்ப்பினை பெறுவார்கள். நூலகம் செல்வது என்பது தமிழ்நாட்டு மக்களின் நடைமுறை பழக்கமாக மாறிவிடும், தமிழ்நாடு அரசு நூலகங்கள் தமிழ்நாடு மக்களின் அங்கமாக ஆகிவிடும். பெரியார், அண்ணா, கலைஞர் காட்டிய அறிவு பாதையில் தமிழ் சமுதாயம் மேம்பட்டு பயணிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான **இந்த ஆய்வு அறிக்கையில் தொகுத்து கூறப்பட்டுள்ள திட்ட வடிவங்களை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை குறித்த மாதிரி விபரங்கள்**

என்றும் மாறாத விதிமுறைகளை சட்ட வடிவமாக்கி நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மட்டுமே அழிவின் விளிம்பில் நிலையிலிருந்து நூலகங்களையும், நூலக கல்வியையும் மீட்டெடுக்க முடியும் என்பது முன்னறிவிக்கப்பட்ட கருத்தாகங்களின் மூலமாக கண்கூடாக தெரிகிறது. நூலகங்களும், நூலக கல்வி பலவீனம் அடைந்து நூலகங்கள் அழிந்து பட்டு போனால் தமிழ் சமுதாய மக்களின் தாய்மொழி தமிழை சரளமாக வாசிக்கும் திறனும், எழுதும் திறனும் பெரிய அளவில் பாதிப்படைந்து குறைந்த கால அளவிலேயே அதாவது அடுத்த ஒரு தலைமுறைக்கு உள்ளாகவே அதாவது 30 ஆண்டுகளுக்குள்ளாகவே இந்த கீழ்நிலை ஏற்படும் அபாயம் நடைமுறையில் நிகழ்வது சத்தியமாகும் என்பது முன்னறிவிக்கப்பட்டுள்ள கருத்தாகங்களின் மூலமாக தெளிவாக நமக்கு தெரிய வருகிறது இத்தகைய கேடு விளைவிக்கும் அதிவிரைவான மாற்றங்கள், நிகழ்வுகள் தமிழ் மொழி இருப்பின் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் பெரும் அளவில் உருவாகும் சூழ்நிலை ஏற்படக்கூடும்.

இத்தகைய பேராபத்திலிருந்து தமிழ் சமுதாயத்தை தற்காத்து ஒரு குறுகிய காலகட்டத்திற்குள்ளாக விரைந்து **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான திட்ட வரைவுகள் முன்னர் கூறிய அத்தியாங்களில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன. இப்பொழுதே அந்த திட்டவரைவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பற்றிய விவரங்களை வடிவமைக்க வேண்டியது நமது கடமையாகும்.

## நூலகங்களின் தலையாய முதற் பணி மற்றும் இரண்டாம் நிலை மற்ற பணிகள் குறித்த விவரங்கள்

**இருகாறும் மேற் சொன்ன அத்தியாயங்களில் நான் இங்கு தமிழ் மொழியில் நூலக கல்வி என்று குறிப்பிட்டு வந்துள்ளது பள்ளி, கல்லூரி பாடத்திற்கு அப்பாற்பட்டு பூமி தோன்றிய காலம் முதல் இன்று வரைக்குமான புவி வாழ்வின் அனைத்து துறைகளும் சம்பந்தப்பட்ட கடல் அளவாக தமிழ்நாடு அரசு நூலகங்களில் குவிந்து கிடக்கும் கோடிக்கணக்கான தமிழ் நூல்களில் இருந்து தாய்மொழி தமிழில் படித்து உணர்ந்து, அறியும் கல்வியே ஆகும். இதையே நாம் நூலக கல்வி என்று வரைமுறை செய்து கொள்ள வேண்டும்** என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தாய் மொழியில் கற்பதே நூலகங்களின் தலையாய விதியாகவும், அடிப்படை முதல் சேவையாகவும், உலக நாடுகளின் நூலகங்களில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய வண்ணம் தமிழ் மொழி வழியில் தமிழ் மக்கள் நூலக கல்வி பெறுவது என்பது தமிழ்நாடு அரசு நூலகங்களின் முதல் நிலை பணியாக கருதப்பட வேண்டும் என்பதே அனைவரும் ஒத்துக்கொள்ள தக்க இன்றியமையாத அம்சமாக உள்ளது.

நூலகங்களின் பிற எண்ணற்ற சேவைகளான பிற மொழி நூல்களை கற்றுக்கொள்ள உதவி செய்வது, ஆங்கில மொழியிலும், பிற மொழியிலும் அனைத்து விதமான துறை சம்பந்தப்பட்ட நூல்களை கற்று அறிந்து உணர்ந்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அறிஞர்களுக்கு ஆராய்ச்சி களமாக விளங்குவது, கவிஞர், எழுத்தாளர்களின் கற்பனையில் பிறப்பிடமாக திகழ்வது கல்வி பயின்று வரும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில மொழியிலான அவர்களது பாடங்களில் அத்துணை விதமான, அவர்களுக்கு தேவைப்படும், விஞ்ஞான தொழில்நுட்ப விவரங்களை பெறுவதற்கான கணக்கில் அடங்காத நூல்களை இருப்பில் வைத்து உதவுவது, முதுகலை பட்டைய படிப்பு முடித்துவிட்டு ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்ளும் இளைய தலைமுறையினருக்கு அவர்களுக்கு தேவையான அத்துணை நூல்களையும் கொடுத்து இட வசதி அளித்து உதவுவது மற்றும் பள்ளிக்கல்வியையும், இளங்கலை முதுகலை பட்டய கல்வியையும் முடித்துவிட்டு மாநில மத்திய அரசு பணிகளுக்கான தேர்வுகளை எழுதும் ஆயத்தமாகும் இளைய தலைமுறையினருக்கு அவர்களுக்கு தேவையான எல்லாவித குறிப்பு நூல்களை அளித்து உதவி புரிவது எண்ணற்ற கருத்தாக்கங்கள், கவியரங்கள், இலக்கியம் எழுத்தாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவர்களுக்கான போட்டிகள் போன்ற நிகழ்வுகளை நடத்தி வருவது. என்ற தமிழ்நாடு அரசு நூலகங்களின் அனைத்து விதமான மேம்பட்ட சேவைகள்யாவையும் தமிழ்நாடு அரசு நூலகங்களில் இரண்டாம் நிலை சேவைகளாகவே கருதப்பட வேண்டும்.

ஆக மேற்கூறிய வண்ணம் தாய்மொழி தமிழில் பூமியின் தோற்றம் முதல் இன்று வரையிலான அனைத்து விவரங்கள் அடங்கிய தமிழ் நூல்களையும் அத்துனை பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட அத்தனை அறிவாக்கங்களையும், தாய் மொழி தமிழில் நூல்களாகவும் இருப்பில் வைத்து தமிழ்நாட்டின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும், மேற்கூறிய வண்ணம் 30 வயதிற்கு மேற்பட்ட அத்தனை தமிழ் பெருமக்களும் கற்றுணரும் வாய்ப்பினை இடையறாது தொடர்ந்து வழங்கி வருவது தான் தமிழக அரசு பொது நூலகங்களின் தலையாயக் கடமையாகவும், பணியாகவும், முதன்மை சேவையாகவும் அமைக்கப்படுவதன் மூலமாகவே தமிழ் மொழியின் வளமும், தமிழ் மக்களின் நாகரீகம், பண்பாடும், வீரமும், அறிவுச்செறிவுமும், ஒழுக்கமும், அரசியலும், சமூக கட்டமைப்பும் என்றென்றும் உயர்ந்து உயர்ந்து மேலோங்கி செழுமைப்பட்டு வாழ்வாங்கு வாழ்ந்திடும் நியதியாக அமைந்திடும்.

தமிழ்நாடு அரசு பொது நூலகங்களின் எண்ணில் அடங்கா பிற சேவைகள் யாவும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு உயர்வு தந்திடும் பிற துணைநிலை சேவைகளாகவும், அமைப்புகளாகவே அமைந்து நூலகங்களின் தோற்றம், வளர்ச்சி, இருப்பு, எதிர்கால முன்னேற்றம் ஆகிய அனைத்துமே உலகின் பல்துறை சார்ந்த அறிவை அந்த நாட்டு மக்கள் தன் தாய் மொழியில் பெற்றிடல் வேண்டும் என்ற அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யும் பிரதான நோக்கத்தை நிறைவு செய்வதற்காகவே அமைத்திடல் வேண்டும். நாட்டு மக்களின் வாழ்க்கை முறையையும், இருகாறும் அந்த நாட்டு மக்கள் தங்களுக்காக வடிவமைத்துக்கொண்ட சித்தாந்தங்களையும் காலத்திற்கு ஏற்ப அந்த நாட்டு மக்கள் தங்களை எவ்வாறு பண்பு நலன்களிலும், வாழ்க்கை முறைகளிலும், சமுதாய கட்டமைப்புகளிலும், அரசியல் சட்ட திட்டங்களிலும் தங்களை எப்படி மாற்றி அமைத்து கொண்டார்கள் என்பதை இன்றைய தலைமுறைக்கும், வருங்கால தலைமுறைக்கும், காலப்பதிவுகளை, நிகழ்வுகளை அவர்களுக்கு கண்ணாடி போல காண்பித்து அவர்களுக்கு தாங்கள் யார், தாங்கள் சார்ந்த சமுதாயம் எத்தகையது என்பது விளக்கும் காலப்பெட்டகமாக, வாழ்க்கை வழிகாட்டியாக நிலைத்து நின்று பணியாற்றும் மனிதனின் ஒரே முறைமை இந்த நூலகங்களும், நூலக கல்வியும் மட்டுமாகவே உலகளாவிய மனித உணர்வுகளின், வரலாற்றுகளின் அடிப்படையில் இருந்து வருகின்றது.

வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் அசுர வேக வளர்ச்சியில் நாட்டு மக்கள் தங்களை எதிர்கால நிகழ் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களை, தங்கள் சமுதாயத்தை காலம் காலமாக தாங்கள் வாழ்ந்து வந்திருக்கும் நாகரிக, வரலாற்று சூழலோடு பொருத்தி பார்த்து தங்களுக்கு ஏற்ற மேம்பட்ட புதிய வாழ்க்கை முறைகளை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு, வடிவமைத்து கொள்வதற்கு, கலங்கரை விளக்கமாகவும், உறுதுணையாகவும் விளங்கக்கூடியதாக இருப்பது மக்கள் தங்களுக்காக உருவாக்கி நடைமுறை செயல்பாட்டில் வைத்திருக்கும் நூலகங்கள், நூலக கல்வியாகவே இருக்க முடியும். இத்தகைய நம் சமுதாயத்தின் வாழ்வின் உயிர் மூச்சான **“நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சி”** ஆகியவை அறுந்துபடாத சங்கிலிகளாக, சமுதாயத்தின் தொடர் உயிர் ஓட்டமாக நின்று நிலைத்திருப்பதற்கான திட்ட முன்மாதிரி வடிவங்களை மேற்கண்ட அத்தியாயங்களில் பார்த்தோம். இப்பொழுது நாம் **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான பல்வேறு சாத்தியக்கூறுகள், நிலைப்பாடுகள் நாம் தேர்ந்தெடுத்து முனைப்பு காண்பித்து உயிரூட்ட வேண்டிய சமுதாய அடுக்கில் வெவ்வேறு நிலைகளில் உள்ள மக்கள் குறித்த விவரங்களை பார்த்தோம் அவற்றை இவ்வாறு சுருக்கமாக பிரிக்கலாம்.

1. வாசிப்பு மற்றும் எழுதும் திறன் கொண்ட 11 வயதிற்கு மேற்பட்ட 17 வயதிற்கு உட்பட்ட அதாவது 6 ஆம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தின் கீழ் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியர் கூட்டத்தின் மொத்த எண்ணிக்கை தோராயமாக 65 லட்சம் ஆக உள்ளது. இவர்களுக்கு நூலக கல்வி என்பது மாநில கல்வி திட்டத்தின் கீழ் ஒரு கட்டாய பாடமாக்கப்பட்ட வேண்டும் என்பதும் 100 மதிப்பெண்கள் கூடிய தேர்வுகள் இந்த நூலக கல்வியை பாடத்திற்கு ஒவ்வொரு நிலையிலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஐந்து பாடத்திட்டங்களுகான தேர்வுகளை சேர்த்து நடத்தப்படுதல் வேண்டும் என்பதையும், என்றும் மாறாத கல்வி திட்ட விதியாக, தமிழ்நாடு அரசின் சட்ட விதியாக உருவாக்கப்பட வேண்டும் என்பதை காரண காரணிகளோடு மேற்கண்ட அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. “21ம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி எழுச்சிக்கான” முதற்படி பணி செயல்திட்டமாக இந்த பள்ளி மாணவ, மாணவியர் கூட்டம் தமிழ்நாடு அரசு பொது நூலகங்களுக்கு வருகை தந்து நூலக கல்வியை பெற்று மேற்கூறிய கட்டாய நூலக பாட திட்டத்தின் தேர்வுகளில் இவர்கள் முழுமையாக தேர்ச்சி பெற வைப்பதற்கான நடைமுறைகளை உருவாக்கிட வேண்டும்.

**நடைமுறை விதி 1:**

திங்கள் முதல் ஞாயிறு வரை உள்ள வாரத்தின் ஏழு நாட்களை 6 ஆம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவியர்களுக்கு மாநில முழுவதிலும் உள்ள தமிழ்நாடு அரசு பள்ளிகள், தமிழ்நாடு அரசு உதவி பெறும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள், சுயநிதி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் என ஒட்டுமொத்தமாக எல்லா பள்ளிகளையும் சேர்த்து ஒவ்வொரு வகுப்பு மாணவ மாணவிகளும் நூலகம் செல்வதற்காக வாரத்தின் ஏழு நாட்களில் ஒரு நாளை விடுமுறை நாளாக ஒதுக்கீடு செய்து அந்த குறிப்பிட்ட நாளில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாநில கல்வி திட்டத்தின் கீழ் பயிலும் அந்த குறிப்பிட்ட வகுப்பு மாணவ, மாணவியர்கள் நூலகம் சென்று நூலக கல்வியை மேற்கொள்வது என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். அதாவது

| வரிசை எண் | வகுப்பு | வார நாள் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் 6 ஆம் வகுப்பு பள்ளி மாணவ மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாதத்தின் முதல் திங்கள் கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை 50 சதவீதம் மாணவ, மாணவியர் |
| 2 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் வரும் 7 ஆம் வகுப்பு பள்ளி மாணவ, மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் |
| 3 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் வரும் 8-ம் வகுப்பு மாணவ மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாதத்தின் முதல் புதன்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் |
| 4 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் 9-ம் வகுப்பு மாணவ மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாதத்தின் முதல் வியாழக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் |
| 5 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் வரும் 10-ம் வகுப்பு மாணவ மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் |
| 6 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் வரும் 11ஆம் வகுப்பு மாணவ மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாதத்தின் முதல் சனிக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் |
| 7 | தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்நாடு மாநில அரசு பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் வரும் 12-ம் வகுப்பு | மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை 50 சதவீத மாணவ, |

| | | |
|---|---|---|
| | மாணவ மாணவியர் தோராயமாக 10 லட்சம் பேர் | மாணவியர் மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை 50 சதவீத மாணவ, மாணவியர் |

இந்த 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான தோராயமாக 65 லட்சம் எண்ணிக்கையிலான மாணவ மாணவியர் கூட்டம் பள்ளி சூழலுக்கு அப்பாற்பட்டு மாதம் இருமுறை தமிழ்நாடு அரசு பொதுநூலகங்களுக்கு வருகை தந்து புதிய சூழலில் புதிய பாடத்திட்டமான நூலக கல்வியை பெற்றிடுவதற்கு இவ்வாறு நாள்பகுப்பு செய்து அளிக்க வேண்டியதை அடிப்படை நடைமுறை விதி எண் 1 என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

**நடைமுறை விதி 2:**

1.ஆறாம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் தமிழ்நாடு அரசு மாநில கல்வி திட்டத்தின் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு வகைப்பட்ட கீழ் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாதத்தின் முதல் வாரத்தில் திங்கள் முதல் சனி வரையிலான வார நாட்களை நடைமுறை விதி ஒன்றில் விவரிக்கப்பட்ட அட்டவணையின் படி நூலக கல்விக்காக அந்த குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களுக்கு பள்ளியின் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட வேண்டும்.

அதாவது தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாநில கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளிலும் பயிலும் 6ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு மாதத்தில் இரண்டு நாள் நூலக கல்வி மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் முதல் நாளாக மாதத்தின் 15 நாட்களில் முதல் 6ஆம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு முதல் திங்கள்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு இரண்டாவது திங்கட்கிழமையும், 7ம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு முதல் செவ்வாய்க்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு இரண்டாவது செவ்வாய்க்கிழமையும், 8ம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு முதல் புதன்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு இரண்டாவது புதன்கிழமை, 9ம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு முதல் வியாழக்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு இரண்டாவது வியாழக்கிழமையும், 10ம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு முதல் வெள்ளிக்கிழமை மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு இரண்டாவது வெள்ளிக்கிழமையும், 11 ஆம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு முதல் சனிக்கிழமை மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு இரண்டாவது சனிக்கிழமை மாணவ மாணவியர் நூலக கல்வியை மேற்கொள்வதற்கான நூலக கல்விக்கான பள்ளி விடுமுறை நாளாக அளிக்கபட வேண்டும். தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாநில கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளிலும் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு மாதத்தின் இரண்டு நாள் நூலக கல்வி மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இரண்டாவது நாளாக மாதத்தில் இரண்டாவது நாள் நூலக கல்விக்காக 15 நாட்களில் 6 ஆம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு மூன்றாவது திங்கட்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு நான்காவது திங்கட்கிழமையும், 7ம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு மூன்றாவது செவ்வாய்க்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியருக்கு நான்காவது செவ்வாய்க்கிழமையும், 8ம் வகுப்பு மாணவ மாணவியருக்கு 50 சதவீதம் மூன்றாவது புதன்கிழமையும், மீதமுள்ள 50 சதவீதம் பேருக்கு நான்காவது புதன்கிழமையும், 9 ம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு மூன்றாவது வியாழக்கிழமை, மீதமுள்ள 50 சதவீதம் பேருக்கு நான்காவது வியாழக்கிழமையும், 10 ம் வகுப்பு மாணவ மாணவியர் 50

சதவீதம் பேருக்கு மூன்றாவது வெள்ளிக்கிழமை, மீதமுள்ள 50 சதவீத பேருக்கு நான்காவது வெள்ளிக்கிழமையும், 11ஆம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு மூன்றாவது சனிக்கிழமையும், மீதமுள்ள 50 சதவீத பேருக்கு நான்காவது சனிக்கிழமை மாணவ மாணவியர் நூலக கல்வியை மேற்கொள்வதற்கான நூலக கல்விக்கான பள்ளி விடுமுறை நாளாக அளிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாநில கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளிலும் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு மாதத்தின் இரண்டு நாள் நூலக கல்வி மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் முதல் நாள் நூலக கல்விக்காக மாதத்தின் முதல் 15 நாட்களில் 12-ம் வகுப்பு மாணவ மாணவியர் முதல் ஞாயிற்றுக்கிழமை 50 சதவீதம் மாணவ மாணவியர் மீதமுள்ள 50 சதவீதம் மாணவ மாணவியர் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையும் மாதத்தின் இரண்டாவது நாள் நூலக கல்விக்காக மாதத்தின் இரண்டாவது 15 நாட்களில் பன்னிரண்டாம் வகுப்பு மாணவ மாணவியர் 50 சதவீதம் பேருக்கு மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையும், மீதமுள்ள 50 சதவீத பேருக்கு நான்காவது ஞாயிற்றுக்கிழமையும் நூலக கல்விக்காக அரசு பொது நூலகங்களுக்கு வருகை தருவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

2. தமிழ்நாடு முழுவதிலும் மாநில பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை அடிப்படையிலும், அந்த அந்த பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் அட்டவணை தயார் செய்யப்பட்டு நூலக கல்விக்கான விடுமுறை நாட்கள் அளிக்கப்பட வேண்டும்.

3. இவ்வாறு அறிவித்து ஒதுக்கீடு செய்யப்படும் இந்த நூலக விடுமுறை நாளில் அந்த வகுப்பு மாணவ மாணவியர்கள் பள்ளிகளுக்கு செல்வதற்கு பதிலாக அவர்களின் பெற்றோர்கள் இவர்களை தங்கள் பகுதியில் உள்ள அரசு பொது நூலகத்திற்கு அழைத்து செல்லுதல் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

4. நூலகத்தில் இந்த மாணவர்கள் வருகை தரும் நேரம் காலை 9 மணி ஆகவும், அன்றைய தினம் நூலக கல்வியை முடித்துக்கொண்டு நூலகத்தில் இருந்து வெளியேறும் நேரம் மாலை 3 மணி ஆகும் நிர்ணயம் செய்திடல் வேண்டும். காலை 9 மணி முதல் 12 மணி வரை நூல்களை தேர்ந்தெடுத்து படித்துக் கொள்வதற்கான நேரமாக ஒதுக்கப்பட வேண்டும். மதியம் 12 மணி முதல் 1 மணி வரையிலான 1 மணி நேரம் மதிய உணவிற்காக ஒதுக்கிட வேண்டும். மதியம் 1 மணி முதல் 3 மணி வரை 2 மணி நேரம் அவர்கள் தாங்கள் காலையில் தேர்ந்தெடுத்து படித்த புத்தகங்களை மீண்டும் ஒருமுறை வாசித்து தாங்கள் கையேடுகளில் குறிப்பு எடுத்துக் கொள்வதற்காக ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

5. மாலை 3 மணிக்கு மேல் இந்த மாணவ மாணவிரை பெற்றோர்கள் நூலகத்திலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்வது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் 4,640 அரசு பொது நூலகங்கள் உள்ளன. தமிழ்நாடு அரசு பள்ளிகள், அரசு நிதி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என அனைத்து பள்ளிகளும் சேர்த்து 6 ஆம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை தோராயமாக 65 லட்சம் மாணவ மாணவியர் கல்வி பயில்கிறார்கள். தோராயமாக ஒரு வகுப்பிற்கு 10 லட்சம் பேர் என்று வைத்துக் கொள்ளலாம் ஆக வாரத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு வகுப்பைச் சார்ந்த 50% மாணவர்கள் நூலகத்திற்கு வருகை தருவார்கள் என்ற அடிப்படையில் ஒரு நாளில் தோராயமாக அரசு நூலகங்களுக்கு வருகை தரும் இந்த 10 லட்சம் மாணவர்களை மொத்த நிலுவையில் இயங்கிக் கொண்டிருக்கும் 4,640 அரசு பொது நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்தால் ஒரு நூலகத்திற்கு ஒரு நாளில் 215 மாணவர்கள் வருகை தருவார்கள் கிராம நூலகங்களில் தோராயமாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களும், கிளை நூலகங்களில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களும், மாவட்ட மைய நூலகங்களில் லட்சத்திற்கும்

அதிகமான நூல்கள் கையிருப்பில் உள்ளன. இவற்றில் 80 சதவீத மேற்பட்டவை தமிழ் நூல்கள், இந்நிலையில் தாய்மொழி தமிழில் நூலக கல்வி பெறுவதற்காக தினமும் ஒரு நூலகத்திற்கு வருகை தரக்கூடிய 215 மாணவர்களுக்கு நூல்களை வழங்குவது என்பது மிகவும் எளிதான செயலாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள மொத்த பள்ளிகளில் 6 ஆம் வகுப்பிற்கு மேல் மாணவ மாணவியர்கள் கல்வி பயிலும் அரசு பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் பள்ளிகளை அந்த அந்த பள்ளிகளின் அருகாமையில் இருக்கும் அரசு பொது நூலகம் ஒன்றிற்கு பங்கீடு செய்து தந்து அனைத்து பள்ளிகளையும் நிலுவையில் இயங்கிக் கொண்டிருக்கும் 4,640 அரசு பொதுநூலங்களுக்கு பங்கீடு செய்து அட்டவணை தயார் செய்திடல் வேண்டும்.

7. 6 ஆம் வகுப்பில் இருந்து 12 ஆம் வகுப்பு வரை மாணவ மாணவிகள் கல்வி பயிலும் அரசு பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் தனியார்
   பள்ளிகள் மற்றும் சுயநிதி தனியார் பள்ளிகளில் ஆகியவற்றில் ஒவ்வொரு பள்ளியிலும் நூலக விஞ்ஞானம் பட்டய படிப்பு முடித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கும் தகுதி வாய்ந்த நூலகர்
   ஒருவரை ஒருநாளுக்கு 30 மாணவர்களுக்கு ஒரு நூலகர் என்ற முறையில் நியமனம் செய்திடல் வேண்டும். இவ்வாறு நியமனம் செய்யப்படும் நூலகர் அந்த பள்ளியின் சார்பில் அந்த பள்ளிக்கு என ஒதுக்கப்படும் அரசு பொதுநூலகத்திற்கு தினமும் சென்று அந்தப் பள்ளியில் இருந்து அந்த நூலகத்திற்கு வருகை தரும் அந்த பள்ளி மாணவ மாணவியர்களை வழிநடத்துவதில் பொறுப்பேற்றுக்கொண்டு, அந்த மாணவ மாணவியர் நூலக கல்வியில் திறன் அடைந்திட பணியாற்றுதல் வேண்டும். ஞாயிற்றுக்கிழமை வருகை தரும் 12ஆம் வகுப்பு மாணவர்களை வழிநடத்துவதில் நூலகத்தில் பணிபுரியும் நூலகத்துறையைச் சார்ந்த நூலகர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு பள்ளியிலும் அந்த பள்ளிகளில் நூலக கல்வியும் முன்னெடுப்பதற்காக நியமிக்கப்படும் நூலகர்கள் வாரம் முழுவதும் தினமும் நூலகங்களுக்கு வருகை தரும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு நூலக கல்வியில் உறுதுணையாக இருந்து வழிநடத்துவது அவர்களது முதன்மை பணியாக இருக்க வேண்டும். இந்த மாணவ மாணவியருடைய நூலக வருகை பதிவேடு பராமரித்து அந்த சம்பந்தப்பட்ட பள்ளிக்கு அளிப்பது அந்த மாணவ மாணவியர்களை மற்ற பள்ளி பாடத்திட்டத்தோடு நடத்தப்படும் நூலக கல்வி தேர்வுக்கு தயார் செய்வது மற்றும் அந்த குறிப்பிட்ட மாணவ மாணவிகளின் நூலக கல்வி தேர்வு விடைத்தாள்களை திருத்தி மதிப்பெண் அளிப்பது ஆகிய பிற பணிகள் இவர்களது பொறுப்பில் அளிக்கப்பட வேண்டும்.

8. இவ்வாறு 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை நூலக கல்வியை பயிலும் மாணவ மாணவியருக்கு அவர்களுடைய சுய அறிவை வளர்க்கும் விதமாகவும், பொது அறிவை வளர்க்கும் விதமாகவும், பகுத்தறிவு வளர்க்கும் விதமாகவும் மற்றும் வணிக, கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவ, வான்வெளி அணு சக்தி அறிவை வளர்க்கும் விதமாகவும் மேலும் சரித்திர, புவியியல், அரசியல் பற்றிய அறிவினை பெரும் விதமாகவும், அரசு பொது நூலகங்களில் தமிழ்நாட்டின் டாக்டர் திரு. ரங்கநாதன் கோலன்
   பகுப்பு முறையிலும் மற்றும் அமெரிக்காவின் டேவே பகுப்பு முறையிலும் வகுக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. நூல்களின் பிரிவுகளில் எந்த பிரிவுகளில் அடங்கியுள்ள நூல்கள் 6 -12 வகுப்பு வரை உள்ள மாணவ மாணவருடைய கல்வி நிலைக்கு ஏற்புடையதாக நூல்களை அந்த மாணவ மாணவர்கள் தேர்ந்தெடுத்து படிக்கும் புதிதாக நியமிக்கப்படும் இந்த நூலகர்கள்

வழிகாட்டிகளாக அமைந்திடல் வேண்டும். அதற்கு ஏற்ற சிறப்பு பயிற்சியை தகுந்த கல்வியாளர்கள் குழுவைக் கொண்டு வழங்கிட வேண்டும். நூலகங்களில் இருப்பில் உள்ள தமிழ் நூல்களையும் மேலும் புதிதாக தேவைக்கேற்ப அவ்வப்போது மேலும் சேர்க்கப்படும் நூல்கள் அத்தனையும் நூலக கல்வி பாடத்திட்டத்தின் கீழ் இந்த மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கக்கூடிய நூல்களாக நிர்ணயம் செய்திடல் வேண்டும். இந்த நூலக கல்வியின் தேவைக்கு தகுந்தார் போல பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து விதமான நூல்களையும் அவர்களின் ஒவ்வொரு நூலும் தேவைக்கு தகுந்த பிரதிகள் கொண்டதாக உருவாக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

9. **மற்றிலும் இந்த மாணவ மாணவியர் பெரும் கூட்டத்திற்கு, சுய முன்னேற்றத்திற்கு அவர்களது குடும்ப, சமுதாய நாட்டின் முன்னேற்றத்திற்கு, வணிக, கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவ, வான்வெளி அணு சக்தி போன்ற துறைகளின் பெரும் முன்னேற்றத்திற்கு ஒரு துளி அளவேனும் பயன்பாடு இல்லாத இதிகாசங்கள், புராணங்கள், இந்து சமய நூல்கள் மற்றும் பிற சமய நூல்கள் இவர்களுக்கான நூலக கல்வியில் சிறிது அளவேனும் சேர்த்திட கூடாது இதனை தந்தை பெரியார் 1920 முதல் 1973 வரையிலான 50 வருடத்திற்கும் மேற்பட்ட காலகட்டத்தில் பேசியும், எழுதியும், செயல்பட்டும் தமிழ் சமுதாயத்திற்கும், உலக சமுதாயத்திற்கும் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துக்காட்டிருக்கிறார்.**

12 ஆம் வகுப்பிற்கு மேல் தொழிற்கல்வி, பல் நுணுக்க தொழில்நுட்பக் கல்வி, இளங்கலை பொறியியல் பட்டய கல்வி, கலை மற்றும் அறிவியல்

இளங்கலை பட்டயக் கல்வி கற்கும் மாணவ மாணவியர்கள் மாதம் ஒரு நாள் நூலகம் சென்று குறைந்தபட்சம் 5 மணி நேரம் நூலக கல்வியை மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட வேண்டும். அரசு நூலகங்களில் பணிபுரியும் நூலகர்கள் இத்தகைய மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் இருந்து நூலக கல்வி மேற்கொள்வதிலும், நூலக கல்விக்கான தேர்வு பாடங்கள் தயார் செய்வதற்கு அத்துணை விதமான தேவைகளையும் அளித்திட வேண்டிய அனைத்து பணிகளையும் செய்திட தமிழ்நாடு அரசு நூலக நூலகர்களை தயார் படுத்திட வேண்டும்.

தொழிற்கல்வி, பல் நுணுக்க தொழில்நுட்ப கல்வி, இளங்கலை பொறியியல் பட்டய கல்வி, கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டய கல்வி ஆகிய கல்விகளை பயிற்றுவிக்கும் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கைகளின் அடிப்படையிலும், அங்கு பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு பொது நூலகங்களின் அந்த அந்த கல்லூரிகளுக்கு அருகாமையில் உள்ள பொது நூலகங்களுக்கு மாதத்தின் 30 நாட்களில் ஒரு நாளுக்கு எத்துணை கல்லூரி, எத்தனை மாணவர்கள் எந்தெந்த நூலகங்களுக்கு செல்ல வேண்டும் பகுப்பாய்வு செய்து அட்டவணை தயார் செய்து நிர்ணயம் செய்திடல் வேண்டும். நூலக கல்விக்காக மாதத்தின் ஒரு நாள் தேர்ந்தெடுக்கப்படும் குறிப்பிட்ட கல்லூரிகளில், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு அந்த குறிப்பிட்ட நாள் நூலக கல்விக்கான விடுமுறை நாளாக அறிவிக்கப்படுவதற்கான முறையான அட்டவணை தயார் செய்திட வேண்டும்.

இணைய தரவுகளின் படி தொழிற்கல்வி, பல் நுணுக்க தொழில்நுட்பக் கல்வி, இளங்களை பொறியியல் பட்டய கல்வி, கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டைய கல்வி பயிலும் மாணவ மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 24 லட்சம் என்று எடுத்துக் கொண்டால் மாதத்தின் ஒரு நாளுக்கு என நூலக கல்விக்காக இந்த மாணவ மாணவிகளை பங்கீடு செய்தால் ஒரு நாளைக்கு 80 ஆயிரம் மாணவ மாணவியர் என்ற எண்ணிக்கையில்

இருக்கும் இந்த 80 ஆயிரம் மாணவ மாணவியர்களை தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு பொது நூலகங்களுக்கு பங்கீடு

செய்தால் ஒரு நூலகத்திற்கு 17 பேர் என்ற எண்ணிக்கையில் வருகிறார்கள்.

**நடைமுறை விதி 3:**

மேற் சொன்ன அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளி கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் கூட்டத்திலிருந்து அரசு பொதுநூலகங்களுக்கு ஒரு நாளைக்கு மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆய்வு குறிப்புகளின் படி ஒரு நூலகத்திற்கு வருகை தரும் மாணவ மாணவியர் தோராயமாக ஒரு நாளைக்கு 215 வரை இருக்க வாய்ப்புள்ளது மற்றும் பள்ளி கல்விக்கு மேல் உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர் கூட்டத்திலிருந்து அரசு பொது நூலகங்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு நூலகத்திற்கு வருகை தரும் மாணவ மாணவியர் எண்ணிக்கை தோராயமாக மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆய்வுக் குறிப்புகளின் படி ஒரு நாளைக்கு 17 பேர் என்று எண்ணிக்கை வரை இருக்க வாய்ப்புள்ளது. ஆகவே அனைத்து அரசு பொது நூலகங்கள், கிராம நூலகங்கள், கிளை நூலகங்கள், மாவட்ட மைய நூலகங்கள் ஆகியவற்றில் இவ்வாறு புதிய நூலக கல்வி பாடமான **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான திட்டத்தின் கீழ் தினம் வருகை தரும் இளந்தலைமுறை மாணவ மாணவியரின் எண்ணிக்கை 232 ஆக இருக்க வாய்ப்புள்ளது. இந்த திட்டத்தின் அடிப்படையில் தினமும் அரசு பொது நூலகங்களுக்கு வருகை தரும் 232 மாணவ மாணவியருக்கு இடவசதியும், இருக்கை வசதியும் ஏற்பாடு செய்வதற்கு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வழி வகைகளை உருவாக்கிட வேண்டும். மேலும் இந்த ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள திட்ட முன்மாதிரி வடிவங்களின்படி 30-60 வயதிற்கு உட்பட்டவர்கள், 60 வயதிற்கு மேற்பட்ட மக்கள் தொகையில் தினமும் எத்துனை பேர் சராசரி ஒரு நூலகத்திற்கு வருகை தர வாய்ப்புள்ளது என்ற எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக்கொண்டு அதாவது அரசு நூலகங்களுக்கு வருகை தரும் அத்துணை பேருக்கும் இட வசதி, இருக்கை வசதி ஆகியவற்றை ஏற்படுத்தி தருவதற்கான திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்திட வேண்டும். மேலும் மாநில ஒன்றிய அரசுகளின் வேலைகளில் சேர்வதற்கான தகுதி தேர்வுகளை எழுத

தங்களை தயார்படுத்திக் கொள்வதற்காக அரசு நூலகங்களுக்கு வருகை தரும் இளந்த தலைமுறை எண்ணிக்கையும், ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்வதற்காக நூலகங்களுக்கு வருகை தரும் இளந்தலைமுறை கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்குரிய அத்தனை வசதிகளையும் தொடர்ந்து செய்து தர வேண்டியது நூலகக் கல்வியின் கடப்பாடாக இருக்கிறது. சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் போல ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரிய நூலகங்கள் அமைத்திடல் வேண்டும். இப்பொழுது இருக்கும் மாவட்ட மைய நூலகங்களை திறம்பட சீர்படுத்தி அமைத்திடல் வேண்டும். கிளை நூலகங்கள், கிராம நூலகங்கள் திறம்பட சீர்திருத்தி அமைத்திடல் வேண்டும். பள்ளிகளுக்கு வெகு தொலைவில் இருக்கும் நூலகங்களை பள்ளிகளுக்கு அருகாமையில் மாற்றி அமைத்திட வேண்டும். மேலும் தேவைக்கு ஏற்ப புதிய நூலகங்களை பள்ளி, கல்லூரிகளுக்கு அருகாமையில் அமைத்திட வேண்டும். கிராம நூலகங்கள், கிளை நூலகங்கள், மாவட்ட மைய நூலகங்களில் பணிபுரியும் நூலகர்களின் எண்ணிக்கை, அளவை பெரிய அளவில் உயர்த்திடப்பட வேண்டும். இன்று உலக நாடுகளில் நூலகங்களில் நடைமுறையில் உள்ள அத்தனை தொழில்நுட்ப அம்சங்களும் தமிழ்நாடு அரசு பொது நூலகங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பள்ளி படிப்புக்கு மேல் உயர்நிலை கல்வி பயிலும் மாணவர்கள், ஆராய்ச்சி கல்வி மேற்கொள்ளும் மாணவர்கள், மாநில மத்திய அரசு பணிக்கு தயார் செய்யும் மாணவர்கள் ஆகியோருக்கு இணைய வழி நூல்கள் பெறும் உதவியாக இருந்து துணை புரிகின்றன. ஆயினும் இவர்களின் பெரும்பான்மையானவர்கள் இணைய வழி நூல்களை தாங்கள் சம்பந்தப்பட்ட, தேவைப்படும் பாடங்களில் குறிப்பெடுத்துக் கொள்வதற்கும், சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதற்கு மட்டுமே இணைய வழி நூல்கள், நூலகங்கள் பயன்படுவதாக பெரும்பான்மையானவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். பெரும்பாலான அளவில் அச்சிடப்பட்ட புத்தகங்களின் தான் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட பல்வேறு துறை சம்பந்தப்பட்ட பாடங்களை படித்து தேர்ச்சி பெறுவதற்கு உறுதுணையாக இருக்கின்றன என்று பெரும்பாலான மாணவ மாணவியர் கருத்து தெரிவித்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக தந்தை பெரியாரின் 50 வருட கால பேச்சுக்கள், எழுத்துக்கள் அடங்கிய திரு. கவுதமன் எழுதிய நூல் தொகுப்பு 5 பாகங்கள், 3,000த்க்கும் அதிகமான பக்கங்களுடன் உள்ளது. இதனை இணையம் வழியாக 3,000 பக்கங்களையும் படித்து, அறிந்து கொள்வது என்பது எவராலும் முடியாத காரியம் ஆகும். இதே போன்று தான் அனைத்து விதமான கணித, வணிக, விஞ்ஞான தொழில்நுட்ப, மருத்துவ, வான்வெளி அணுசக்தி, சரித்திர புவியியல், அரசியல் பற்றிய எண்ணற்ற அறிஞர்கள், மேதைகள், விஞ்ஞானிகளின் நூல்கள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பக்கங்களாக உடையவையாக உள்ளன. இத்தகைய பல்வேறு துறை சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பக்கங்களை உடைய ஒவ்வொரு நூலையும் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியர் இணையம் வழியாக படித்து தேர்ச்சி பெறுவது என்பது நடைமுறை சாத்தியத்திற்கு அப்பாற்பட்டது. இத்தகைய ஆயிரக்கணக்கான நூல்கள் அனைத்துமே அச்சிடப்பட்ட புத்தக வடிவில் கிடைக்கப்பெறுவது. இவர்களின் முதன்மையான தேவையாக இருக்கிறது.

எனவே அசுர வேகத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப காலத்தில் பல்வேறு துறைகளின் கல்வி சம்பந்தப்பட்ட, அச்சிடப்பட்ட நூல்களை மேலும் மேலும் சேர்த்து, ஏற்கனவே இருப்பில் உள்ள கோடிக்கணக்கான நூல்களோடு இருப்பில் வைத்து பாதுகாக்க வேண்டியது நூலகங்களுடைய பெரும் கடமையாக இருக்கிறது. மேலும் அதே நேரம் மாநில மத்திய அரசு பணிகளுக்கான தேர்வுகளை எழுத தங்களை தயார் செய்து கொள்ளும் இளைய தலைமுறையினர், ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ளும் மாணவர்கள் மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்த நூலகங்களில் குறிப்பிட்ட பகுதிகளை தங்கள் நினைத்த நேரத்தில் பார்த்து சந்தேகங்களின் நிவர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள், மேலும் பல்வேறு உடனடி பயன்பாடுகளுக்காக இணையத்தை அணுகும் இளைய தலைமுறையினர், நடுத்தர வயது முதிர்ந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் லட்சக்கணக்கில் பெருகி வருவது இயல்பாக இருக்கிறது. இத்தகைய பல்வேறு தரப்பட்ட மக்களையும், அவர்களுடைய தேவைகளையும் கண்டறிந்து அதற்கேற்றவாறு தேவைப்படும் நூலகங்களின் உள்ள அனைத்து நூல்களையும் இணையத்தில் பதிவேற்றுவது என்பது நூலகங்களின் இடையறாது தொடர்ந்த முக்கிய பணியாக இன்றைய தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவது பாராட்டுதலுக்குரிய பெருமைப்படும் விசயமாகும்.

மேலும் இந்த இணைய நூலக சேவை விசயத்தில் பல்வேறு உள்ளார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு காலத்தில் தேவைக்கேற்ப, மக்களின் தேவைக்கேற்ப மிகுந்த அளவில் இணைய சேவையை வலுப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆகவே நூலகங்களும், நூல்களும் என்றும் அழிந்துபடாது, வளர்ந்து, வாழ்ந்து கொண்டே இருக்க வேண்டியது அடிப்படை அத்தியாவசிய தேவையாக இருக்கிறது. நூலகம் ஒரு வளரும் உயிரினம் என்று நூலக விதிகளின் ஒன்றாக கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

**“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான அடுத்து ஐந்து ஆண்டுக்கான திட்டவரைவுகளை முழுமையாக தீட்டி அதற்குரிய நிதி ஆதாரங்களை ஒதுக்குவதில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய மிக முக்கிய கடமைகளாக அதி அவசர சூழல் நம்மை சுற்றி சூழ்ந்துள்ளது கடந்த 30 வருடங்களில் நாம் தமிழ் மக்கள் சமுதாயம் நமக்கு நாமே இத்தகைய சூழலை உருவாக்கி வைத்திருக்கின்றோம் என்பதை தமிழ் பெருமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசுக்கும் மெத்தப் பணிவுடன் கவனத்திற்கு கொண்டு வந்து உணர்த்தி தக்க

உயிர்காக்கும் நடவடிக்கைகளுக்கு இணையான முன்னெடுப்புகளை முன்னெடுக்க ஆயத்தப்படுத்துவதே இந்த ஆய்வறிக்கையின் நோக்கமாக உணர்ந்திருக்கிறேன்.

**தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் கடந்த காலங்களில் பெரும் அயராத தொடர்ந்த உழைப்பினை நல்கி தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தளராத வாழ்வளிக்க நீண்ட கால போராட்டங்களை முன்னெடுத்து தங்கள் வாழ்நாள் முழுவதையும் தமிழுக்கும், தமிழருக்கும் அர்ப்பணித்தார்கள். அவர்களது வழியில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழை செழுமைப்படுத்தி, தமிழரை வளப்படுத்தும் எண்ணற்ற திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.**

இத்தகு சூழலில் கடந்த 30 ஆண்டுகளில் உலகமயமாதல் மூலமாகவும், ஆங்கில மொழி வழி கல்வியின் காரணமாகவும், விஞ்ஞான வளர்ச்சியின் வடிவங்களான அலைபேசி, இணைய சேவை, வண்ண தொலைக்காட்சி பெட்டி, திரை உலகின் அசுர வளர்ச்சி பல்வேறு வகைப்பட்ட எண்ணிலடங்கா கேளிக்கை அம்சங்கள் தமிழ்நாடு மக்கள் சமுதாயத்தின் மனநிலையிலும், செயல்பாடுகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய நூலகங்கள், நூலக கல்வியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது என்பதே இந்த ஆய்வறிக்கையின் சாரம்சமாகும். இந்த அசாதாரண தீய நிகழ்வினால் நம் தாய்மொழி தமிழின் வளர்ச்சியை, எழுச்சியை தடுத்து நிறுத்திடவும், இருப்பையே கேள்விக்குறியாக்கிடவும், மாயவலை பின்னப்படுவதை இந்த ஆய்வறிகையில் தகுந்த தரவுகளோடு, விவரங்களோடு சமர்ப்பித்து உள்ளேன்.

**தமிழ் மீதும், தமிழ் மக்கள் மீதும் பேரன்பு கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த ஆய்வறிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்டு தகுந்த தமிழாய்ந்த, தகைமை வாய்ந்த அறிஞர் குழுவினை அமைத்து இந்த ஆய்வறிக்கையின் உள்ளார்ந்த விவரங்களை ஆய்ந்தறிந்து “அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான **அத்துணை முன்னெடுப்புகளையும் மேற்கொள்வார் என்று முழு மனதுடன் நம்புகிறேன். பணிவுடன் இந்த ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.**

**“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான தமிழ் சமுதாயம் 21ம் நூற்றாண்டில் மட்டுமல்லாது பின்வரும் எல்லா நூற்றாண்டுகளிளும் உயர்ந்துதோங்கி வாழ்ந்திட நூலக கல்வியே உயர்ந்த கல்வி என்று மானுடம் போற்றும் மாமேதை அம்பேத்கர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியினை இன்றய இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் வாழ்க்கை முறையாக அமைத்திட இந்த ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள திட்ட வடிவங்களை சட்ட வடிவங்களாக உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டியது தமிழ்நாடு அரசின் தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

**எனது கடிதம்**

அன்புள்ளம் கொண்ட இனிய தமிழ் பெருமக்கள் அனைவருக்கும், எனது ஆசான், வழிகாட்டி, உற்ற நண்பர், மூத்த தோழர், தகைசால் தமிழர், அய்யா நல்லகண்ணு அவர்களுக்கும், தமிழ் தாயின் தலைமகன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது தமிழ் வீர வணக்கங்கள். “தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று பாடி தமிழ் வளர்த்த பாவேந்தர் பாரதிதாசனும், தமிழை தங்களின் உயிர்மூச்சாக கொண்டு வாழ்ந்த தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களும் கட்டி காத்த நம் தமிழ் அழிந்து பட விடுவோமோ? தொல்காப்பியரும், திருவள்ளுவரும், அகத்தியரும், ஔவையாரும், நக்கீரனும், இளங்கோவடிகளும், புரட்சிக்கவி பாரதியாரும் இன்னும் எண்ணற்ற ஆயிரம், ஆயிரம் தமிழ் கவிஞர்களும், பாவாணர்களும், தமிழ் அறிஞர்களும் வளர்த்திட்ட நம் வாழ்வின் உயர்வுக்கு வானான எழில்வான் தமிழை நம் கண் முன் வீழ்ந்து வீணாவதை தடுக்க தவறிய வீணர்களாகி விடுவோமோ?

தமிழ் அழிந்துபடும்! தமிழர் கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு அழிந்து படும், தமிழ் நூல்கள், பத்திரிகைகள்,தமிழ் எழுத்தாளர்கள் தமிழ் மொழி எழுத்து வடிவம் அழிந்து, சொல் வடிவமும் சிதைக்கப்பட்டு வெறும் பேச்சு மொழியாக பிறமொழி கலப்புடன் கூடிய வேற்று மொழியாக பிறழ்ந்து பிழைத்துக் கொண்டிருக்கும்! இந்த கொடுமையான துயர நிகழ்வு, இழிநிலை நம் தமிழ் மொழிக்கு இன்னும் 500, 1000 வருடங்களில் வரும் என்று சொல்ல வரவில்லை. இனிய தமிழ் பெருமக்களே இன்னும் 30 ஆண்டுகளில் இந்த இழிநிலை நம் தமிழ் மொழிக்கு, தமிழ் சமுதாயத்திற்கு ஏற்படும் இதுவே எமது இரண்டு ஆண்டு காலமாக தமிழ்நாட்டின் மாவட்டங்கள் தோறும் சென்று பள்ளி மாணவர்கள், தலைமை ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், வங்கி மேலாளர்கள், எழுத்தாளர்கள், தமிழ் நூல் பிரசுரகர்த்தாகள், தமிழ் பெருமக்கள் ஆகியோரை சந்தித்து கிடைக்கப்பெற்ற கருத்தாங்களின் மூலமாகவும், சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை கன்னிமாரா நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள், கிராம நூலகங்கள் ஆகியவற்றில் நேரில் சென்று மேற்கொண்ட கள ஆய்வின் மூலமாகவும் கிடைத்த தெளிவு.

“யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்றார் பாரதியார்.

“தமிழ் எங்கள் உயிருக்கு நேர், எங்கள் வாழ்வுக்கு நிரூமித்த ஊர் என்றார் பாரதிதாசன்.

“பாராத பயிரும் கெடும்” என்ற ஔவை வாக்கு போல நம் மொழி தமிழ் மொழி அழிந்து படும் நாள் கண்ணுக்கு கெட்டிய தொலைவில் வந்துவிட்டது.

கடந்த 30 ஆண்டுகளில் நூலகங்களும், நூலக கல்வியும், தமிழ் மொழி வளமும் சிறிது சிறிதாக குன்றி பாழ்பட்டு வருவதை உணராது கவனியாது, தமிழும்- தமிழ் சமுதாயமும் அழிவுபாதையில் துரித சக்தியில் சென்றிட ஆவன செய்து வருகின்றோம்.துணை நிற்கின்றோம் என்பது அபாயகரமான, வெட்கப்பட வேண்டிய, மன்னிக்க முடியாத வரலாற்றுப் பிழையாகும் தமிழ் மொழியையும் நம் தமிழ் சமுதாயத்தையும் பேணி பாதுகாத்து வளர்ச்சி பாதையில் அழைத்து செல்ல வேண்டிய கடமையுள்ள தமிழ் பெருமக்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்ளும், கல்வித்துறை அதிகாரிகளும், அமைச்சர்களும் கடந்த கால அரசாங்கங்களும் கடந்த 30 வருடங்களாக இந்த பேராபத்து நிகழ்ந்து வருவதை கவனிக்க, கணிக்க தவறியவர்களாக வாழ்ந்து வருகிறோம்.மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ் வளர்க்க, தமிழ் காக்க பிரம்மாண்டமான நூலகங்களை உருவாக்கித் தரும் பணிகளை செவ்வனே செய்து வரும் இதே காலகட்டத்தில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி வளம் ஆகியவை படிப்படியாக குன்றி அழிவின் விளிம்பில் உள்ளது என்பதை முழுவதும் அறிந்து உணர்ந்திருக்கும் தமிழ்நாடு அரசின் உயர்நிலை அதிகாரிகள் இந்த

ஆபத்தான அழிவு போக்கு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, உணர்த்தி, அறிஞர் குழு அமைத்து மாற்று வழிகளை கண்டறிந்து நூலகங்களும், நூலக கல்வியும், தமிழ் மொழியும் எழுச்சி பெறுவதற்கான வழிவகைகளை காணது, வளாதிருப்பது பெரும் வேதனை கொள்ளத்தக்க விசயமாகும்.

5000 க்கும் மேற்பட்ட தமிழ்நாடு அரசு நூலகங்களில் குவிந்து கிடக்கும் 8கோடிக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களில் சிலவற்றதைக் கூட படிக்க நாதியற்று அத்தனை நூல்களும் சவக்கிடங்கில் சவங்களாக, முடங்கி கிடப்பது கால மாற்றத்தினால், சமுதாய மன மாற்றத்தினால் ஏற்பட்டிருக்கும் தீராத அவமானமாக உருவாகியுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக ஆங்கில வழி பள்ளி கல்வி நம் தமிழ் சமுதாயம் மீது பற்றி படர்ந்துள்ளது. அலைபேசி, இணைய சேவை என்னும் புற்றுநோய் இளைய தலைமுறையினரின் அறிவு பலத்தை அழித்து கொண்டு இருக்கிறது. தமிழ் அறிவால் நிரம்ப வேண்டிய மாணவர்களின் மனம் சினிமா என்னும் மாய போதையினால் நிரம்பி வழிகிறது. புற்றிசலாகளாக கிளம்பி வரும் புதிய புதிய பொழுதுபோக்கு அம்சங்கள் இன்றைய இளைய தலைமுறையினரை கவர்ந்து இழுத்து அவர்களது சுய முன்னேற்றத்திற்கு கடிவாளம் இடுகின்றன. ஒரு சிறு சதவீத இளைய தலைமுறை மாணவர்களே இந்த ஆபத்துகளிலிருந்து தங்களை காத்துக் கொண்டு மேம்பட்ட நிலையை அடைய முடிகிறது.

இந்த காரணிகளால் காலம் காலமாக தமிழ் மொழியை பாதுகாத்து வரும், உயிர்மெய் கல்வியான நூலக கல்வியிலிருந்து இன்றைய இளைய தலைமுறை மாணவர்கள் முற்றிலும் வெளிச்சென்று விட்டார்கள். தமிழ் மொழி நூல்களை கற்று, தாய்மொழி தமிழில் வளம் பெற்றவர்களாக விளங்குவதில் பின்தங்கி விட்டார்கள். இது நம் தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றையின் அழிவின் ஆரம்ப நிலையல்ல அழிவின் விழிம்பு நிலை. அதுவுமல்லாது ஆங்கில மொழியின் எண்ணற்ற மேதைகள், அறிஞர்கள் நூல்களை கற்றறிந்து ஆங்கிலத்தில் மேம்பட்ட அறிவு வளத்தை பெருக்கிக் கொள்ளுவதிலும் பின் தங்கியவர்களாக பெருகி வருகிறார்கள். ஆய்வு படிப்புகளை மேற்கொள்ளும் முதுநிலை பட்டதாரி மாணவர்கள், மாநில, ஒன்றிய அரசாங்கத்தின் பல்வேறு துறை வேலைகளுக்கான அரசு தேர்வுகளுக்கு தங்களை தயார் செய்து கொள்ளும் இளைய தலைமுறையினர், I.A.S, I.P.S போன்ற தேர்வுகளுக்கு பயிலும் மாணவர்கள் ஆகியோருக்கு நாள் முழுவதும் இடவசதி அளித்து, அதற்கு தேவையான நூல்களை அளித்து அரசு நூலகங்கள் பணியாற்றி வருவது போற்றுதலுக்குரிய விசயமே.

ஆனால் இந்த பயன்பெறுபவர்கள் மிகச் சிறிய எண்ணிக்கையினரே இவர்கள் அரசு நூலகங்கள் குறிப்பாக மாவட்ட மைய நூலகங்களில் மட்டும் வருகை தருவதை கணக்குக்காட்டி அரசு நூலகங்கள் செயல்படுவது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி. இந்த அரசு உயர் அதிகாரிகள் அதனை தரவுகளாக தந்து தமிழக மக்களையும், தமிழ்நாடு தலைமை அமைச்சரையும் நம்ப வைத்து ஏமாற்றுவது என்பது வேதனைக்குரிய தலை குனிய வேண்டிய நாசகரமான செயலாகும். இந்த செயல் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் ஒட்டுமொத்தமாக குழி தோண்டுவதற்கு ஒப்பான செயலாகும்.

நூலகங்களின் சிதைவு என்பது தமிழ் மொழியின் சிதைவாகும். தமிழ் மொழியின் சிதைவு என்பது தமிழ் மொழி பேசும் மக்களின் அறிவுக்களஞ்சியம், தொன்மை பட்ட வரலாறு, நாகரீகம், கலை, இலக்கியம், பண்பாடு, கல்வி மற்றும் தமிழ் சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றிக்கு அழிவுக்கு வழிவகுக்கும் திசையற்ற கூட்டமாக தமிழ் சமுதாயம் மாறும் அவல நிலை ஏற்படும். ஒட்டுமொத்த தமிழ் மக்களின் தாயாக இயங்க வேண்டிய தமிழ்நாடு அரசும், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் தந்தையாக விளங்கி காக்க வேண்டிய தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், சரியான இந்த தருணத்தில் சமர்ப்பிக்கப்படும் இந்த ஆய்வறிக்கையின் தரவுகளை தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் நேர்ந்துள்ள அவல நிலையை

கவனத்தில் எடுத்துக் கொண்டு போர் கால அடிப்படையில் செயல்பட்டு நிகழ இருக்கும் பேரழிவை தடுத்து நிறுத்த வேண்டும்.

ஒருமுறை இந்தி எதிர்ப்பு, திணிப்பு போராட்ட களத்தில் தலைமகனாக நின்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில் கூறியது. "தமிழர் வீடுகளில் குழந்தைகள் தங்கள் தாய் தந்தையரை "அம்மா" என்றும் "அப்பா" என்றும் அழைக்கமாட்டார்கள், "மாதாச்சீ", "பிதாச்சீ" என்றுதான் அழைப்பார்கள். தமிழ் மொழி கல்விக்கூடங்களில் படிப்பதற்கும் ஆள் இருக்க மாட்டார்கள். அங்கொருவரும், இங்கொருவருமாக யாராவது புலவர்கள் தான் படித்துக் கொண்டிருப்பார்கள். பின்னர் அவர்களும் தமிழை படிப்பதால் பயனில்லை என்று கைவிட்டு விடுவார்கள். இறுதியில் பாரதி பாடியதை போன்று மெல்ல தமிழ் செத்து தான் போகும். அதன்பின் வழக்கொழிந்து போன "தமிழ் மொழியை அருங்காட்சியகத்தில் உள்ள ஏடுகளில் தான் காண முடியும்" கலைஞரின் இந்த அபாய எச்சரிக்கை. பேராசிரியர் அ. ராமசாமியின் "என்று முடியும் இந்த மொழிப்போர்" நூலில் காணக் கிடைத்தது. இந்தி மொழி ஆதிக்கத்தால் தமிழுக்கு இந்த நிலை வந்து விடுமோ? என்று கலைஞர் நமக்கு எடுத்துரைத்தது. அன்று தமிழை காத்திட பெரியாரும், அண்ணாவும்,கலைஞரும் தமிழர் பெரும் படை திரட்டி இந்தி ஆதிக்கத்தை விரட்டி அடித்து அழித்து ஒழித்தனர். அந்தோ! கலைஞர் கவலை கொண்ட இழிவு நிலை நாம் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொண்ட ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால் மிக நிச்சயமாக ஏற்பட்டு விடும் என்பது திண்ணமாக கண்முன் தெரிகிறது. ஆகவே ஆங்கில மொழியில் இன்றியமையாத தேவையினால் ஏற்படும் ஆங்கில மொழி ஆதிக்கத்தினாலும் மற்றும் இன்றைய தலைமுறை மக்களின் அலைபேசி, இணைய வசதி பயன்பாடுகளாலும், சினிமா மற்றும் எண்ணற்ற பொழுதுபோக்கு அம்சங்களாலும் பொருளாதார வசதி அடைவதே வாழ்வின் லட்சியம் என்ற நடைமுறை சிக்கலில் மாட்டி கொண்டுள்ள பெரும்பாலான தமிழ் சமுதாய மக்களாலும் நம் தமிழ் மொழிக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டு விடும் நிலை தூரத்தில் இல்லை என்னும் நிலை உருவாக்கி உள்ளதை தமிழ் பெருமக்களும், தமிழ்நாடு அரசு உணர்ந்து தெளிந்திட வேண்டும் என்பதே எனது இந்த ஆய்வினை முத்தாய்ப்பான வேண்டுகோளாக சமர்ப்பிக்கிறேன்.

தமிழ் இலக்கியங்களும், காப்பியங்களும், பாவாணர்களின் கவிதைகளும், எழுத்துலக அரசர்களின் புனைவுகளும், அறிவியலும், தொழில்நுட்பங்களும், வரலாறும், புவியியலும், உயிரியலும் இன்றும் மனித வாழ்க்கைக்கு தேவையான அனைத்து நூல்களும் குவிந்து கிடக்கும் பொக்கிஷ வளாகம் நூலகங்கள். அள்ள அள்ள குறையாத அறிவு வளம் தரும் அட்சய பாத்திரத்தின் உண்மை உருவகம் நூலகங்கள். தமிழ் நமக்கு உயிர். தமிழின் உயிர்நிலை இருப்பு நூலகங்கள். நூலகங்களில் மலையென உயர்ந்து குவிந்து கிடக்கும் தமிழ் நூல்கள் வாசிப்பாரற்று அழிந்துபட்டால் தமிழர் வரலாறு அழிந்துபடும். நம் தாய்மொழி செம்மொழி வளர்ச்சி குன்றி தேய்ந்து, தேய்ந்து அழியும் அபாயம் ஏற்படும். தமிழை என்றென்றும் இளமை உயிர்ப்புடன் வாழ வைக்கும் அருமருந்து நூலகங்கள். இந்த பூமி உள்ளளவும் தமிழ் வாழ்ந்திருக்க நூலகங்கள் வேண்டும் நூலகங்கள் உயிர்ப்புடன் வாழ்ந்து இருக்க வேண்டும். இருகாறும் நூலகங்களில் குவிந்துள்ள கோடிக்கணக்கான தமிழ் நூல்களும் இன்னும் வருடம் வருடம் வாங்கி குவித்து வரும் லட்சக்கணக்கான தமிழ் நூல்களும் நாட்டின் வாசிப்பு திறன் உள்ள 6.7 கோடி தமிழ் மக்களின் குறைந்தபட்ச 30 சதவீத அதாவது சும்மா 2 கோடி மக்கள் கைகளில் தவழ வேண்டும். அதாவது இன்றைய கவலைக்கிடமான 1000 பேருக்கு 2 பேர்தான் நூலகங்களில் உள்ள நூல்களை படிக்கின்றார்கள் என்கிற நிலை மாறி 1000 பேருக்கு 300 பேர் நூலகங்களில் உள்ள தமிழ் நூல்களை வாசிப்பவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். இத்தகைய 1000 க்கு 2 பேர் தான் அரசு நூலகங்களில் உள்ள தமிழ் நூல்களை வாசிப்பதில் அக்கறையும், ஆர்வமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலையில் இருந்து 1000 பேருக்கு குறைந்தபட்சம் 300 பேர் என்ற இலக்கினை அடைந்திட நாம் தமிழ் சமுதாயம்

தமிழ்நாடு அரசாங்கம் என்ன செய்திட வேண்டும்? அதுவுமால்லாமல் இந்த 1000 க்கு 2 பேர் தான் தமிழ் மொழி நூல்களை வாசிப்பதில் அக்கறை உள்ளவர்கள் என்று எனது ஆய்வின் மூலமாக கண்டறியப்பட்டதில் அந்த 2 பேரும் 1950, 1960, 1970, 1980, 1990 காலகட்டத்தில் பிறந்து வாழ்ந்து வரும் வயது முதிர்ந்தவர்களின் மக்கள் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் 21 ஆம் நூற்றாண்டின் பிறந்த இளைய தலைமுறை கூட்டத்தினரிடம் இன்றைய காலகட்டத்தில் நூலக கல்வியில் எள்முனையளவும் அக்கறையோ, ஆர்வமோ, பங்களிப்போ இல்லை என்பது மிக்க துயரகரமானது.

இந்த 21ம் நூற்றாண்டில் இளைய தலைமுறை கூட்டத்தினரை தமிழ் நூல்களை கற்பதில் ஆர்வமுள்ள, அக்கறையும் சமுதாயமாக உருவாக்கி, திறன் படுத்தி தமிழ் நூல்களை படித்து சமுதாய அறிவும், உலக அறிவும், பகுத்தறிவும், பொது அறிவும் பெற்றவர்களாக தங்களது கடப்பாடுகளை உணர்ந்து செயல்படும் செயல்வீரர்களாக ஆக்கிட தாம் என்னென்ன வழிவகைகளை, திட்டங்களை முனைப்புடன் முன்னெடுக்க வேண்டும் என்பதை எனது இந்த ஆய்வு அறிக்கை ஆழமாகவும், விரிவாகவும் ஆய்ந்துள்ளது. நம் தமிழ்நாட்டின் பொது நூலகங்கள் அழிவின் விளிம்பில் இருந்து மீட்டு புத்துயிர் கொடுத்து நாம் பைந்தமிழை பேணிக்காத்து வளர்த்திட என்றும் எதிர்வரும் காலம் யாவும் தமிழ் மொழி தன் நிலையில் குறைவுபடாது தழைத்தோங்கிட இன்றைய தமிழ் பெருமக்கள், கல்வியாளர்கள், தமிழ்நாடு அரசு என்னென்ன பணிகளை முன்னெடுத்திட வேண்டும் என்பதை பற்றிய உயிர் நல்முத்துக்கள் அடங்கிய செயல் குறிப்புகள் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தரப்பட்டுள்ளன. இந்த ஆய்வறிக்கையில் மாற்ற முடியாத விதிமுறைகளாக உருவமைக்கப்பட்டுள்ள தெளிவான மாதிரி வடிவங்களை தமிழ் பெருமக்கள் அனைவரின் கவனத்திற்கும், தகைசால் தமிழர் ஐயா நல்லகண்ணு அவர்களின் கவனத்திற்கும், தமிழ்த்தாயின் தலைமகன் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கனிவான பார்வைக்கும், கவனத்திற்கும் சமர்ப்பிக்கிறேன்.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் எனது இரண்டு ஆண்டு கால ஆய்வின் பயனாக கிடைத்த தரவுகள் வழியாக இருகாறும் என்ன நிகழ்ந்துள்ளது என்பது பற்றியும், அழிவின் விளிம்பு நிலையிலிருந்து நூலகங்களை, நூலக கல்வியை காப்பாற்றி புத்துயிர் அளித்து. **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான வழிவகைகளை, தமிழை வளப்படுத்தி தமிழ் மக்களை எஞ்ஞான்றும் வளங்கொழித்து வாழ்ந்திட செய்யும் வழிவகைகளை விரிவாக எனது ஆய்வறிக்கையின் வாயிலாக சமர்ப்பித்துள்ளேன். ஒரு தமிழனாக இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த எனது சிறிய பணியின் மூலமாக நான் தமிழனாக பிறந்ததின் வாழ்க்கை பயனை பெற்றதாக புளகாங்கிதம் அடைகிறேன்.

ஒட்டுமொத்த தமிழ் பெருமக்களுக்கும், தமிழ் இளைஞர் கூட்டத்திற்கும் தலை தாழ்ந்த பணிவுடன் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள அனைத்து கருத்தாக்கங்களும், அனைத்து திட்ட மாதிரிகளும், ஒட்டுமொத்த தமிழ் சமுதாய மக்களின் மனங்களை சென்றடைய வேண்டும் என்பதே எனது இந்த பேராவல். நம் தாய்மொழி தமிழ் உலக நாடுகளில் மற்ற மொழிகளுக்கும் மேம்பட்டதாக இலக்கியச் செறிவுடன், கலைச்செறிவுடன், நவீன, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலைகளை உள்ளடக்கியதாக என்றும் நிலைபெற்று உயர்ந்து வாழ்ந்திட வேண்டும். நம் தமிழ் மக்கள் உலகின் பிற நாடுகளின் மக்களிலும் மேம்பட்டவர்களாக உயர்ந்து என்றும் நிலைபெற்று வாழ்ந்திட வேண்டும் என்பது நம் அனைவரின் உள்ளார்ந்த, உணர்வு பூர்வமான மாற்ற முடியாத பேராவலான மன உணர்வு அல்லவா. பிரான்ஸ், ஜெர்மன், இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற மேலை நாடுகள் தங்கள் தாய் மொழியிலேயே அனைத்து கலை செல்வங்களை கொண்டு

திகழ்கின்றனர் என்பது நிதர்சனமான உண்மை அல்லவா. இந்த நாட்டு மக்கள் எல்லாம் தங்கள் தாய் மொழியையே அன்றி பிரிதோறும் மொழியை ஏறெடுத்தும் பார்க்காதவர்களாக, தங்கள் தாய் மொழியையே தங்கள் வாழ்வின் வழியாக பின்பற்றி எல்லா நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்வு வாழ்கின்றார்கள் அல்லவா. மற்றும் ரஷ்யா, சீனா போன்ற ஆசிய கண்டத்து பெருநாடுகளும் தங்கள் தாய்மொழி வழியிலேயே வாழ்ந்து, உயர்வடைந்து இருக்கின்றார்கள் அல்லவா. மேலும் எண்ணற்ற ஆசிய கண்டத்தின் நாடுகளும், மத்திய கிழக்கு நாடுகளும் தங்கள் தாய் மொழியை ஆதாரமாகக் கொண்டு முன்னேறி வருகின்றார்கள் அல்லவா.

பல்லாயிரம் ஆண்டு தொன்மையும், நாகரிகமும், வரலாறும், பண்பாடும் தன்னகத்தே கொண்ட நம் தாய்மொழி தமிழை இனிவரும் காலங்களில் என்றும் மாறாத வளமையுடன் நிலைத்து நின்று வாழ்ந்திட எனது இந்த ஆய்வறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள வழிவகைகளை, திட்டங்களை தளராத முயற்சியுடன் முன்னெடுக்க ஒன்று சேருங்கள் என்று தமிழின் பெயரால், தமிழ் தாயின் பெயரால் அறைக்கோல் விடுக்கின்றேன். இதற்கு அடித்தளமாக நூலகங்களையும், நூலக கல்வியையும் திறம்பட செயல்களை அனைவரும் இணைந்து முன்னெடுப்போம் வாருங்கள்.

இந்த ஆய்வறிக்கை கிடைக்க பெறும் ஒவ்வொரு தமிழ் பெரும் மகனும், ஒவ்வொரு தமிழ் பெரும் மகளும், தமிழக அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கும் மடல்களை எழுதிடுங்கள். கால வெள்ளத்தில் அழிந்துபடாமல், தொலைந்து போகாமல், நலன் குன்றாமல், வலிமை தேயாமல், காலத்தின் உள் நுழைந்து தொடரி நிகழ்வாக உயர்ந்து, உயர்ந்து நம் தமிழும், தமிழ் சமுதாயமும் நிலை நின்று வாழ்ந்திட எனது இந்த ஆய்வறிக்கையின் வழியிலேயே மாறாத விதியாக தமிழ்நாடு அரசின் கல்வி திட்டத்தில் “நூலக கல்வியை கட்டாய பாடத்திட்டம்” மற்றும் **“அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி”** பெறுவதற்கான விதிகளை உருவாக்கி சட்டம் இயற்றிட தொடர்ந்து மீண்டும், மீண்டும் மக்கள் எழுதி வலியுறுத்துங்கள்.

தமிழ் மேல் சத்தியம், தமிழ் தாய் மேல் சத்தியம் 21 ஆம் நூற்றாண்டில் மட்டுமல்லாது, எதிர்வரும் எல்லா நூற்றாண்டுகளிலும் நம் தமிழ் மொழி ஏற்றம் பெற்று, ஏற்றம் பெற்று, நிலை பெற்று வாழ்ந்திருக்கும். நம் தமிழ் மக்கள் எல்லா வகை உயர்வுடன் வளம் ஓங்கி, வளம் ஓங்கி அறிவு நலம் ஓங்கி வாழ்ந்திருப்பார்கள் என்பதே இந்த ஆய்வறிக்கையின் ஏற்றமிகு பயன்பாடு நிலையாக இருக்கும் என்பதை தமிழ் மக்கள் என்றும் அறிந்து உணர்வார்கள்.

நாடுகளுக்கிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறித்த அறிவியல் பூர்வமான ஆய்வறிக்கைகாண 2024 நோபல் பரிசு அமெரிக்க மசாசூசெட், பல்கலைக்கழக பேராசிரியர்கள் அசெமோக்லு, ஜான்சன், மற்றும் சிக்காகோ பல்கலைக்கழக பேராசிரியர் ராபின்சன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு தனி மனிதன் அல்லது சமுதாய பொருளாதாரத்தில் மேலோங்கி இருப்பதற்கோ அல்லது வறுமையில் சிக்கி பிச்சைக்காரர்களாக வாழ்வதற்கோ, அந்த தனி மனிதனோ, அந்த சமுதாயமோ காரணம் கிடையாது. அந்த தனி மனிதனையும், சமுதாயத்தையும் வழிநடத்தும் அரசியல், அரசியல்வாதிகள், அரசாங்கம், அரசாங்க அதிகாரிகள் இவர்களே அந்த தனி மனிதனின் மற்றும் சமுதாயத்தின் உயர்வுக்கோ, தாழ்வுகோ காரணமாகிறார்கள். இதுவே மேற்சொன்ன மூன்று பேராசிரியர்கள் நிரூபித்து இருக்கும் கொள்கை.

பள்ளிக்கல்வி மற்றும் உயர்நிலைக் கல்விகளோடு அதே காலகட்டத்தில் நூலக கல்வி என்னும் பகுத்தறிவு கல்வியை பெறக்கூடிய சூழ்நிலையில் தான் ஒரு மனிதன் பெரும் அறிவு வளம் மிகுந்தவனாக உயரிய பல்வேறு திறன்பாடுகளை பெற்றவனாக, பண்பாளனாக உயர்ந்து ஓங்கி வாழ முடியும் என்பதை **மாமேதை அண்ணல் அம்பேத்கர்**

**நமக்கு வாழ்ந்து காட்டி இருக்கின்றார். அவர் வாழ்ந்து காட்டிய அந்த உயர்ந்த வாழ்க்கை நெறியை பள்ளி மற்றும் உயர் கல்விகளை பயிலும் இன்றைய இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் வாழ்க்கை முறையாக அமைத்திட வேண்டியது** எதிர்காலத்தில் மேன்மேலும் உயர்ந்து பட்ட தமிழ் சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற விருப்பம் உள்ள, மனத்தகைமையுள்ள ஒவ்வொரு தமிழ் மகனின், தமிழ் மகளின் பெரும் கடப்பாடாக இருக்கிறது. **அதனினும் மிகுதியாக தமிழ்நாட்டின் அரசுக்கும், அதன் தலைமகனாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாமேதை அம்பேத்கர் வாழ்க்கை நெறியை பள்ளி மற்றும் உயர் கல்விகள் பயிலும் இளைய தலைமுறை மாணவ, மாணவிகளின் வாழ்க்கை முறையாக அமைத்து கொடுத்திட வேண்டிய பெரும் பொறுப்பும், கடப்பாடும் உள்ளதாகவே நான் கருதுகிறேன்.**

ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அன்னையான தமிழ்நாடு அரசுக்கும், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் தந்தையான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ் அன்னையின் ஒரு மகனாக, பணிவுடன் அன்புடன் வீரச்செரிவுடன் வேண்டுகோள் விடுகிறேன் **"அண்ணல் அம்பேத்கர் 21ஆம் நூற்றாண்டில் நூலகங்கள், நூலக கல்வி, தமிழ் மொழி மற்றும் இளைய தலைமுறையினர் எழுச்சி"** பெறுவதற்கான தமிழ் மொழி காத்திட, தமிழ் மக்கள் என்றும் நலமுடன் வாழ்ந்திட எனது ஆய்வறிக்கையின் அம்சங்களை, மேம்பட்ட, திறம்பட்ட அறிஞர் குழு அமைந்து ஆலோசனை செய்து நடைமுறைப்படுத்துங்கள் என வேண்டுகிறேன்.